இரண்டாம் பதிப்பு

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை - 20
பக்கங்கள் - 32

சுடர் 32 | கதிர் 95 | வள்ளுவர் ஆண்டு 2048 | மாசி 17 புதன்கிழமை 01.03.2017

## ஆசிரியரின் வீட்டில் 20 பவுண் நகைகள் பட்டப்பகலில் திருட்டு வடமராட்சியில் சம்பவம்

யாழ்ப்பாணம், மார்ச் 1
வடமராட்சி புலோலியில் உள்ள ஆசிரியரின் வீட்டில் நேற்றுப் பட்டப்பகலில் 20 பவுண் தங்க நகைகள் திருடப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர்.
ஆசிரியர் பாடசாலைக்குச் சென்றுவிட்டார். மந்திகை வைத்தியசாலையில் பணிபுரியும் அவரது மனைவி கடமைக்குச் சென்றுவிட்டார். பிள்ளைகள் பாடசாலைக்குச் சென்றுவிட்டனர். மதியம் வீடு திரும்பியபோது கதவு திறந்து பொருள்கள் வீசப்பட்ட நிலையில் காணப்பட்டன. உள்ளே சென்று பார்த்தபோது அலுமாரி உடைக்கப்பட்டு அதில் வைக்கப்பட்டி » 28

## பிலக்குடியிருப்பில் இன்று 42 ஏக்கர் காணி விடுவிப்பு

முகாமை நகர்த்துகிறது வான் படை



முல்லைத்தீவு, மார்ச் 1
பிலக்குடியிருப்பில் வான் படையினர் நிலை கொண்டுள்ள 42 ஏக்கர் காணியும் முல்லைத்தீவு » 28

பிலக்குடியிருப்பு மக்கள் உறுதி

## 54 ஏக்கர் காணிகளும் விடுவிக்கவேண்டும்

அது வரை போராட்டம் தொடரும்

முல்லைத்தீவு, மார்ச் 1
'காணிக்குள் கால் பதிக்கும் வரையில் போராட்டக் களத்திலிருந்து வெளியேற மாட்டோம். எமது 54 ஏக்கர் காணிகளும் விடுவிக்க வேண்டும்'
இவ்வாறு பிலக்குடியிருப்பு மக்கள் நேற்றுத் » 28

முச்சந்தி முரளி



ஒவ்வொரு முறையும் வாக்குறுதியளிப்பதுதான் உவருக்கு வேலையாப் போச்சு...



காணிகளை விடுவிக்கக் கோரி

## மைத்திரியின் செயலகம் முன்பாகக் கவனவீர்ப்பு

வடக்கிலிருந்து சென்று முன்னெடுப்பு

கொழும்பு, மார்ச் 1
வடக்கில் படையினரால் கையகப்படுத்தப்பட்டுள்ள பொதுமக்களின் காணிகளை உடனடியாக விடுவிக்குமாறு கோரி வடக்கில் போராட்டங்கள் இடம்பெற்று வரும் நிலையில், தலைநகரிலுள்ள அரச தலைவர் செயலகத்துக்கு முன்பாகவும் கவனவீர்ப்புப் போராட்டமொன்று நேற்று நடத்தப்பட்டது.
வவுனியா, முல்லைத்தீவு உள்ளிட்ட வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த மக்களால் இந்தப் போராட்டம் நேற்று முற்பகல் நடத்தப்பட்டது.
"மக்களுக்கு அவர்களது சொந்த நிலங்களே தேவையே தவிர, இராணுவப் படை முகாம்கள் அல்ல", "எமது நிலம் எமக்கு வேண்டும்" உள்ளிட்ட வாச » 28

# நல்லிணக்கத்தை அடைவோம் என்பதில் உறுதி

ஐ.நா. மனித உரிமைகள் சபையில் அமைச்சர் மங்கள திட்டவட்டம்

ஜெனிவா, மார்ச் 1
சகல தரப்பினருடைய ஆதரவுடன் நல்லிணக்கத்தில் இலங்கை வெற்றி அடையும் என்று நம்புவதாக அயலுறவுத் துறை அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்தார்.
ஐ.நா. மனித உரிமைகள் சபையின் கூட்டத் தொடரில் நேற்றைய தினம் உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். ஐ.நா. தீர்மானத்தை நடைமுறைப்படுத்த இலங்கை கால அவகாசம் கோருவது தொடர்பில் நேற்றைய ஆரம்ப உரையில் மங்கள சமரவீர » 28






## தலைமை நீதியரசர் பிரியசாத் டெப்

அரசமைப்பு சபை பரிந்துரை

கொழும்பு, மார்ச் 1
புதிய தலைமை நீதியரசராக பிரியசாத் டெப்பை நியமிக்குமாறு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவுக்கு அரசமைப்புச் சபை பரிந்துரை வழங்கியது. நாட்டின் 45ஆவது தலைமை நீதியரசர் பதவியை ஏற்குமாறு பிரியசாத் டெப்புக்கு அரச தலைவர் இந்த வாரம் அழைப்பு விடுப்பார் என்று தெரிவிக்கப்பட்டது. தலைமை » 04

போராட்டத்தை நிறுத்தும்

## அதிகாரிகளின் முயற்சிக்கு புதுக்குடியிருப்பு மக்கள் இடம்கொடுக்கவில்லை



முல்லைத்தீவு, மார்ச் 1
'எங்களுடைய காணிகளுக்குச் செல்லும் வரை நாங்கள் ஆரம்பித்த அறவழிப் போராட்டம் முன்னெடுக்கப்படும்'
இவ்வாறு புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்துக்கு முன் » 28

## வடக்கு—கிழக்கு மீளிணைப்பை மறந்துவிட்டனர் தமிழ் மக்கள்

அமைச்சர் கிரியல்ல கூறுகிறார்

கொழும்பு, மார்ச் 1
வடக்கு கிழக்கு மாகாணங்களை மீளிணைக்கவேண்டும் என்ற கோரிக்கையைத் தமிழ் மக்கள் முழுமையாகக் கைவிட்டுள்ளனர் என்று அமைச்சரும், சபை முதல்வருமான லக்ஸ்மன் கிரியல்ல தெரி » 27

வடக்கின் குடிதண்ணீர்ப் பிரச்சினை ஆய்வுகள் இன்னும் முடியவில்லை

## முதல்வர் விக்கி திடீர் அறிவிப்பு



யாழ்ப்பாணம், மார்ச் 1
வடக்கின் குடிதண்ணீர்ப் பிரச்சினை தொடர்பில் நிபுணர் குழுக்களின் ஆய்வுகள் தொடர்ந்து கொண்டிருப்பதாக வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் திடீரென அறிவித்துள்ளார். வடக்கு மாகாண » 27

## புதிய அரசமைப்பின் தேவை குறித்து மக்களிடம் தெளிவுபடுத்தவேண்டும்

சிவில் அமைப்புகளிடம் ரணில் வலியுறுத்து

கொழும்பு, மார்ச் 1
புதிய அரசமைப்பின் தேவை மற்றும் அதன் முக்கியத்துவம் தொடர்பில் நாட்டு மக்களிடம் சிவில் அமைப்புகள் தெளிவுபடுத்த வேண்டும் என்று அந்த அமைப்புகளிடம் நேரில் வலியுறுத்தினார் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க.
அலரி மாளிகையில் சிவில் அமைப்புகளுக்கும், தலைமை அமைச்சருக்கும் இடையேயான சந்திப்பு நேற்று முன்தினம் மாலை நடைபெற்றது. இந்தச் சந்திப்பில் இருபதுக்கும் அதிகமான சிவில் அமைப்புக்களைச் சேர்ந்த 150 பேர் வரை கலந்து கொண்டனர். அரசமைப்புத் தொடர்பில் சிவில் அமைப்புகளுக்கு விளக்கமளிக்கும் முகமாக மேற்படி சந்திப்பை தலைமை » 04

## இழுவைமடி மீன்பிடியில் ஈடுபடுவோருக்குச் சிறை

சட்ட வரைவு வர்த்தமானியில்

யாழ்ப்பாணம், மார்ச் 1
இழுவைமடியைப் பயன்படுத்தி மீன்பிடியில் ஈடுபடுபவர்களுக்கு சிறைத் தண்டனை விதிக்கும் வகையில், கொண்டு வரப்பட்ட சட்டவரைவு வர்த்தமானியில் வெளியிடப்பட்டது. நாடாளுமன்றத்தின் அங்கீகாரம் கிடைத்த பின்னர் சட்டம் நடைமுறைக்கு வரும் என்று தெரிவிக்கப்பட்டது.
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனால் கடற்றொழில் நீர்வாழ் உயிரின வளங்கள் (திருத்த) தனிநபர் சட்டவரைவு நாடாளுமன்றில் கடந்த ஆண்டு » 04

## விடயத்தைத் திசை திருப்ப முதல்வர் ஏன் முயல்கிறார்?

வடக்கு எதிர்க்கட்சித் தலைவர் கேள்வி

யாழ்ப்பாணம், மார்ச் 1
நியதிச் சட்டங்கள் பற்றிப் பேசும்போது சிரித்துக் கொண்டிருந்தவர் இப்போது குடிதண்ணீர்ப் பிரச்சினையைப் பற்றி விவாதிக்கக் கேட்கும்போது நியதிச் சட்டத்தைப் பற்றிப் பேசுகின்றார். இவ்வாறு » 28

## சாலை விபத்தில் காயமடைந்த குடும்பத்தலைவர் நேற்றுச் சாவு

யாழ்ப்பாணம், மார்ச். 1
சாலையால் சைக்கிளில் பயணித்த தம்பதிகளை மோட்டார் சைக்கிளில் சென்றவர்கள் மோதியதில் அவர்கள் படுகாயமடைந்தனர். வைத்தியசாலையில் அவர்கள் சேர்க்கப்பட்டனர். எனினும் குடும்பத்தலைவர் சிகிச்சை பயனளிக்காது உயிரிழந்தார் என்று விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.
காங்கேசன்துறை சாலையில் நாச்சிமார் கோயிலடியில் நேற்றுமுன்தினம் மதியம் விபத்து இடம்பெற்றது. பழைய பூங்கா சாலை யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த அலோசியல் நவரட்ணம் (வயது - 71) என்பவரே உயிரிழந்தார். அவருடன் சைக்கிளில் பயணித்த மனைவி யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.
அவர்களை மோட்டார் சைக்கிளால் மோதியதாகக் குற்றஞ்சாட்டப்படும் இருவரும் மத்திய மாகாண பல்கலைக்கழகத்தில் கற்கும் மாணவர்கள் என்று விசாரணையில் தெரிவிக்கப்பட்டது. ஒரே மோட்டார் சைக்கிளில் பயணித்த இரண்டு மாணவர்களும் காயமடைந்து யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவருகின்றனர்.
சாலையோரமாகத் தாங்கள் பயணித்தபோதும் மோட்டார் சைக்கிளால் அவர்கள் மோதினார்கள் என்று இறந்தவரின் மனைவி இறப்பு விசாரணையில் தெரிவித்தார்.
மோதியதையடுத்து சைக்கிளில் பயணித்த கணவன், மனைவி இருவரும் சாலையில் மயங்கிவிட்டனர். அந்த வழியால் பயணித்தவர்கள் அவர்களை மீட்டு யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்த்திருந்தனர் என்றும் விசாரணையில் தெரிவிக்கப்பட்டது. பொலிஸார் மற்றும் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேமகுமார் விசாரணை மேற்கொண்டனர். சடலம் உறவினர்களிடம் நேற்று ஒப்படைக்கப்பட்டது. (வ-4)


தொடரும் உறவுகளின் போராட்டம்.....

# நேரில் வாக்குறுதி தரும் வரை அறவழிப் போராட்டம் தொடரும்.

## காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் உறுதி

வவுனியா, மார்ச். 1
அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன, தலைமைஅமைச்சர்ரணில்விக்கிரமசிங்க, எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன ஆகியோர் நேரில் வந்து வாக்குறுதி வழங்கினால் மாத்திரமே எமது போராட்டம் முடிவுக்கு வரும்." இவ்வாறு வவுனியாவில் போராட்டத்தை மேற்கொண்டுள்ள காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கத்தின் தலைவர் திருமதி காசிப்பிள்ளை ஜெயவதனா தெரிவித்தார்.
காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள், தமது உறவுகளுக்கு என்ன நடந்தது என்பதை அறிவிக்கக் கோரியும், தமிழ் அரசியல் கைதிகளை விடுவிக்குமாறு கேட்டும், பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்க வலியுறுத்தியும் வவுனியா நகரில் கடந்த 5 தினங்களாகப் போராட்டம் நடத்தி வருகின்றனர்.'
போராட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்களை மக்கள் பிரதிநிதிகள் இதுவரை சந்திக்கவில்லை. இது தொடர்பில் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள சங்கத்தின் தலைவர் ஜெயவதனாவிடம் கேட்டபோது, "மக்கள் பிரதிநிதிகளுக்கும் எமக்கும் இடையே எந்த முரண்பாடும் கிடையாது. அவர்களின் ஆதரவு தேவை.
கடந்த தடவை எமது தொடர் உணவு ஒறுப்புப் போராட்டத்தை முடித்து வைத்ததைப் போன்று முடிவுக்கு கொண்டு வரும் நோக்குடன் எவரும் வர வேண்டாம்.
அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன, தலைமை அமைச்சர் ரணில், எதிர்க்கட்சித் தலைவர் சம்பந்தன் ஆகியோர் நேரில் வருகை தந்து வாக்குறுதி வழங்கினால் மாத்திரமே எமது போராட்டத்தை முடிவுக்குக் கொண்டு வருவோம். " என்றார்.
இதேவேளை அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவுக்கு, மக்களால் ஆயிரம் தபால்களை அனுப்பும் போராட்டம் நேற்று ஆரம்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ-5)



## நீதியரசர் சிறிபவனுக்கு மைத்திரிபால பாராட்டு

கொழும்பு, மார்ச். 1
பதவியிலிருந்து ஓய்வுபெறும் தலைமை நீதியரசர் கே. சிறிபவன் நேற்றுப் பிற்பகல் அரச தலைவர் அலுவலகத்தில் மைத்திரிபால சிறிசேன வைச் சந்தித்தார்.
தலைமை நீதியரசர் கே. சிறிபவனின் சேவையைப் பாராட்டிய அரச தலைவர், நினைவுப் பரிசொன்றையும் அவருக்கு வழங்கினார். அவரது எதிர்கால நடவடிக்கைகள் வெற்றிபெற வேண்டுமென்றும் அரச தலைவர் வாழ்த்துத் தெரிவித்ததாக அரச தலைவர் ஊடகப்பிரிவு தெரிவித்தது. சிறிபவனின் பதவிக்காலம் நேற்றுடன் நிறைவடைந்தது. (வ-4)

## பேரவையின் அறிவிப்பையடுத்தே அரசு காணி விடுவிக்கும் முடிவுக்கு வந்ததாம்

### இப்படிக் கூறுகிறார் க. குமார்

யாழ்ப்பாணம், மார்ச் 1
"தமிழ் மக்கள் பேரவை கேப்பாபிலவு தொடர்பில் கூட்டம் நடத்தப் போகின்றது என்று அறிவித்ததாலேயே அந்த நிலத்தை விடுவிப்பதாக அரசு தெரிவித்தது"
இவ்வாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.
கேப்பாபிலவு நிலவிடுவிப்புத் தொடர்பிலான பொது அமைப்புக்களுடனான சந்திப்புக்கு தமிழ் மக்கள் பேரவை அழைப்பு விடுத்தி ருந்தது. பொது அமைப்புக்களுக்கும், தமிழ் மக்கள் பேரவைக்கும் இடையிலான கூட்டம் நேற்று மாலை நடைபெற்றது.
பிலக்குடியிருப்பு மற்றும் வலி. வடக்கு விடுவிப்புத் தொடர்பில் இங்கு ஆராயப்பட்டது. எதிர்வரும் 4 ஆம் திகதிக்கு முன்னர் பிலக்குடியிருப்பு நிலம் விடுவிப்பதாக அரச தலைவர் உறுதியளித்துள்ளதாக கூறப்பட்டுள்ளது. அவ்வாறு விடுவிக்கப்படாவிட்டால் எதிர்வரும் புதன் கிழமை வடக்கு கிழக்குத் தழுவிய முழுஅடைப்புப்போராட்டம்நடைபெறும்.
இதேவேளை, வலி வடக்குப் பகுதியில் படையினர் ஆக்கிரமித்து வைத்துள்ள நிலங்கள் விடுவிப்புத் தொடர்பில் எதிர்வரும் 4ஆம் திகதி அரச தலைவரின் யாழ்ப்பாண வருகையின்போது வழங்கப்படும் உத்தரவாதங்களைத் தொடர்ந்து போராட்டம் நடத்துவது தொடர்பில் முடிவு எடுப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (வ-5-101)

## புளொட், ஈபிஆர்எல்எப் கட்சிகளுடன் நேற்று பேரவைக் கூட்டத்தில் க.குமார் பங்கேற்பு

யாழ்ப்பாணம், மார்ச் 1
இரட்டைவேடம் போடாமல் கூட்டமைப்பு அல்லது பேரவையில் செயற்பட வேண்டும் என்று கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்த கருத்துக்கு, ஈ.பி.ஆர்.எல்.எவ்., புளொட் ஆகியவை செவிசாய்க்காத நிலையில், தமிழ் மக்கள் பேரவை ஏற்பாடு செய்திருந்த கலந்துரையாடலில் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அந்த இரண்டு கட்சிகளின் தலைவர்களுடன் நேற்றுப் பங்கேற்றுள்ளார்.
தமிழ் மக்கள் பேரவையின் ஏற்பாட்டில் பொது அமைப்புக்களுடனான சந்திப்பு கோண்டாவிலில் நேற்று மாலை நடைபெற்றது. இந்தக் கூட்டத்துக்குத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், பேரவையின் இணைத் தலைவர்களுள் ஒருவரான மருத்துவர் பூ.லக்ஸ்மன், ஈ.பி.ஆர்.எல்.எவ். தலைவர் சுரேஸ் பிரேமசந்திரன், புளொட் தலைவர் த.சித்தார்த்தன் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மோசடியான தலைமையை ஏற்றுக் கொண்டு கூட்டமைப்பிலும் இருந்துகொண்டு தமிழ் மக்கள் பேரவையிலும் இருக்க முடியாது; இரட்டை வேடம் போட வேண்டாம் என்று கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அண்மையில் இடம்பெற்ற பத்திரிகையாளர் சந்திப்புக்களில் தொடர்ச்சியாக வலியுறுத்தி வந்திருந்தார். இதற்கு புளொட் அமைப்போ, ஈ.பி.ஆர்.எல்.எவ். அமைப்போ செவி சாய்க்கவில்லை. கூட்டமைப்பிலிருந்து வெளியேறுவதாகவும் தெரிவிக்கவில்லை.
இந்த நிலையில் தமிழ் மக்கள் பேரவையின் நேற்றைய கூட்டத்தில், கூட்டமைப்பில் தொடர்ந்தும் அங்கம் வகித்துக் கொண்டிருக்கும் ஈ.பி.ஆர்.எல்.எவ், மற்றும் புளொட் தலைவர்கள் கலந்து கொண்டிருந்தனர். இரண்டில் ஏதாவது ஓரிடத்தில் அங்கம் வகிக்க வேண்டும் என்று கோரிய கஜேந்திரகுமாரும் பேரவையின் நேற்றைய கூட்டத்தில் அவர்களுடன் இணைந்து பங்குபற்றியிருந்தார். (வ-5)

## காணி விடுவிப்பில் உரிமை கோருகிறார் டி.எம்.எஸ்.

யாழ்ப்பாணம், மார்ச். 1
முல்லைத்தீவு மாவட்டத்தின் பிலக்குடியிருப்புப் பிரதேசத்திலுள்ள 42 ஏக்கர் காணி இன்று விடுவிக்கப்படும் என்று மீள்குடியேற்ற அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன் தெரிவித்தார்.
'கடந்த 28 நாள்களாக பிலக்குடியிருப்பு கிராம மக்கள் தமது காணிகளை விடுவிக்கக் கோரி போராட்டம் நடத்தி வருகின்றனர். இதனைக் கருத்திற் கொண்டு கடந்த 14 ஆம் திகதி அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவின் கவனத்துக்கு கொண்டு வரப்பட்டது.
அதனைத் தொடர்ந்து பாதுகாப்பு அமைச்சின் அதிகாரிகளுக்கும் படைத் தரப்பினருக்கும் காணி விடுவிப்புத் தொடர்பாக நடவடிக்கை எடுக்குமாறு அரசதலைவர் அறிவுறுத்தல்களை வழங்கியிருந்தார். பெப்ரவரி 28ஆம் திகதிக்கு முன்னதாக காணிகளை விடுவிக்க நடவடிக்கை எடுப்பதாக பாதுகாப்பு அமைச்சின் உயர் அதிகாரிகள் தெரிவித்திருந்தனர்.
இந்த விடயம் தொடர்பாக எதிர்க்கட்சித் தலைவரும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன் நேற்று முன்தினம் அரச தலைவரோடு கலந்துரையாடியிருந்தார். இந்தப் பேச்சுக்களைத் தொடர்ந்து பிலக்குடியிருப்பு கிராமத்தில் பொது மக்களது 42 ஏக்கர் காணி நாளை விடுவிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது' என்று அமைச்சர் டி.எம். சுவாமிநாதனின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ-5)

## கிளிநொச்சி மகா வித்தியின் காணி அதிகாரிகளால் பார்வை

கிளிநொச்சி, மார்ச் 1
கிளிநொச்சி நகரில் அமைந்துள்ள கிளிநொச்சி மகா வித்தியாலயத்துக்குச் சொந்தமான காணி விடுவிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது. அந்தக் காணியை மாவட்டச் செயலர் தலைமையிலான அதிகாரிகள் குழுவினர் நேற்றுச் சென்று பார்வையிட்டனர்.
"கிளிநொச்சி நகரின் மத்தியில் 571ஆவது படைப்பிரிவின் கட்டுப்பாட்டிலுள்ள குறித்த காணி தங்களின் ஆரம்ப பிரிவு பாடசாலைக்குரிய காணி எனவும் அதனை மீளவும் தங்களிடம் ஒப்படைக்குமாறும் கிளிநொச்சி மகா வித்தியாலய சமூகம் உயர் மட்ட அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்திருந்தது.
இந்த நிலையில் குறித்த காணியை விடுவிக்கப் போவதாக படைத்தரப்பினரால் எமக்கு அறிவித்தனர். குறித்த காணி அளவீடு செய்யப்பட்டு கிளிநொச்சி வலயக் கல்வித் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்படும்" என்று கிளிநொச்சி மாவட்டச் செயலர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்தார்.
இதேவேளை கிளிநொச்சி பரவிப்பாஞ்சான் காணி விடுவிக்கப்பட்டுள்ளதாகவும், அவற்றின் உரிமம் தொடர்பில் விவரங்கள் சேர்க்கப்பட்டு விரைவில் மக்களிடம் காணிகள் கையளிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மெலும் தெரிவித்தார். (வ-4- 6-35)

# சைட்டம் அதிகாரி மீதான சூடு திட்டமிட்ட நாடகமே

## அறிக்கை வெளியிட்டனர் பொலிஸார்

கொழும்பு, மார்ச் 1
சைட்டம் தனியார் கல்லூரியின் பிரதம நிறைவேற்று அதிகாரிக்கு உயிர் அச்சுறுத்தல் காணப்படுவதாகப் போலியாகக் காட்டுவதற்கே துப்பாக்கிச் சூட்டு சம்பவம் அரங்கேற்றப்பட்டுள்ளது.

இவ்வாறு பொலிஸார் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் வெளியிடப்பட்டுள்ளது.

சைட்டம் தனியார் கல்லூரியின் பிரதம நிறைவேற்று அதிகாரியின் மீது சூட்டுச் சம்பவம் நடைபெற்றமை தொடர்பாக நாடாளுமன்றத்திலும் வாதப்பிரதிவாதங்கள் நடைபெற்றன. இந்தவேளை இவ்வாறான ஓர் ஊடக அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

இதேவேளை, குறித்த சம்பவம் தொடர்பில் எம்பிலிப்பிட்டிய பகுதியைச் சேர்ந்த நபர் ஒருவர் கைது செய்யப்பட்டு எதிர்வரும் 13 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவத்தைத் திட்டமிட்டதாகச் சந்தேகிக்கப்படும் முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் ஒருவரையும் உள்ளூராட்சி மன்ற நிறுவனச் சாரதி ஒருவரையும் கைது செய்ய விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (சு-10)

# இளநிலை மாணவர்களை வதைத்த குற்றச்சாட்டில் மூத்த மாணவர்கள் கைது

கொழும்பு, மார்ச் 1
இளநிலை மாணவர்களை நிர்வாணப்படுத்தி காணொலி பதிவு செய்து அவர்கள் மீது பாலியல் துன்புறுத்தல்கள் மேற்கொண்டனர் என்ற குற்றச்சாட்டில் மூத்த மாணவர்கள் 3 பேர் கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கண்டி குண்டசாலைப் பிரதேசப் பாடசாலை ஒன்றில் நேற்று இந்தச் சம்பவம் இடம்பெற்றது. பொலிஸ் அவசர தொலைபேசி சேவைக்குக் கிடைத்த தகவல் ஒன்றின் அடிப்படையிலேயே 3 மாணவர்களும் கைதுசெய்யப்பட்டனர் என்று பொலிஸார் தெரிவிதனர்.

பயிற்சி வகுப்பு ஒன்றின் போது இளநிலை மாணவர்கள் சிலரை நிர்வாணமாக்கி அவர்களை காணொலிப் பதிவு செய்ததாக மூத்த மாணவர்கள் 3 பேருக்கும் எதிராகக் குற்றச்சாட்டு முன்வை க்கப்பட்டுள்ளது. கைதானவர்கள் தரம் 11, 12 மற்றும் 13ஆம் வகுப்புகளைச் சேர்ந்தவர்கள். அவர்கள் நீதிமன்றில் முற்படுத்தப்படவுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (வ-4)

## தெரிவாகிய 559 பேருக்கு மேலதிகமாக

# 79 பட்டதாரிகளுக்கு ஆசிரியர் நியமனம்

## வடக்கு கல்வி ஆலோசனை கூட்டத்தில் முன்மொழிவு

யாழ்ப்பாணம், மார்ச். 1
வடக்கு மாகாண சபையினால் 559 பட்டதாரிகளுக்கு வழங்கப்படவிருந்த ஆசிரியர் நியமனம் இடைநிறுத்தப்பட்ட நிலையில், அவர்களுக்கும் அவர்களுடன் சேர்ந்து, தகுதியான மேலும் 79 பட்டதாரிகளுக்கு நியமனம் வழங்கலாம் என்று நேற்று இடம்பெற்ற வடக்கு மாகாண கல்வி நடவடிக்கை ஆலோசனைக் குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

வடக்கு மாகாணப் பாடசாலைகளில் நிலவும் ஆசிரிய வெற்றிடங்களுக்காக ஆயிரம் பட்டதாரிகளை நியமிப்பதற்காக இடம்பெற்ற நேர்முகத்தேர்வில் தகுதியானவர்கள் என 559 பேரை மட்டுமே வடக்கு மாகாண கல்வி அமைச்சு தெரிவு செய்தது.

ஆனால் தகுதி என்று அறிவிக்கப்படாதவர்களில் தகுதியானவர்கள் பலர் உள்ளனர் என்றும் அவர்கள் கவனத்தில் கொள்ளப்படவில்லை என்றும் குற்றஞ்சாட்டப்பட்டது.

இவ்வாறு குற்றஞ்சாட்டப்பட்டவர்களில் 79 பேர் தகுதியானவர்கள்தான் என்பது கண்டறியப்பட்டுள்ளது. அதனால் 559 பேருடன் சேர்த்து 79 பட்டதாரிகளுக்கு நியமனம் வழங்கலாம் என்று நேற்றைய ஆலோசனைக் கூட்டத்தில் முன்மொழியப்பட்டது. எனினும் இது ஆராய்வு மாத்திரமே. அதற்கான நடவடிக்கை பற்றிய தீர்மானம் பின்னர்தான் எடுக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

(வ-4-101)



# கொழும்பு - பதுளை ரயில் சேவை பாதிப்பு

நுவரெலியா, மார்ச் 1
கொழும்பிலிருந்து பதுளை நோக்கிப் பயணித்த தொடருந்து ஒன்று தடம் புரண்டுள்ளதனால் அந்த வழி ஊடான தொடருந்து சேவைகள் தடைப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.

விபத்துக்குள்ளான தொடருந்து வட்டகொடை தொடருந்து நிலையத்தில் நேற்றுமதியம் 2.30 மணியளவில் தடம்புரண்டது. தொடருந்தின் இயந்திரப் பகுதியே தடம்புரண்டது. பயணிகளை வேறொரு தொடருந்தில் மாற்றி அனுப்பியதாக நாவலப்பிட்டி தொடருந்து கட்டுப்பாட்டு நிலைய அதிகாரிகள் தெரித்தனர். தொடருந்துப் பாதையை சீரமைக்கும் பணிகள் இடம்பெறுகின்றன என்று தெரிவிக்கப்பட்டது. (வ-ய-43)

## பாதாள உலகக் கும்பலால்

# மகிந்தவுக்கும் விமலுக்கும் அச்சுறுத்தலாம்

முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவுக்கும், மறியல் சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்சவுக்கும் பாதாள உலகக் கும்பலால் உயிர் அச்சுறுத்தல் உள்ளது என்று நாடாளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெரும தெரிவித்தார்.

மகிந்த ஆதரவு அணியினர் கொழும்பில் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"மகிந்த ராஜபக்சவின் காலத்தில் நாட்டை விட்டு வெளியேறிச் சென்ற பாதாள உலகக் கும்பல்களை தற்போதைய ஆட்சியாளர்கள் மீண்டும் நாட்டுக்குள் வரவழைத்துள்ளனர். அவர்களுடன் ஆட்சியாளர்கள் வெளிப்படையாகவே செயற்படுகின்றனர். அது நல்லதல்ல. ஆட்சியாளர்களின் ஆதரவுடன் பாதாள உலகக் கும்பல்கள் செயற்படுகின்றனர்" என்று நாடாளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெரும மேலும் தெரிவித்தார். (வ-4)

# ஆயிரக்கணக்கானோரின் அஞ்சலியுடன் சாந்தனின் பூதவுடல் தீயுடன் சங்கமம்



கிளிநொச்சி, மார்ச் 1
மறைந்த ஈழத்துப் புரட்சிப் பாடகர் சாந்தனின் இறுதிக் கிரியைகள் நேற்று மாலை இடம்பெற்றன. பெரும் திரளான மக்களின் கண்ணீர் அஞ்சலியுடன் கிளிநொச்சி இரணைமடு பொது மயானத்தில் அவரது உடலம் தகனம் செய்யப்பட்டது.

ஈழத்து புரட்சிப் பாடகர் எஸ்.ஜி. சாந்தனின் இறுதிக் கிரியைகள் நேற்று மாலை அவரது கிளிநொச்சி விவேகானந்தநகர் இல்லத்தில் இடம்பெற்றது. பின்னர் கரைச்சி பிரதேச செயலக வளாகத்தில் பொது அஞ்சலி நிகழ்வு நடைபெற்றது.

தொடர்ந்து பெரும் திரளான மக்களின் இறுதி அஞ்சலியுடன் சாந்தனின் உடலம் இரணைமடு பொது மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

சாந்தனோடு பணியாற்றிய பல கலைஞர்கள் மற்றும் கலையுலக நண்பர்கள், அரசியல் பிரதிநிதிகள், பெரும் திரளான பொது மக்கள் ஆகியோர் இறுதி ஊர்வலத்தில் கலந்துகொண்டனர். இறுதி ஊர்வலம் இடம்பெற்ற சாலையில் சிவப்பு, மஞ்சள் கொடிகள் பறக்கவிடப்பட்டிருந்தன. பாடசாலை மாணவிகளின் பாண்ட் இசை வாத்திய அணி வகுப்புடன் சாந்தனின் பூதவுடல் எடுத்துச் செல்லப்பட்டது.

(வ-35)

## நல்லூர் பிரதேசசபை பொது அறிவித்தல்

நல்லூர் பிரதேசசபையின் அதிகார எல்லைக்குள் பிரதான வீதிகளின் நடைபாதைகள் மற்றும் வீதியோரங்களில் போக்குவரத்திற்கு இடையூறாக வும் விபத்துக்கள் ஏற்படும் ஏதுநிலையை உருவாக்கும் வகையிலும் அனுமதி பெறப்படாத சகல நடைபாதை, வீதியோர வியாபார நடவடிக்கைகளும் தடை செய்யப்படுகின்றது. மீறுவோர் மீது 1987 ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க பிரதேசசபைகள் சட்டத்திற்கு அமைவாக சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதை அறியத்தருகின்றேன்.

**சு.சுதர்ஜன்,**
**செயலாளர்**
**நல்லூர் பிரதேசசபை.**

## அறிவித்தல்

வடலியடைப்பு கிராம அபிவிருத்தி ச் சங்கத்தின் பொதுக் கூட்டமும் நி ர்வாகத் தெரிவும் இம்மாத இறுதியில் நடத்துவதற்கு பிரதேச செயலகம் நடவடிக்கை எடுத்துள்ளதால் பழைய அங்கத்தவர்கள் தமதுஉறுப்புரிமைகளைபுதுப்பிப்பதுடன்புதியஅங்கத்தவர்களாக இணையவிரும்புபவர்களும் மார்ச் மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் அங்கத்துவப் பணத்தினைச் செலுத்தி அங்கத்துவத்தை உறுதிப்படுத்து மாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றோம்.

**இடைக்கால நிர்வாக சபை,**
**வடலியடைப்பு கிராம அபிவிருத்திச்சங்கம்.**

## அறிவித்தல்

வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் ஏழாலை உப அலுவலகத்திற்குட்பட்ட பகுதிகளிலுள்ள ஆதனங்களின் ஆதன மீள்மதிப்பீடானது கூடிய விரைவில் மேற் கொள்ளப்படவுள்ளது. இதன் பிரகாரம் ஆதனங்கள் ஒவ்வொரு வட்டாரத்தின் வீதி ரீதியாக இணங்காணப்பட்டு இலக்கங்கள் இடப்பட்டுள்ளன. எனவே ஆதன உரிமையாளர்கள் தங்கள் ஆதனங்களிற்கான ஆதனவரி நிலுவைகளை ஏழாலை உபஅலுவலகத்தில் செலுத்துவதுடன் தங்கள் உறுதிகளை காண்பித்து புதிதாக இடப்பட்ட இலக்கங்களிற்குரிய ஆதன உரிமையாளர் பெயர் விவரங்களின் பதிவினையும் சரிபார்த்து உறுதிப்படுத்திக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.
குறிப்பு- ஏழாலை உப அலுவலகத்தில் ஆதனவரி செலுத்தியவர்கள் அப்பற்றுச் சீட்டினைக் காண்பித்து தங்கள் ஆதனத்திற்கு புதிதாக இடப்பட்ட இலக்கத்தையும் கூறி தங்கள் ஆதன உரிமையினை உறுதிப்படுத்திக்கொள்ளவும்.

**செயலாளர்,**
**வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்.**
**28.02.2017**

## நாரந்தனை வடக்கு தான்தோன்றி ஸ்ரீ மனோன்மணி அம்பாள் ஆலயத்தில் வர்ணம் தீட்டுவதற்கான கூறுவிலை கோரல்

அம்பாள் ஆலயத்தில் புனருத்தாரண திருப்பணி வேலைகள் முடிவுற்றநிலையில்உள்ளது. ஆலயத்தில்வர்ணம்(பெயின்ற்) தீட்டும்வேலையை ஆரம்பிக்கவுள்ளோம். அதன் காரணமாக ஆலயங்களில் வர்ணம் தீட்டி அனுபவமுள்ளவர்கள் ஆலயத் துக்கு வருகை தந்து பார்வையிட்டு அதற்கான கூறு விலையினை கேட்குமாறு வர்ணம்தீட்டுபவர்களிடம் கேட்டுக் கொள்கின்றோம்.

**பார்வையிடும் நேரம்**
1) 2017.03.10 ஆம் திகதிக்கு முன்பாக தினமும் பகல் 12 மணிக்கு முன் பார்வையிடலாம்.
2) 2017.03.15 ஆம் திகதிக்கு முன்பாக கூறுவிலையைச் சமர்ப்பிக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கின்றோம்.

**தொடர்புகளுக்கு:**
**077 778 0479,**
**077 535 0018, 077 605 4082.**

**சைவமகாசபையினர்,**
**நாரந்தனை,**
**ஊர்காவற்றுறை.**

## பொது அறிவித்தல்
### வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபைக்குட்பட்ட வளர்ப்பு நாய்களைப் பதிவு செய்தல்

1987 ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க பிரதேசசபைகள் சட்டத்தின் 147, 148ஆம் பிரிவுக்கமைவாக வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை எல்லைக்குள் வசிக்கும் குடியி ருப்பாளர்கள் தமது வளர்ப்பு நாய்களை 2017.03.31ஆம் திகதிக்கு முன்னர் எமது பிரதேசசபை உப அலுவலகங்களான மானிப்பாய் பட்டினம், மானிப்பாய் கிராமம், பண்டத்தரிப்புப் பட்டினம், பண்டத்தரிப்பு கிராமம் ஆகிய அலுவலகங்களில் பதிவு செய்து பதிவு அட்டையைப் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன். 2017.03.31 ஆம் திகதிக்கு முன்னர் பதிவுசெய்யப்படாத வளர்ப்புநாய்களின் உரிமையாளர்கள் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதனையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**திரு.கு.சற்குணராசா,**
**செயலாளர்,**
**வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை, மானிப்பாய்.**

# மரண அறிவித்தல்கள்

## திருமதி பொன்னுக்கண்டு பொன்னுத்துரை



உடுப்பிட்டி கம்பர்மலை பாரதி வீதியை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பொன்னுக்கண்டு பொன்னுத்துரை நேற்று (28.02.2017) செவ்வாய்க்கிழமை சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைரமுத்து தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற பொன்னுத்துரையின் அன்பு மனைவியும் சிவலிங்கம், சந்திரலிங்கம், தங்கமணி, இராசமணி, இரத்தினமணி ஆகியோரின் பாசமிகுதாயும் காலஞ்சென்றவர்களான அழகம்மா, அருணாச்சலம், அன்னபூரணி ஆகியோரின் அன்புச்சகோதரியும் சபாரட்ணம், தங்கத்திரவியம், அழகேந்திரராஜா, சந்திரகலா காலஞ்சென்ற சண்முகநாதன் ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 01.03.2017 புதன்கிழமை மு.ப. 10 மணியளவில் கம்பர்மலை மயிலியதனை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**கம்பர்மலை, உடுப்பிட்டி.**

**தகவல் :**
**குடும்பத்தினர்**

## ஜோசப் அலோசியஸ் நவரட்ணம்



யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் மிருசுவிலை வசிப்பிடமாகவும், சுண்டுக்குளியை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட அலோசியஸ் நவரட்ணம் நேற்று (28.02.2017) செவ்வாய்க்கிழமை அகால மரணமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஜோசப் செல்வரட்ணம் _ அருளம்மா தம்பதியரின் அன்புமகனும் காலஞ்சென்றவர்களான கிரகோரிசவிரிமுத்து_திரேசம்மா தம்பதியரின் அன்புமருமகனும் ஆன்ஜொய்சின் அன்புக்கணவரும் ஜொய்லின் (ஆஸ்திரேலியா), சார்ளின் (சம்பத் வங்கி) ஆகியோரின் அன்புத்தந்தையும் காலஞ்சென்ற ஞானப்பிரகாசம் மற்றும் அன்ரனி, சந்திரா (கனடா) காலஞ்சென்ற யோகராஜா (கனடா) மற்றும் ஜேசுதாசன், ரவி (கனடா), நீற்றா (குஞ்சு, கனடா) ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின்இறுதிச்சடங்குகள்பற்றியவிவரம்பின்னர்அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

**150, பழைய பூங்கா வீதி,**
**யாழ்ப்பாணம்.**

தகவல்:
குடும்பத்தினர்

## திருமதி அன்னம்மா நமசிவாயம்



யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அன்னம்மா (நேசமணி) நமசிவாயம் நேற்று (28.02.2017) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நமசிவாயத்தின் அன்பு மனைவியும் சென்றவர்களான குணபாலராஜா, அந்தோனிப்பிள்ளை, வனிதா, ஜேர்ஜ் மற்றும் சியாமிளா, லெஸ்லித்துரை, லூர்துநிலா ஆகியோரின் அன்புத் தாயாரும் புஸ்பராணி, கௌசலை, அல்வீனம்மா, காலஞ்சென்றவர்களான அருளானந்தம், யோகேஸ்வரன் ஆகியோரின் அன்பு மாமியாரும் லக்ஷினி, லக்ஷன், எல்சி, தர்மினி, தர்சினி, தயாளினி, ஜெகன், அனிற்றோ, அன்ரனிற்றோ, கமல்ற்றோ, தனுஸ்ற்றோ, வெனிஸ்ற்றோ, லாவன், லாவண்யா, லாண்சண்யா, லாண்சிகா, கெவின் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (01.03.2017) புதன்கிழமை மாலை 3 மணிக்கு அவரது இல்லத்தில் இருந்து யாழ். மரியன்னை பேராலயத்துக்கு எடுத்துச் சென்று ஆசீர்வதிக்கப்பட்டு பின்னர் பரிசுத்த கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**28, இராஜேந்திரா வீதி,**
**யாழ்ப்பாணம்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

### இழுவைமடி...

பெப்ரவரி மாதம் 10ஆம் திகதி முன்வைக்கப்பட்டது. இந்தச் சட்டவரைவுக்கு மாகாண சபைகளின் ஒப்புதல் பெறப்பட்டிருந்தது. நாடாளுமன்றிலும் விவாதத்துக்கு உட்படுத்தப்பட்டிருந்தது.

இதன் பின்னர் நாடாளுமன்றினால், கடற்றொழில் நீரியல்வள அமைச்சுக்கு சட்டவரைவு பாரப்படுத்தப்பட்டது. கடற்றொழில் நீரியல் வள அமைச்சு, தனிநபர் சட்டவரைவில் சில மாற்றங்களைச் செய்து வர்த்தமானியில் வெளியிட்டுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரனால் கொண்டு வரப்பட்ட சட்டவரைவில், இழுவைமடியைப் பயன்படுத்தி மீன்பிடியில் ஈடுபடுபவர்களுக்கு 5 வருடச் சிறைத் தண்டனையும் 50 ஆயிரம் ரூபா தண்டமும் விதிக்கப்பட வேண்டும் என்று இருந்தது. அதனை கடற்றொழில் அமைச்சு 2 வருடச் சிறைத் தண்டனையாகக் குறைத்துள்ளது. வர்த்தமானியில் கடந்த 1 ஆம் திகதி பிரசுரிக்கப்பட்ட இந்தச் சட்டவரைவுக்கு நாடாளுமன்றம் அங்கீகாரம் வழங்கியதும் சட்டம் நடைமுறைக்கு வரும் என்று தெரிவிக்கப்பட்டது. (வ-5)

### புதிய...

அமைச்சர் ஒழுங்கு செய்திருந்தார்.

"நீண்ட காலமாகப் புரையோடிப்போயுள்ள இனப்பிரச்சினைக் குத் தீர்வு காணும் நோக்கி கூட்டு அரசு செயற்பட்டு வருகின்றது. கூட்டு அரசு அமைவதற்கு சிவில் அமைப்புகளும் முக்கிய காரணியாக அமைந்திருந்தது.

நாட்டில் உருவாக்கப்படவுள்ள புதிய அரசமைப்புத் தொடர்பில் சிவில் அமைப்புகள் மக்களிடம் எடுத்துரைக்க வேண்டும். அப்போதுதான் மக்கள் மத்தியில் ஒரு நம்பகத்தன்மையும் தோற்றம் பெறும்" என்று தலைமைஅமைச்சர்ரணில்விக்கிரமசிங்க தெரிவித்தார்.

"அரசமைப்புத் தொடர்பில் மக்களுக்கு திறந்துபட்ட விழிப்புணர்வை முன்னெடுக்க மக்கள் கருத்தறியும் குழு நடவடிக்கை எடுக்கவுள்ளது. அரசமைப்புத் தொடர்பில் மக்களுக்கு விளக்கமளிப்பதற்காக அடுத்த வாரம் சிவில் அமைப்புகள் ஒன்றுகூடவுள்ளன" என்று மக்கள் கருத்தறியும் குழுவின் தலைவர் லால் விஜேயநாயக்கா கூறினார். (வ - 5)

### தலைமை...

நீதியரசர் கே.ஸ்ரீபவன் நேற்று செவ்வாய்க்கிழமையுடன் நீதிச் சேவையிலிருந்து ஓய்வு பெற்றார்.

புதிய தலைமை நீதியரசரைப் பரிந்துரை செய்யும் அதிகாரம் சபாநாயகர் தலைமையிலான அரசமைப்புச்சபையிடம் உள்ளது. இந்த நிலையில் சபாநாயகர் கரு ஜெயசூரிய தலைமையில் அரசமைப்புச் சபைக் கூட்டம் சபாநாயகரது இல்லத்தில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்றது.

நீதிச் சேவை ஆணைக்குழுவில் சேவை மூப்பு அடிப்படையில் உயர் நீதிமன்ற நீதியரசர்களான பிரசாத் டெப் மற்றும் ஈவா வனசுந்தர ஆகியோர் தலைமை நீதியரசர் பதவிக்கான தகுதிகளை கொண்டிருந்தனர். இவர்களில் நீதியரசர் பிரசாத் டெப்பை அரசமைப்புச் சபை பரிந்துரை செய்தது.

நாட்டின் 40ஆவது மன்றாடியார் அதிபதியாக சட்டமா அதிபர் திணைக்களத்தில் 2007ஆம் ஆண்டு முதல் 2011ஆம் ஆண்டு வரை கடமையாற்றிய நீதியரசர் பிரியசாத் டெப், 2011ஆம் ஆண்டு நீதிச் சேவைக்குள் உள்ளீர்க்கப்பட்டார். (வ-5)

## விற்பனையாளர் தேவை

யாழ் நகரில் உள்ள புடைவை விற்பனை நிலையத்துக்கு அனுபவமுள்ள பழக விரும்பும் ஆண், பெண் விற்பனையாளர் உடன் தேவை. மேலும் சிட்டை எழுதுனர் (கணினியில் பில் போடுபவர்) ஆண், பெண் இருபாலாரும் உடன் தேவை. அனுபவமுள்ளவர்களுக்கு முன் உரிமை அளிக்கப்படும்.

**077 526 9182/ 077 293 5095**

## இதயத்தை உடைப்போம் இல்லார்க்கு இரங்குவோம்

"இதுவே தகுந்த காலம். இன்றே மீட்பு நாள். உங்கள் முழு இதயத்தோடு என்னிடம் திரும்பி வாருங்கள்"

இன்றைய திருநீற்றுப் புதன் தினத்துடன் தவக்காலம் ஆரம்பமாகின்றது. தவக்காலம் ஓர் அருளின் காலம். மனமாற்றத்தின் காலம். இது சடங்குகளையும், சம்பிரதாயங்களையும் நிறைவேற்றும் காலம். மட்டுமல்ல, எமது வாழ்வை அலசி ஆராய்ந்து புதிய பாதையில் பயணிக்கும் மீட்பின் காலமாகும். இயேசுவின் காலடிச் சுவட்டையும், கல்வாரி முகட்டையும் கண்முன் நிறுத்தும் உருமாற்றத்தின் காலமாகும்.

தவம் என்பது காவியுடை தரிப்பதும் கவலையை வெளிக்காட்டுவதும் அல்ல. மாறாக இதயத்தை உடைப்பது இல்லார்க்கும், இயலார்க்கும் இரங்குவது. இறையுறவை வளர்ப்பது ஆசை வலைகளில் நின்று அகன்று வேடமில்லா, கபட மில்லா, பேதமில்லா, அநீதியில்லா வாழ்வு வாழ்வதாகும்.




ஆனால் நாம் பகட்டிலும், ஆடம்பரத்திலும் சமூக கௌரவம் இருப்பதாக ஒரு மாயச் சிந்தனையில் மயங்கிக் கிடக்கின்றோம். அளவோடு அனுபவித்து, எளிமையைக் கடைப்பிடித்து, ஏழைகளைத் தாங்கி நிற்பதே உண்மையான நோன்பு என உணரத் தவறியதால், இன்று உலகம் பதற்றத்திலும் அச்சத்திலும் பட்டினியிலும் அடக்கு முறையிலும், அடிமைப்படுத்தலிலும் பயணிக்கின்றது.

ஈதல், இறைவேண்டல், நோன்பு ஆகிய செயல்களை ஒரு புதிய கோணத்தில் கொண்டு செல்ல அழைக்கும் இயேசுவின் பார்வையை நமதாக்குவோம். பக்திச் செயல்கள் தம்பட்டம் அடிக்கவல்ல. நமக்குள் நம்மைத் தேடி, "நான்" என்ற மன நிலையை மாற்றி "நாம்" என்ற பொதுநிலைக்குத் திரும்பும் படிக்கற்கள் என்றுணர்வோம். எமது அக ஆன்மிகம் இயேசுவின் ஆன்மிகமாகி எம்மில் ஒளிரட்டும்.

எஸ். யேசுதாஸ், கொழும்புத்துறை.

## பிணையில் வெளியே வந்த இருவர் அடாவடிக் குற்றச்சாட்டில் கைது

*விசாரணையின் பின்னர் மீளவும் பிணை கிடைத்தது*

யாழ்ப்பாணம், மார்ச் 1

வாள்வெட்டு வழக்கில் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றினால் பிணையில் விடுவிக்கப்பட்டிருந்த இரண்டு இளைஞர்களை அடாவடியில் ஈடுபட்டனர் என்ற குற்றச்சாட்டில் பொலிஸார் மீளவும் கைது செய்தனர். எனினும் விசாரணையின் பின்னர் அவர்கள் இருவரையும் பிணையில் விடுவித்து வழக்கை ஒத்திவைத்தது யாழ்ப்பாண நீதிவான் மன்று.

பிறருக்கு அடித்ததாகக் குற்றஞ்சாட்டி நேற்றுமுன்தினம் 2 இளைஞர்களை யாழ்ப்பாணப் பொலிஸார் கைது செய்தனர். இருவரும் வாள் வெட்டுக் குற்றச்சாட்டில் முன்னர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர். யாழ்ப்பாண மேல்நீதி மன்றினால் அவர்கள் இருவரும் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

இந்த நிலையில் அவர்களை நேற்றுமுன்தினம் கைது செய்த யாழ்ப்பாணப் பொலிஸார் நேற்று யாழ்ப்பாண நீதிவான் மன்றில் முற்படுத்தினர்.

"இந்த இளைஞர்கள் மீது பொலிஸார் வேண்டுமென்றே வழக்குகளைச் சோடிக்கின்றனர். சம்பவத்துடன் தொடர்புடைய உண்மையான குற்றவாளிகளைப் பொலிஸார் தப்பிக்க விட்டுள்ளனர்" என்று சந்தேகநபர்கள் சார்பில் முன்னிலையான சட்டத்தரணிகள் மன்றில் தெரிவித்தனர்.

வழக்கை விசாரணை செய்த நீதிவான் சி.சதீஸ்தரன், இரண்டு பேரையும் பிணையில் விடுவித்தார்.

"சந்தேகநபர்கள் இருவரும் தலா 75 ஆயிரம் ரூபா பெறுமதியான ஆள் பிணையில் விடுவிக்க ப்படுகிறார்கள். சந்தேகநபர்கள் ஒவ்வொரு திங்கட்கிழமையும் நீதிமன்ற பதிவாளர் முன்னிலையில் கையொப்பமிடவேண்டும்" என்று நீதிவான் கட்டளையிட்டார். (வ4.103)

## பாடசாலைக்குள் புகுந்து காட்டுயானை அட்டகாசம்

மட்டக்களப்பு பட்டிருப்பு, தும்பங்கேணி கண்ணகி வித்தியாலயத்துக்குள் நேற்று அதிகாலை புகுந்த தனியன் காட்டு யானை பாடசாலை வளாகத்தைச் துவம்சம் செய்தது.

பாடசாலைச் சுற்றுவேலியின் ஒருபகுதி உடைக்கப்பட்டுள்ளதுடன், தென்னை, வாழை மரங்களும் அழிக்கப்பட்டன. முன்னதாக கிராமத்துக்குள் புகுந்த யானையால் மக்கள் அல்லோல கல்லோலப்பட்டனர். தீப்பந்தங்களைக் காட்டி ஒருவாறு யானையை விரட்டியுள்ளனர். அந்த யானை பின்னர் பாடசாலைக்குள் புகுந்து அட்டகாசம் செய்தது.

அதேவேளை, அண்மையில் இந்தப் பாடசாலையில் நடைபெற்ற மாலை நேர வகுப்புக்குச் சென்று விட்டு வீடு திரும்பிக் கொண்டிருந்த மாணவி ஒருவரும் காட்டுயானைத் தாக்குதலுக்கு இலக்காகிப் படுகாயமடைந்தார். (ற-ய)

### காரைநகர் கிழவன்காடு கலாமன்றம் ஸ்தாபக தின வாழ்த்துக்கள்

இன்று (01.03.2017) புதன்கிழமை கலை மற்றும் சமூக சேவையில் 15 ஆவது ஆண்டினை நிறைவு செய்து 16 ஆவது ஆண்டில் தடம் பதித்து தொடர் சேவையாற்றவுள்ள கலங்கரை விளக்கமாக விளங்கும் எமது கலாமன்றத்திற்கு ஸ்தாபக தின வாழ்த்துக்களை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நிர்வாக சபையினர்
ஆசிரியர்கள் , மாணவர்கள்
பெற்றோர்கள்.

கிழவன்காடு கலாமன்றம்
காரைநகர் மற்றும்
யாழ்கிளை.

### சிறுநீரகம் தேவை

37 வயதுடைய AB+ வகைக்குருதியுடைய ஒருவருக்கு சிறுநீரகம் தேவை. உதவ விரும்புபவர்கள் உடனடியாகத் தொடர்புகொள்ளவும்.

077 493 9918, 077 615 9316

## பாடசாலையிலிருந்த மாணவனை இடைவேளையுடன் காணவில்லை

*அதிபரும் தந்தையும் பொலிஸில் முறைப்பாடு*

யாழ்ப்பாணம், மார்ச் 1

வலிகாமம் வடக்கில் உள்ள பாடசாலையில் தரம் 5 பயிலும் மாணவர் ஒருவர் பாடசாலை இடைவேளை நேரத்தில் காணாமற்போயுள்ளார். அது குறித்து குறித்த பாடசாலை அதிபரும் மாணவனின் தந்தையும் முறைப்பாடு செய்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் நேற்று மதியம் இடம்பெற்றது. குறித்த மாணவனை எவரோ மோட்டார் சைக்கிளில் ஏற்றிச் சென்றதாகக் கூறப்பட்டது.

"மாணவனின் தாயும் தந்தையும் பிரிந்து வாழ்கின்றனர். தாயார் வெளிநாடு ஒன்றில் உள்ளார். தந்தையுடன் வசித்த வரும் அந்த மாணவன் தான் தாயாரிடம் செல்லப்போவதாக சக மாணவர்களுக்கு நேற்றுமுன்தினம் பாடசாலையில் வைத்துக் கூறியுள்ளார்" என்று ஆரம்ப விசாரணையில் கூறப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர். எனினும் அந்த மாணவன் பற்றிய தகவல்கள் சம்பந்தப்பட்ட இடங்களுக்கு அனுப்பப்பட்டு விசாரணைகள் இடம்பெறுகின்றன என்றும் பொலிஸார் கூறினர். (வ-4-26)

## சிறைச்சாலை மருத்துவர்கள் அனைவருக்கும் இடமாற்றம்

*சுகாதார அமைச்சர் அதிரடிக் கட்டளை*

சிறைச்சாலை வைத்தியசாலைகளில் பணியாற்றும் மருத்துவர்களுக்கு உடனடியாக இடமாற்றம் வழங்குமாறு சுகாதார சேவைகள் பணிப்பாளருக்கு சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன அறிவுறுத்தினார்.

இது தொடர்பில் சுகாதார அமைச்சு விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளதாவது:

சிறைச்சாலை வைத்தியசாலைகளில் பணியாற்றும் மருத்துவர்கள் அரசியல் ரீதியாக செல்வாக்கு பெற்ற நபர்களுக்கு சிறப்புச் சலுகைகளை வழங்கி வருவதாக முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

செல்வாக்குப் பெற்ற நபர்கள் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்படும் போது அவர்கள் சுகவீனமுற்றுள்ளதாகத் தெரிவித்து அவர்களை வைத்தியசாலையில் சேர்ப்பதற்கு சில மருத்துவர்கள் உதவியுள்ளனர்.

இவ்வாறான குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக நடத்தப்பட்ட ஆரம்பக் கட்ட விசாரணைகளுக்கு பின்னர் சுகாதார அமைச்சர் இந்த தீர்மானத்தை எடுத்துள்ளார் என்றுள்ளது.

இதேவேளை, செல்வாக்குப் பெற்ற நபர்கள் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டவுடன் அவர்களை உடனடியாக வைத்தியசாலைகளுக்கு மாற்றப்படுவது சம்பந்தமாக பொது மக்கள் அதிருப்தியடைந்துள்ளனர் என்று அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன அண்மையில் கருத்துத் தெரிவித்திருந்தார். (வ-5)

### ஆசிரியர் தேவை

கோண்டாவிலில் இயங்கும் முன்பள்ளிக்கு ஆங்கிலத்தில் கற்பிக்கக்கூடிய ஆசிரியர் தேவை.

077 848 0615

### சமையல் ஆள்கள் தேவை

மானிப்பாயிலுள்ள ஹோட்டல் ஒன்றிற்கு நன்றாக சமையல் வேலை தெரிந்த சமையல் ஆள் (Cooker), உதவியாளர் (Helper), (ஆண், பெண்) தேவை. உடன் தொடர்பு கொள்ளவும்.

076 981 1241

### வேலையாள்கள் தேவை

இல 281D, Clocktower Road, Jaffna இல் அமைந்துள்ள Saree Palace எனும் புடைவைக் கடைக்கு நன்கு தையல் அனுபவமுள்ள பெண் தையலாளர்கள் தேவைப்படுகின்றனர். அனுபவமுள்ளவர்கள் தொடர்பு கொள்ளவும். மேலதிக விவரங்களுக்கு நேரில் வரவும்.

077 750 8142, 021 221 5917

### பெயர்மாற்றம்

அளவெட்டி மேற்கு, அளவெட்டியை வசிப்பிடமாகக் கொண்ட **கந்தன் கனகம்மா** ஆகிய நான் இன்று முதல் எனது பெயரை **செல்வநாதன் கமலேஸ்வரி** எனப் பெயர்மாற்றம் செய்வதோடு இனிவரும் காலங்களில் சகல ஆவணங்களிலும் எனது புதிய பெயரையே பயன்படுத்துவேன் என இத்தால்ஜனநாயகசோசலிசக்குடியரசுக்கும் மக்களுக்கும் அறியத்தருகிறேன்.

**செல்வநாதன் கமலேஸ்வரி**

### கோயில் காண்டாமணி விக்கிரகங்கள் தயாரிப்பும் விற்பனையும்

காண்டாமணி 500kg, 300kg, 200kg, 150kg, 100kg, 50kg, நிறை அளவுகளில் சுத்தமான வெண்கலத்தில் செய்யப்பட்டவை.
மாமல்லபுரத்திலிருந்து தருவிக்கப்பட்ட கருங்கல்லினாலான விக்கிரகங்கள், கும்பகோணத்திலிருந்து தருவிக்கப்பட்ட பஞ்சலோகத்தாலான விக்கிரகங்கள், திருவாசிகள், கோயிலுக்கு வேண்டிய சகல பொருள்களும் பெற்றுக் கொள்ளலாம்.
நிக்கல்பிளேற், கோமியல்பிளேற் ஆகியவையும் செய்யப்படும்.
பழைய உலோகங்களாலான கோயில் பொருள்கள் கொள்வனவு செய்யப்படும்.

**உற்பத்தியும் காட்சிப்படுத்தல் இடமும்**
**பிள்ளையார் மெற்றல் வேக்ஸ்**
**இல.04, பார்வீதி, மட்டக்களப்பு.**

**வேலாயுதம் சாந்த பத்மலால்**
**077 676 5504**

### அறிவித்தல்

பதவி வெற்றிடங்களுக்கான விண்ணப்பம் கோருதல்
மாகாண பொதுச்சேவை
ஆணைக்குழு வடக்கு மாகாணம்

வடக்கு மாகாண பொதுச்சேவையின் அபிவிருத்தி உத்தியோகத்தர் தரம் III பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை 2017

தமிழ் / சிங்களம் மொழி மூலம் மேற்படி பதவிக்குரிய போட்டிப் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் வடக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவின் செயலாளரினால் கோரப்பட்டுள்ளன. இப் பதவி வெற்றிடங்கள் திறந்த போட்டிப் பரீட்சை மூலம் நிரப்பப்படும். இவ் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி திகதி 2017.03.31 ஆகும்.

விண்ணப்பதாரிகள் www.np.gov.lk → Recruitment and Exam → Advertisement என்ற வடக்கு மாகாண இணையத்தளத்தில் மேலே குறிப்பிடப்பட்ட பதவிக்கான ஆட்சேர்ப்புத் தகவல்களையும், தகைமைகளையும் பார்வை யிட்டு தகைமையுடையவர்கள் அம்மாதிரி விண்ணப்பப்படிவத்துக்கு அமைவாக விண்ணப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

**ரூ. வரதலிங்கம்**
**செயலாளர்,**
**மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு, வடக்கு மாகாணம்.**



யாழ்ப்பாணம் பலாலி சாலை - பருத்தித்துறை சாலைச் சந்தியில் நேற்று மாலை இடம்பெற்ற விபத்தில் சைக்கிளில் பயணித்த ஒருவர் தூக்கி எறியப்பட்டு படுகாயமடைந்தார். யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அவர் சேர்க்கப்பட்டார். சைக்கிளில் பயணித்த வர் தூக்கி வீசப்பட்டதால் அவர் வானின் கண்ணாடியில் மோதுண்டே படுகாயமடைந்தார் என்று தெரிவிக்கப்பட்டது. (வ-101)

## வடக்கு மருத்துவர்கள் நாளை முழுநாள் பணிப்புறக்கணிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 1

வடக்கு மாகாண மருத்துவர்கள் நாளை வியாழக்கிழமை 24 மணி நேர பணிப்புறக் கணிப்புப் போராட்டத்தில் ஈடுபடுவர் என்று அறிவிக்கப்பட்டது.

மாலபே தனியார் மருத்துவக் கல்வி வழங்கும் நிறுவனத்தை அரசுடைமையாக்குமாறு வலியுறுத்தியே இந்தப் போராட்டம் நடத்தப்படுவதாக மருத்துவர் சங்கம் தெரிவித்தது.

தெல்லிப்பழை புற்று நோய் வைத்தியசாலை உள்ளிட்ட அனைத்து வைத்தியசாலைகளிலும் அவசர நோயாளர் சேவைகள் இடம்பெறும் என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் வடமாகாண இணைப்பாளர் மருத்துவர் காண்டீபன் தெரிவித்தார். (வ-4-7)

# கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையின் ஆசிரியை **திருமதி ஏமி ஜெயதாஸ்**
அவர்களின் மாமனார்
**அந்தோனி ஜோசப்**
அவர்கள் 21.02.2017 அன்று காலமாகிவிட்டார். அவரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**ஆசிரியர் வட்டம், யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி.**

# துயர் பகிர்கின்றோம்



யாழ். சாலை கோண்டாவிலில்
காப்பாளராக கடமையாற்றும்
**வடிவேலு சுரேந்தர்** அவர்களின்
அன்புத் தந்தையார்
**நாகமுத்தன் வடிவேலு**
அவர்களின் பிரிவால்
துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**ஊழியர் நலன்புரி சங்கம்**
**யாழ். சாலை கோண்டாவில்**

# எம் இதயத்தின் இதயமே உனக்கு ஈராண்டுகள்

## திருமதி சுபகரி சோதிலிங்கம்



அன்னையின் மடியில்
06.02.1971

ஆண்டவன் பிடியில்
22.02.2015
திதி : 01.03.2017
வளர்பிறை திருதியை

**எம் இதயத்தின் இமயமே உனக்கு ஈராண்டுகள்**
**எம் தெய்வமே சுபமே உருவான சுபகரியே?**
**ஈராண்டுகளா! நீ நீசமடைந்து நினைக்க முடியவில்லையம்மா?**
**நீ இறைவனடி சேர்ந்து இருட்டடிப்பு செய்துவிட்டது எம்மனதை!**
**நம்பமுடியவில்லை நீ இருக்கிறாய் என்றும் எம் இதயத்தில்**
**காலங்கள் கரையலாம் - உன் கணவரின் காதல் கரையாது**
**சோகத்தில் தள்ளாடும் உன் சொந்தங்கள்**
**உன் சுட்டித்தனத்தை - அவர்தம் ஆயுள் உள்ளவரை உணர்வர்**
**ஈராண்டுகள் என்ன - எம் இறுதி மூச்சுள்ளவரை**
**நாம் உன்னை நினைப்போம்**
**உன் ஆத்மா தில்லை நடராசன் திருவடி நிழலில் அமைதி**
**பெறவேண்டிப் பிரார்த்திக்கின்றோம்**
**ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!**

எ.எஸ். சோதிலிங்கம்
246, ரேய்னர்ஸ் லேன்,
கார்ரோவ்,
பி.ஓ.பொக்ஸ், எச். எ 29 ரீசட்,
லண்டன்.

உன்னை அகிலத்துக்கு
அறிமுகம் செய்த அன்னை,
கண்ணான கணவர், உன் பாசத்துக்கு
பரிதவிக்கும் பிள்ளைகள்,
சகோதரர்கள் மற்றும்
உற்றார், உறவினர்கள்.

## டெங்கு நுளம்பு உற்பத்திக்கான சூழல் 10 பேரிடம் ரூ.30,000 தண்டம் அறவீடு

டெங்கு நுளம்பு உற்பத்தியாகக் கூடிய ஏதுநிலைகளில் குடியிருப்பு களை வைத்திருந்த 10 பேருக்கு சாவகச்சேரி நீதிமன்றால் நேற்று தலா 3 ஆயிரம் ரூபா வீதம் தண்டம் விதிக்கப்பட்டது.

சாவகச்சேரி சுகாதாரத் திணைக்களத்தினர், பிரதேச செயலகத்தினர், சாவகச்சேரி நகரசபையினர் , சாவகச்சேரி சுற்றாடல் பாதுகாப்பு பொலிஸார் ஆகியோர் இணைந்து கடந்த வாரம் டெங்குத் தொற்றின் தாக்கம் அதிகமாகவுள்ள பிரிவுகளில் விசேட டெங்குக் கட்டுப்பாட்டுச் செயற்பாடுகளை மேற்கொண்டனர்.

தென்மராட்சிப் பிரதேசத்தில் டெங்கு நுளம்புகளால் பீடிக்கப்பட்டு சிகிச்சை பெறுவோரின் எண்ணிக்கை அதிகரித்து வருவதால், பிரதேசடெங்குக் கட்டுப்பாட்டுக் குழுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானப் பிரகாரம் டெங்கு நுளம்பால் பாதிப்பு அதிகமாக இனங்காணப்பட்ட பகுதிகளில் விசேட டெங்குத் தொற்றுப் பரிசோதனைகள் நடத்தப்பட்டன.

கல்வயல், நுணாவில் ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளிலும், மட்டு வில் வடக்கு, மட்டுவில் தெற்கு ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளிலும் , சாவகச்சேரி நகரம், கோயிற்குடியிருப்பு, சங்கத்தானை ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளிலும் டெங்குப் பரிசோதனைகள் நடத்தப்பட்டன. இந்தப் பகுதிகளில் டெங்கு நுளம்பின் குடம்பிகள் காணப்பட்ட இடங்களின் உரிமையாளர்கள் 10 பேருக்கு எதிராக பொலிஸாரால் சாவகச்சேரி நீதிமன்றில் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன.

இந்த வழக்குகள் நேற்றுத் தனித்தனியாக விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது குடியிருப்பாளர்கள் குற்றத்தை ஒப்புக்கொண்டதையடுத்து, பத்துப் பேருக்கும் தலா 3 ஆயிரம் ரூபா வீதம் அபராதம் விதிக்கப்பட்டது.

கடந்த 3 தினங்களில் மேற்கொள்ளப்பட்ட விசேட டெங்குக் கட்டுப்பாட்டுச் செயற்பாடுகளில் டெங்கு நுளம்பு உற்பத்தியாகக் கூடிய ஏதுநிலையில் குடியிருப்புகளை வைத்திருந்த 24 பேருக்கு எதிராக , சாவகச்சேரி பொலிஸாரால் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டு அனைவருக்கும் நீதிமன்றால் தண்டம் விதிக்கப்பட்டது. (ஐ - 9)

# கண்ணீர் அஞ்சலி



திருமதி **பத்மநாயகி (பத்மா) ஞானசம்பந்தன்**

எமது றைற்றோன் துடுப்பாட்டக் கழக ஸ்தாபகர் திரு.P. சிவகுமார் அவர்களின் சிறிய தாயாரும், திரு.ஞா.டிலக் ஷன் அவர்களின் அன்புத் தாயாரும், திருமதி P. சோதிநாயகி, மண்டலநாயகி, Dr. P. கிருபரன் ஆகியோரின் சகோதரியுமான **திருமதி பத்மநாயகி (பத்மா) ஞானசம்பந்தன்** அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அவர்களின் துயரில் நாமும் பங்குகொள்கின்றோம்.

**அங்கத்தவர்கள், றைற்றோன் துடுப்பாட்டக் கழகம்.**

# கன்ரர் (CANTER) வாகனம் வாடகைக்கு அமர்த்துதல்

THE HALO TRUST

ஹெலோ ரஸ்ட் ஆனது பிரித்தானியாவை தளமாகக் கொண்டு உலகளாவிய ரீதியில் 16நாடுகளில் இயங்கிக்கொண்டிருக்கிறது. இலங்கையில் 2002 ஆம் ஆண்டு தொடக்கம் மிதிவெடிகள் மற்றும் வெடிக்கத்தக்க பொருள்களை அகற்றிக்கொண்டிருக்கின்றது.

எமதுபணியாளர்போக்குவரத்திற்காககன்ரர்ரகவாகனங்களை சாரதி இன்றி வாடகைக்கு அமர்த்தவுள்ளோம். பின்வரும் வசதிகளைக் கொண்ட வாகன உரிமையாளர்கள் தங்களது கூறுவிலைகளை (Quotations) மூடிய கடித உறையினுள் இட்டு எதிர்வரும் 9ஆம் திகதி பங்குனி மாதம் 2017 வியாழக்கிழமைக்கு முன்னதாகக் கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

1. பின் உடற்கோப்பு (Body) நீளம் 15 அடிக்கு மேல் இருத்தல் வேண்டும்.
2. இருபக்க இருக்கை சார்மனையுடன் (Back Rest) கூடியதாக இருத்தல் வேண்டும்.
3. மூடிய கூரையமைப்பினைக் (Closed Roof) கொண்டதாக இருத்தல் வேண்டும்.
4. பின்பக்க மிதிபலகை (Foot Board) இருத்தல் வேண்டும்.

**நிகழ்ச்சித் திட்ட முகாமையாளர்**
**ஹெறலோ ரஸ்ட்,**
**450, திருநகர் மேற்கு, கிளிநொச்சி.**

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

# சபிண்டீகரண அழைப்பும் நன்றி நவிலலும்



கடந்த 15.02.2017 புதன்கிழமை
சிவபதமடைந்த
**அமரர் இராமமூர்த்தி சண்முகநாதன் (ஸ்தபதி)**

பிறப்பு 10.07.1981
இறப்பு 15.02.2017

அன்னாரின் துயரச் செய்தி கேட்டு கண்ணீர் அஞ்சலி தெரிவித்தவர்களுக்கும், தொலைபேசி அழைப்புக்களை மேற்கொண்டு துயர் பகிர்ந்து கொண்டோருக்கும் மற்றும் சகல வழிகளிலும் உதவியோர்களுக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அத்துடன் சபிண்டீகரணக் கிரியைகள் இன்று (01.03.2017) புதன்கிழமை கொழும்பு முகத்துவாரம் கடற்கரையில் நடைபெற்று வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் நாளை (02.03.2017) வியாழக்கிழமை தம்பையா சத்திரம் கொச்சிக்கடையில் நடைபெறும். அத்தருணம் தாங்களும் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**குடும்பத்தினர்.**

# கொட்டாம்பிட்டிக்கு நேற்று முதல் குடிதண்ணீர் விநியோகம்

சாவகச்சேரி, மார்ச் 1

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட மீசாலை மேற்கு கொட்டாம்பிட்டிப் பகுதிக்கு நீர்த் தாங்கி மூலம் குடிதண்ணீர் விநியோகம் நேற்று தொடக்கம் ஆரம்பிக்கப்பட்டது.

"இந்தப் பகுதியில் குடிதண்ணீருக்குத் தட்டுப்பாடு காணப்பட்டது. அதிக தூரம் சென்று குடிதண்ணீர் பெற்று வருவதாக அந்தப் பகுதி மக்கள் சாவகச்சேரி நகர சபைச் செயலாளரிடம் முறையிட்டனர். கடந்த வருடம் கிராமத்துக்கு ஒரு மில்லியன் ரூபா வேலைத் திட்டத்தில் 5 லட்சம் ரூபா நிதியில் குடிதண்ணீர் தொட்டிகளும் குடிதண்ணீர் தாங்கியும்

கொள்வனவு செய்வது என்று முடிவு செய்யப்பட்டது. இதன் பிரகாரம் கொள்வனவு செய்யப்பட்ட 5 குடிதண்ணீர் பிளாஸ்ரிக் தொட்டிகள் கிராமத்தின் ஐந்து இடங்களில் பொருத்தப்பட்டன. இந்த தொட்டிகளுக்கு நகர சபையினால் தினமும் தண்ணீர்த் தாங்கி மூலம் குடிதண்ணீர் வழங்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன" என்று சாவகச்சேரி நகர சபைச் செயலாளர் நா.சண்முகதாசன் தெரிவித்தார். (வ-9)

# மைத்திரியின் தாமதம் நாட்டையே சீரழித்துவிடும்

## அத்துரலிய ரத்ன தேரர் தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 1

"நாட்டின் தேசிய கொள்கைக்கு எதிரான நடவடிக்கைகள் நடக்குமாயின் அதற்கு எதிராக அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தீர்மானங்களை எடுக்கத் தாமதிக்கக் கூடாது. அவ்வாறு தாமதிப்பதனால்தான் நாடு பாதாளத்துக்குள் இட்டுச் செல்லப்படுகின்றது"

இவ்வாறு அத்துரலிய ரத்ன தேரர் தெரிவித்தார்.

தேசிய மகா சபையின் கன்னிக் கூட்டம் கொழும்பில் நேற்று இடம்பெற்றது. அதில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் தேரர் மேற்கண்டவாறு தெரிவித்தார். நிகழ்வில் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவும் முதன்மை அதிதியாக கலந்துகொண்டார். அதில் அத்துரலிய ரத்ன தேரர் மேலும் தெரிவித்ததாவது:

இந்த நாடு கற்றறிந்தோரின் அறிவுரைக்கு ஏற்ப வழிநடாத்தப்பட வேண்டும். சொகுசு அறைகளுக்குள் இருந்து கொண்டு தங்களுக்கு வேண்டிய பிரகாரம் தீர்மானம் எடுப்பவர்களுக்கு எதிராக இந்த மகா சபை தீர்மானத்தை நிறைவேற்றும் என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அரச தலைவருக்கு இந்த இடத்தில் நாம் ஒன்றைத் தெரிவித்துக் கொள்கின்றோம். கடந்த தேர்தலில் மகிந்த ராஜபக்சவோ, ரணில் விக்கிரமசிங்கவோ வெற்றி பெறவில்லை. நீங்களே வெற்றி பெற்றீர்கள். அந்த இருவருக்கும் அரசை அமைக்க இந்த நாட்டில் அதிகாரம் கிடைக்கவில்லை.

அரச தலைவரான உங்களுக்கு தீர்மானம் எடுக்க அதிகாரம் உள்ளது. நீங்கள் ஏன் தாமதிக்கின்றீர்கள்? நீங்கள் தாமதிக்கும் ஒவ்வொரு பொழுதும் இந்த நாடு இருளுக்குள் பயணிக்கின்றதுஎன்றார். (வ-4)

## மரண அறிவித்தல்கள்



**திருமதி மரகதம் கிருஷ்ணபிள்ளை**

ஊர்காவற்றுறை,சுருவிலைப் பிறப்பிடமாகவும் கொழும்பு கொட்டாஞ்சேனையை வசிப்பிடமாகவும் யாழ். நகர் பாண்டியன் தாழ்வை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மரகதம் கிருஸ்ணபிள்ளை 26.02.2017 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுந்தரம்பிள்ளை - தையல்முத்து தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற கிருஸ்ணபிள்ளையின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம் - ஆச்சிமுத்து தம்பதியரின் மருமகளும் கௌசலாவின் அன்புத் தாயாரும் ஜெயபாலனின் அன்பு மாமியாரும் காலஞ்சென்றவர்களான பேரம்பலம் , மகாலிங்கம் ஆகியோரின் சகோதரியும் பகவதி, காலஞ்சென்ற கனகரெட்ணம் ஆகியோரின் உடன் பிறவா சகோதரியும் சிந்துஷா, ஆதவன் .காலஞ்சென்ற மாதுளன் மற்றும் கீர்த்திகா , பதுசனன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஏகநாயகி(தேவா), காலஞ்சென்ற புவனேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனியும் அமிர்தலெட்சுமி, சிறிஸ்கந்தராஜா, ஆனந்தி ஆகியோரின் சிறிய தாயாரும் வசந்தி, கரன், ஜெயந்தி, சுதா, தயா, பாமா, கேமா, கண்ணண், கேதி, சிவகுமார் ஆகியோரின் உறவுவழி அத்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.03.2017) புதன்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு பாண்டியன்தாழ்வில் உள்ள இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொழும்புத்துறை துண்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

54/12, கொழும்புத்துறை வீதி,
பாண்டியன்தாழ்வு,
யாழ்ப்பாணம்.

தகவல்:
கனிஸன் – 077 711 1084
ஜெயபாலன் – 003 164 613 8310

### காணாமல் ஆக்கப்பட்ட உறவினர்களின் போராட்டம்

# கிளிநொச்சியில் 9ஆவது நாளாகவும் தொடர்கிறது

கிளிநொச்சி, மார்ச் 1



வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களை ஒப்படைக்குமாறு கோரி, அவர்களது உறவுகளால் கிளிநொச்சியில் முன்னெடுக்கப்படும் தொடர் போராட்டம் நேற்று 9ஆவது நாளாகவும் முன்னெடுக்கப்பட்டது.

கிளிநொச்சி கந்தசுவாமி ஆலய முன் றிலில், கிளிநொச்சி மாவட்டத்தில் போர் இடம்பெற்ற காலத்தில் வலிந்து காணாமல் போனவர்கள், கடத்தப்பட்டவர்கள் அரசியல் கைதிகள் மற்றும் இராணுவத்திடம் ஒப்படைக்கப்பட்டவர்களின் விடுதலை மற்றும் தெளிவான வெளிப்படுத் தலையும் வலியுறுத்தி இரவுபகல் பாராது அவர்களின் உறவினர்கள் இந்தத் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

கடந்த 20 ஆம் திகதி ஆரம்பமான இந்தப் போராட்டத்துக்கு பல்வேறு தரப்பினரும் ஆதரவு வழங்கி வருகின்றனர்.

இதேவேளை நேற்று, கிளிநொச்சி கந்தசுவாமி ஆலய நிர்வாகத்தினர், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்காக விசேட பூசையை நடத்தியதுடன், போராட்டத்தில் ஈடுபட்டுள்ள உறவினர்களுக்கு மதிய உணவையும் வழங்கி வைத்தனர்.

அத்தோடு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளு மன்ற உறுப்பினர்கள், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை உறுப்பினர்கள் மக்களைச் சந்தித்து அவர்களுக்கு ஆதரவு வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஜ-6)

## மாசி மக திருவிழா

மாதகல், மார்ச் 1

சண்டிலிப்பாய், மாதகல் கூடல் விளாத்தி ஸ்ரீ சாந்த நாயகி அம்பிகா சமேத ஸ்ரீ சந்திரமௌலீஸ்வர சுவாமி ஆலய மாசி மக பெருந்திருவிழா நாளை வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது.

எதிர்வரும் 10ஆம் திகதி தேர்த்திருவிழாவும், மறுநாள் மாசி மகத்தில் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டது. (வ-10)

## புதிய நிர்வாகம் தெரிவு

யாழ்ப்பாணம், மார்ச் 1

மூளாய் சாலை வட்டுக்கோட்டை ஐக்கிய நாணய சங்கத்தின் பொதுக்கூட்டம் அண்மையில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் புதிய நிர்வாக சபை உறுப்பினர்கள் தெரிவு இடம்பெற்றது. தலைவராக க.இராதாகிருஷ்ணனும், உபதலைவராக அ.ரமேஷும், செயலாளராக ப.அருள்ராஜனும், பொருளாளராக வே.சுப்பிரமணியமும், நிர்வாக உறுப்பினர்களாக த.தருமலிங்கமும், திருமதி வ.சர்மிளாவும், சு.சுஜித்தா ஆகியோரும் உள்ளக கணக்காய்வாளராக த.நாராயணன், நா.நாகசெல்வமும் தெரிவுசெய்யப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது. (வ-10)

## மரண அறிவித்தல்

**திருமதி பத்மினி சிவநேசன்**




கட்டுடை மானிப்பாயை, பிறப்பிடமாகவும் அளவெட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பத்மினி சிவநேசன் நேற்று (28.02.2017) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்கள்ளான சண்முகதாசன் - தெய்வானைப் பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம் -சீதேவிப்பிள்ளை தம்பதியரின் அன்புமருமகளும் சிவநேசன் (ஓய்வு பெற்ற ஆசிரியர்) இன் அன்புமனைவியும் கணேஷாயினி (அமெரிக்கா), கணேந்திரா (முகாமைத்துவ உதவியாளர்-கல்வித்திணைக்களம், வடக்கு மாகாணம்) ஆகியோரின் பாசமிகு தாயும் பிரபாகரன் (பொறியியலாளர் - அமெரிக்கா), சுபத்திரா (ஆசிரியை, காரைநகர் இந்துக்கல்லூரி) ஆகியோரின் அன்பு மாமியும் யாழன் (அமெரிக்கா), ஜனனி (அமெரிக்கா), டஸ்வினி ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் காலஞ்சென்ற சிவகுமாரன் மற்றும் ரதிதேவி, ராஜீவி, உஷா, லோகினி, யோகினி, சிவயோகம் ஆகியோரின் அன்புச்சகோதரியும் பாலகிருஷ்ணன், கணேஸ்வரன், குமரேசன், நாகேஸ்வரி, மனோகரன் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.03.2017) புதன்கிழமை பி.ப. 2 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பி.ப. 3 மணியளவில் தகனக்கிரியைக்காக கேணிப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**அளவெட்டி வடக்கு,**
**அளவெட்டி.**

**தகவல் :**
**சி. கணேந்திரா (மகன்)**



**சண்முகநாதன் விமலானந்தன்**
**(கண்ணன்)**

அரியாலை, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் கரும்புள்ளியான், நட்டாங்கண்டலை வதிவிடமாகவும் கொண்ட சண்முகநாதன் விமலானந்தன் 25.02.2017 அகாலமரணமடைந்துள்ளார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரின் இல்லத்தில் இன்று (01.03.2017) புதன் கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் நடைபெற்று பூதவுடல் நட்டாங்கண்டல் இந்து மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும் என்பதனை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**கரும்புள்ளியான்,**
**நட்டாங்கண்டல்.**

**தகவல்**
**குடும்பத்தினர்.**

# முல்லை. மக்களுக்கு ஆதரவாக சட்ட மாணவர்கள் கவனவீர்ப்பு




யாழ்ப்பாணம், மார்ச். 1

பிலக்குடியிருப்பு மற்றும் புதுக்குடியிருப்பு மக்களின் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்து, யாழ்ப்பாண பல்கலைக்கழக சட்டத்துறை மாணவர்கள் நேற்றுக் கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் பிலக்குடியிருப்பு மற்றும் புதுக்குடியிருப்பு மக்கள் கடந்த ஒரு மாத காலமாக தமது காணிகளை விடுவிக்குமாறு கோரி போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இவர்களுக்கு பல்வேறு தரப்பினரும் ஆதரவு வழங்கி வருகின்றனர்.

தமிழ் முற்போக்கு கூட்டணியின் சார்பாக கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வேலுகுமார், கொழும்பு மாநகர சபையின் முன்னாள் உறுப்பினர் சு.பாஸ்கரா ஆகியோர் பிலக்குடியிருப்பு மற்றும் புதுக்குடியிருப்புக்கு நேரில் சென்று தமது ஆதரவைத் தெரிவித்தனர்.

இதேவேளை, முல்லைத்தீவு மக்களின் அறவழிப் போராட்டத்துக்கு ஆதரவாக யாழ்ப்பாண பல்கலைக்கழக சட்டத் துறை மாணவர்கள், பல்கலைக்கழக முன்றிலில் நேற்றுக் காலை கவனவீர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்தனர். (வ-5)

## ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்தில் தொண்டுப்பணிகள் திங்களன்று முன்னெடுப்பு

முல்லைத்தீவு.மார்ச்.1

ஒட்டுசுட்டான் பிரதேச செயலக வளாகத்தில் டெங்கு நுளம்புப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்தும் முகமாக , மாபெரும் சிரமதானப் பணிகள் நேற்றுமுன்தினம் காலை9 மணிமுதல்பிற்பகல்4மணிவரை முன்னெடுக்கப்பட்டன. இந்தச் சிரமதானப் பணிகளில் பிரதேச செயலக பதவி நிலை உத்தியோகத்தர்கள் முதல் கிராம உத்தியோகத்தர்கள்,சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், மற்றும் அலுவலக ஊழியர்கள் அனைவரும் கலந்து கொண்டனர். இந்தச் செயற்பாடானது ஏனைய திணைக்களங்கள், அலுவலகங்கள் மற்றும் பொது மக்களுக்கு ஒரு முன் மாதிரியான செயற்பாடாக அமைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஜ - 102)

## ஊடகவியலாளர்களுக்கு நீதிகேட்டு வவுனியாவில் சனியன்று கவனவீர்ப்பு

வவுனியா, மார்ச் 1

கடத்தப்பட்டு, காணாமல் ஆக்கப்பட்ட மற்றும் படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்களுக்கு நீதிகோரி, வவுனியா மாவட்ட ஊடகவியலாளர் சங்கத்தின் ஏற்பாட்டில் வவுனியாவில் எதிர்வரும் 4 ஆம் திகதி சனிக்கிழமை கவனவீர்ப்புப் போராட்டம் நடத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

வவுனியா முதன்மைப் பேருந்து நிலையம் முன்பாக முற்பகல் 10 மணி முதல் 12 மணி வரை இந்தக் கவனவீர்ப்புப் போராட்டம் நடைபெறவுள்ளது.

வடக்கு, கிழக்கு உள்ளிட்ட அனைத்து மாவட்டங்களையும் சேர்ந்த ஊடக அமைப்புக்கள் மற்றும் ஊடகவியலாளர்களையும் கலந்து கொள்ளுமாறு ஏற்பட்டாளர்கள் கேட்டுள்ளனர். (வ-101)

## கால்நடைகள் திருட்டு நீர்வேலியில் அதிகரிப்பு

நீர்வேலி, மார்ச் 1

நீர்வேலி தெற்குப் பகுதியில் கால்நடைகளை திருடிச் செல்லும் சம்பவங்கள் அதிகரித்துள்ளன என்று பொது மக்களால் தெரிவிக்கப்பட்டது.

ஞானவைரவர் கோயிலடிப் பகுதியில் ஆனந்தராசா என்பவர் வீட்டு வளவில் கட்டப்பட்டிருந்த இரண்டு வளர்ப்பு ஆடுகளை திருடர்கள் நேற்று முன்தினமிரவு திருடிச் சென்றுள்ளனர். வீட்டின் பின்புறத்தில் உள்ள கொட்டகையில் கட்டப்பட்ட கடா ஆடும், மறி ஆடுமே இவ்வாறு திருடிச் செல்லப்பட்டுள்ளன.

இந்தப் பகுதியில் கடந்த வாரமும் வீடு ஒன்றில் பின்புறத்தில் கட்டப்பட்ட ஆடு ஒன்றைத் திருடர்கள் திருடிச் சென்றுள்ளனர். இதனைவிட நீர்வேலி மற்றும் கோப்பாய் தரவை நிலங்கள் மற்றும் தோட்டங்களில் மேய்ச்சலுக்காக கட்டப்படும் கால்நடைகளும் இவ்வாறு திருடப்படுவதாக பிரதேச மக்கள் தெரிவித்தனர். (வ-17)

*யாழ். மாநகர சபையால்*

## வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பூசி போடும் பணி இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், மார்ச் 1

யாழ்ப்பாண மாநகர சபை எல்லைக்குள் அமைந்த யாழ். நகர் 1 பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர் நோய்த் தடுப்பூசி ஏற்றப்படவுள்ளதாக யாழ்ப்பாண மாநகர சபை சுகாதார மருத்துவ அதிகாரி அறிவித்தார்.

முத்தமிழ் வீதி பாலர் பாடசாலையில் இன்று புதன்கிழமை காலை 9 மணி தொடக்கம் 11 மணிவரையும் மீனாட்சி அம்மன் கோயிலடியில் மு.ப 11 மணியில் இருந்து பி.ப 1 மணி வரையும் நமசிவாயம் பாடசாலை முன்பாக பி.ப 2.30 மணியிலிருந்து மாலை 4 மணிவரையும்

கூழாவடி வைரவர் கோவிலடியில் நாளை வியாழக்கிழமை காலை 9 மணி தொடக்கம் மு.ப 11 மணி வரை ரிம்பர் கோல் பகுதியில் மு.ப.11மணிதொடக்கம் பி.ப1மணி வரையும் சிறாம்பியடி சனசமூக நிலையத்தில் பி.ப. 2.30 மணிதொடக்கம் மாலை4 மணி வரையும்

பலாலி வீதி 2ஆம் ஒழுங்கை பகுதியில் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை 9 மணிதொடக்கம் 11 மணிவரையும் யாழ் வீதியில் மு.ப.11 மணிதொடக்கம் 1 மணிவரையும் பெருமாள் கோயிலடியில் பி.ப 2.30 மணி தொடக்கம் மாலை 4 மணிவரையும் வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர் நோய்த் தடுப்பூசி ஏற்றப்படும்.

றொலெக்ஸ் பேக்கரியடியில் எதிர்வரும் 6ஆம் திகதி திங்கட்சிழமை காலை 9 மணி தொடக்கம் 11 மணி வரையும் கன்னாதிட்டி காளி கோயிலடியில் மு.ப.11 மணிதொடக்கம் பி.ப 1 மணிவரையும் சிவன் வடக்கு வீதி பாலர் பாடசாலையில் பி.ப 2.30 தொடக்கம் மாலை 4 மணிவரையும்

கீரிப்பிள்ளையார் கோயிலடியில் எதிர்வரும் 7ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9 மணி தொடக்கம் 11 மணிவரையும் மாவடி வீதியில் மு.ப.11 மணிதொடக்கம் பி.ப1மணி வரையும் பிரப்பன்குளம் வீதியில் பி.ப 2.30 தொடக்கம் மாலை 4 மணிவரையும்

BA தம்பி லேனில் எதிர்வரும் 8ஆம் திகதி காலை 9 மணி தொடக்கம் 11 மணிவரையும்கில்னர் வீதியில் மு.ப.11 மணிதொடக்கம் பி.ப 1மணிவரையும் மானிப்பாய் வீதிச் சந்தி, கூல்பார் ஆகிய இடங்களில் பி.ப 2.30 தொடக்கம் மாலை 4 மணிவரையும்

தொடர்ந்து எதிர்வரும் 12 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணியிலிருந்து மாலை 4 மணி வரை அனைத்து பகுதியிலும் நடமாடும் சேவையாக வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர் நோய்த் தடுப்பூசி ஏற்றப்படும் என்று யாழ்ப்பாண மாநகர சபை சுகாதார மருத்துவ அதிகாரி தெரிவித்தார். (வ)

## பண்பாட்டுப் பேரவை பொதுக் கூட்டம் நாளை

யாழ்ப்பாணம், மார்ச். 1

வலிகாமம் கிழக்குப் பண்பாட்டுப் பேரவை பொதுக் கூட்டம் நாளை வியாழக்கிழமை பி.ப 3 மணிக்கு கோப்பாய் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது.

வலிகாமம் கிழக்கு பிரதேச செயலர் திருமதி சுபாஜினி மதியழகன் தலைமையில் நடைபெறவுள்ள பொதுக் கூட்டத்தில் பேரவை அங்கத்தவர்கள், கலைஞர்கள், கலை ஆர்வலர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (வ-10)

## இந்து மயானத்தின் வேலித் தூண்கள் விசமிகளால் உடைப்பு

கொடிகாமம், மார்ச். 1

வரணி, இடைக்குறிச்சி இந்து மயானத்தின் பாதுகாப்புக்காகச் சுற்றிவர அமைக்கப்பட்ட முட்கம்பி வேலியின் தூண்கள் விசமிகளால் அண்மையில் அடித்து உடைக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது

இந்து மயானம் அமைந்துள்ள பகுதி ஊடாக மணல் கடத்தும் வாகனங்கள் இரவுவேளைகளில் பயணிப்பதாகக் கூறப்பட்டது. அந்தப் பாதையை மூடி அண்மையில் முட்கம்பி வேலி அடைக்கப்பட்டுள்ளது. அந்த வேலியின் கொங்கிறீட் தூண்களே இவ்வாறு அடித்து உடைக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. (வ-122)

## மாணவர் நாடாளுமன்ற வாக்குப்பதிவு நாளை

தென்மராட்சி, மார்ச். 1

கச்சாய் அரசினர் தமிழ் கலவன் பாடசாலையின் இரண்டாவது மாணவர் நாடாளுமன்ற தேர்தல் நாளை வியாழக்கிழமை பி.ப.1.30 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டது.

பாடசாலையின் அதிபரும் மாணவர் நாடாளுமன்ற செயலாளர் நாயகமுமான கா.குணசிங்கம் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் வலய உதவிப் பிராந்திய அதிகாரியாக தென்மராட்சி கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் நா.கந்ததாசனும் உதவிப் பிராந்திய அதிகாரியாக வலய ஆலோசனையும் வழிகாட்டலும் பிரிவு சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் வே.க.சந்திரகுமாரும் கலந்து கொள்வர்

தென்மராட்சி கல்வி வலயத்தில் இரண்டாவது மாணவர் நாடாளுமன்றம் முதலாவதாக கச்சாய் அ.த.க.பாடசாலை அமைக்கின்றது.வலயத்தைச் சேர்ந்த 18 பாடசாலைகளில் மாணவர் நாடாளுமன்றம் செயற்பட்டு வருகின்றது. (வ - 9)

## உடற்கல்வி ஆசிரியர்களுக்கு இன்று செயலமர்வு

யாழ்ப்பாணம், மார்ச் 1

யாழ்ப்பாண கல்வி வலயத்துக்குட்பட்ட உடற்கல்வி ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல் யாழ்ப்பாண வலயக் கல்வி அலுவலக முகாமைத்துவ மண்டபத்தில் இன்று பி.ப. 1 மணிக்கு நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது. கலந்துரையாடலில் அனைத்து உடற்கல்வி ஆசிரியர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு யாழ்ப்பாண கல்வி வலய உடற்கல்வி உதவி கல்விப் பணிப்பாளர் சண் தயாளன் கேட்டுள்ளார். (வ)

# மருத்துவர் அம்பிகைபாகனின் உருவப்படம் திரை நீக்கம் நாளை

தென்மராட்சி, மார்ச் 1

சாவகச்சேரி வைத்தியசாலையில் நீண்டகாலம் பணியாற்றி ஆயிரக்கணக்கான நோயாளர்களின் மனதில் நீங்கா இடம்பிடித்தவரும் சாவகச்சேரி வைத்தியசாலையின் இன்றைய வளர்ச்சிக்கு காரணகர்த்தாவாக திகழ்ந்தவருமான அமரர் மருத்துவர் சங்கரப்பிள்ளை அம்பிகைபாகனின் ( கடவுள் ) உருவப்படம்திரைநீக்கமும் நினைவஞ்சலிக் கூட்டமும் நாளை வியாழக்கிழமை பி.ப. 2.30 மணிக்கு வைத்தியசாலை சிகிச்சைப் பிரிவு மண்டபத்தில் இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டது.

வைத்தியசாலைப் பணியாளர்களின் ஏற்பாட்டில் இடம்பெறவுள்ள இந்த நிகழ்வில் மருத்துவர் அம்பிகைபாகனின் நினைவாக மேற்கொள்ளப்படவுள்ள நடைமுறைத் திட்டங்கள் தொடர்பான அபிப்பிராயங்கள் கோரப்படவுள்ளதால் அவரின் சேவையை மதித்து அனைவரையும் கலந்து கொள்ளுமாறு வைத்தியசாலை நிர்வாகம் கேட்டுள்ளது. (வ -9)

## ஞான வைரவருக்கு வருடாந்தத் திருவிழா

யாழ்ப்பாணம்,மார்ச்.1

நீர்வேலி தெற்கு ஞான வைரவர் ஆலயத்தின் வருடாந்தத்திருவிழா இன்று புதன்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து 11 நாள்கள் இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டது.

இன்று காலை சிறப்பு முழுக்கு வழிபாடுகள் இடம்பெற்று மாலையில் சுவாமி வீதி உலா வரும் காட்சி நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டது. (வ-17)

# கரந்தாய் மக்களின் காணிப் பிரச்சினைக்கு இன்னமும் தீர்வில்லை

கிளிநொச்சி, மார்ச் 1
கரந்தாய் மக்களின் காணிப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக அமைச்சர் நவீன் திசாநாயக்கா உறுதியளித்து 25 நாள்கள் கடந்துள்ள நிலையில், இன்னமும் கூட்டம் நடத்துவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.

இதனால் அந்த மக்கள் தமது காணிகளுக்குச் செல்ல முடியாத அவலநிலை தொடர்கின்றது.

கிளிநொச்சி பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட கிராமமே கரந்தாய். இங்கு 1976 ஆம் ஆண்டு முதல் வாழ்ந்து வந்த மக்கள் போர்ச் சூழல் காரணமாக இடம்பெயர்ந்து ஏனைய பிரதேசங்களில் வசித்தனர்.

பின்னர் போர் மௌனிக்கப்பட்டதும், அந்தப்பகுதி மக்கள் மீள்குடியமர்வு செய்யப்பட்டனர். மீள்குடியமர்ந்த மக்களின் காணிகளை ஆரம்பத்தில் தென்னைப் பயிர்ச்செய்கை சபையினர் தமக்குரிய காணி எனக்கூறி அவர்களை அங்கிருந்து வெளியேற்ற முற்பட்டனர்.

பின்னர் பளை பொலிஸாரின் உதவியுடன் மக்களை வெளியேற்றியதுடன் அவர்கள் நிர்மாணித்திருந்த வீடுகளும் இடிக்கப்பட்டன.

சில மாதங்களின் பின்னர் கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் மாகாண சபை உறுப்பினர் அரியரத்தினம், கரந்தாய் காணி தொடர்பாக சில நடைமுறைகளை இணைத்தலைவர்களின் கவனத்துக்குக் கொண்டு வந்தார். அங்கு கலந்து கொண்ட தென்னை உற்பத்திச் சபை அதிகாரி, குறித்த காணியில் முதலீடுகள் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

காணிசீர்திருத்த ஆணைக்குழு சார்பாக கலந்துகொண்ட அதிகாரி, குறித்த காணி மக்களுக்குரியதேஎன்றுசுட்டிக்காட்டியிருந்தார். தொடர்ந்து இணைத்தலைவர்கள் குறித்த காணி மக்களிடம் கையளிக்கப்பட வேண்டும் என்று தீர்மானம் கொண்டு வந்தனர்.

இந்தத் தீர்மானம் கொண்டுவரப்பட்டு கிட்டத்தட்ட 9 மாதங்கள் கடந்த நிலையிலும், இதுவரை அந்தக் காணிகள் மக்களிடம் கையளிக்கப்படவில்லை.

இந்த விடயம் தொடர்பாக பச்சிலைப்பள்ளிப் பிரதேச செயலர் பி.ஜெயராணியிடம் கேட்ட போது கரந்தாய் மக்களின் பிரச்சனைக்கு இதுவரை சாதகமான தீர்வு கிடைக்கவில்லை.

மீள்குடியேற்ற அமைச்சில் இருந்து குறித்த காணி தொடர்பாக விவரங்கள் கேட்டும் பெற்றுக் கொண்டனர். ஆனால் இதுவரை முடிவுகள் ஏதும் எட்டப்படவில்லை என்றார் .

கிளிநொச்சி மாவட்ட செயலருடன் தொடர்பு கொண்டு கேட்ட போது, கூட்டம் நடத்தப்படுவது தொடர்பாக இதுவரை எமக்கு அறிவிக்கவில்லை. அமைச்சின் மூலம் கூட்டம் நடத்தப்பட்டு மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டும் என்றார்.

இணைத்தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சி.சிறீதரன் தெரிவித்ததாவது
நாடாளுமன்றத்தில் இந்தக் காணி விடயம் தொடர்பாக கதைத்துள்ளேன். தனிநபர் பிரேரணை மூலம் இந்தக் காணி தொடர்பாக கதைத்த போது, ஆரம்பத்தில் விடாபிடியாக நின்ற அமைச்சர் நவீன் திஸ்ஸநாயக்க, பின்னர் மீள்குடியேற்ற அமைச்சர் சுவாமிநாதன் தலைமையில் கிளிநொச்சி மாவட்ட செயலாளர் முன்னிலையில் கூட்டம் ஒன்றை ஏற்பாடு செய்து கரந்தாய் காணி தொடர்பாக முடி வெடுக்கபடும் எனத் தெரிவித்திருந்தார். ஆனால் இதுவரை கூட்டம் நடைபெறவில்லை. முடிவும் எடுக்கப்படவில்லை.

இது தொடர்பாக துறைசார் அதிகாரிகளுடன் கலந்துரையாடப்படும்-என்றார். (ஐ-6)

## ரணில் – நசீர் நேரில் சந்திப்பு

### கிழக்குப் பட்டதாரிகள் போராட்டம் தொடர்பில்

களுவாஞ்சிக்குடி, மார்ச்.1
கிழக்கு மாகாண வேலையற்ற பட்டதாரிகள் விவகாரம் தொடர்பில், கிழக்கு முதலமைச்சர் ஹாபிஸ் நசீர் அஹமட் மற்றும் தலைமை அமைச்சர் ரணில் விக்ரமசிங்க ஆகியோருக்கிடையிலான சந்திப்பொன்று நேற்று இடம்பெற்றது.

அலரிமாளிகையில் இடம்பெற்ற இந்தச் சந்திப்பில் கிழக்கு மாகாண பட்டதாரிகள் மற்றும் கிழக்கு மாகாணத்தின் ஆளணி வெற்றிடங்கள் உட்பட பல விடயங்கள் தொடர்பில் ஆராயப்பட்டன.

அத்துடன் கிழக்கு மாகாண பட்டதாரிகளின் கோரிக்கைகள் மற்றும் அவர்களின் துயரநிலை தொடர்பில் முதலமைச்சர், தலைமை அமைச்சருக்கு விரிவாக எடுத்துரைத்ததுடன், பட்டதாரிகளின் கோரிக்கைகள் அடங்கிய மனுவையும் தலைமை அமைச்சரிடம் கையளித்தார்.

கிழக்கு மாகாணத்தில் உள்ள வேலையில்லாப் பட்டதாரிகளின் முழுமையான தரவுகள் மற்றும் மாகாணத்தில் உள்ள அரச வெற்றிடங்கள் ஆகியவற்றை முழு அறிக்கையாக சமர்ப்பிக்குமாறு தலைமை அமைச்சர் ரணில் விக்ரமசிங்க இதன் போது முதலமைச்சருக்கு பணிப்புரை விடுத்தார்.

இதுதொடர்பான அறிக்கையை நாளை (இன்று) தலைமை

## வடக்கு வைத்தியசாலைத் தாதியர்கள் ஒரு மணி நேரப் பணிப்புறக்கணிப்பு


யாழ்ப்பாணம்


வவுனியா

யாழ்ப்பாணம், மார்ச்.1
மூன்று அம்சக் கோரிக்கைகளை வலியுறுத்தி யாழ்.போதனா வைத்தியசாலை மற்றும் வவுனியா மாவட்ட வைத்தியசாலைகளின் தாதியர்கள் நேற்று ஒரு மணி நேரப் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டனர்.

தாதியர் சங்கத்தின் ஏற்பாட்டில் நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்ட போராட்டத்துக்கு ஆதரவுதெரிவிக்கும்வகையில், யாழ்ப்பாணம், வவுனியா வைத்தியசாலைத் தாதியர்களும் நேற்று நண்பகல் 12 மணிமுதல் 1 மணி வரை குறித்த போராட்டத்தை முன்னெடுத்தனர்.

"சுகாதார அமைச்சால் பரிந்துரை செய்யப்பட்ட மேலதிக கொடுப்பனவை உடனடியாக வழங்கு, 10 வருடமாக உள்ள பதவியுயர்வை 6 வருடமாக மாற்று, தாதிய பட்டதாரிகளுக்கு சுகாதார அமைச்சின் நிர்வாகப் பதவிகளை வழங்கு போன்ற கோரிக்கைகளை முன்வைத்து இந்தப்பணிப்புறக்கணிப்பை அவர்கள் முன்னெடுத்தனர்.

தமது கோரிக்கைகளை நிறைவு செய்யத்தவறின், மீண்டும் தொடர்ச்சியான போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளதாகவும் அவர்கள் தெரிவித்தனர். இந்தப் போராட்டத்தில் துணை மருத்துவ சேவையினரும் இணைந்துகொண்டு தமது ஆதரவைத் தெரிவித்தனர். (ஐ106)

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு

கடந்த 30.01.2017 அன்று சிவபதமடைந்த எமது
குடும்பத் தலைவி

திருமதி
**நாகேஸ்வரி வரதலிங்கம்**
(ஓய்வுநிலை ஆசிரியை)



அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (01.03.2017) புதன்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ளதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

'நாகேஸ்தான்'
நுணாவில் மேற்கு,
சாவகச்சேரி.

குடும்பத்தினர்.

(AJA/001505)(11.18)





# வன்னிப் பல்கலைக்கழகத்துக்காக வவுனியாவில் நேற்றுக் கவனவீர்ப்பு

## பெரும் எண்ணிக்கையானோர் பேரணியில் பங்கேற்பு

வவுனியா, மார்ச்.1

யாழ். பல்கலைக் கழக வவுனியா வளாகத்தை வன்னிப் பல்கலைக் கழகமாகத் தரமுயர்த்துவதற்கு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு வலியுறுத்தி நேற்று வவுனியாவில் பெரும் கவனவீர்ப்புப் பேரணி நடத்தப்பட்டது. இந்தப் பேரணியை வவுனியா வளாக ஆசிரியர் சங்கம் ஏற்பாடு செய்தது.

சமூகத்தின் பல்வேறு துறைகளைச் சார்ந்தவர்கள், பொதுமக்கள் என்று பெரும் எண்ணிக்கையிலானோர் கலந்து கொண்ட பேரணி குருமன்காடு விஞ்ஞான வளாகத்திலிருந்து நேற்றுக் காலை 10 மணிக்கு ஆரம்பமானது. வவுனியா ரயில் நிலைய வீதி, நகர வீதிகள் ஊடாக வவுனியா மாவட்டச் செயலகத்தை அடைந்தது.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழக வவுனியா வளாக மாணவர்கள், ஆசிரியர்கள், ஊழியர்கள், பாடசாலைகளில் பயிலும் உயர் வகுப்பு மாணவர்கள் மற்றும் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள், வட மாகாண சுகாதார அமைச்சர், மாகாண சபை உறுப்பினர்கள் எனப்பலர் கட்சிபேதங்களைக்கடந்து பேரணியில் கலந்து கொண்டனர்.

வவுனியா முச்சக்கர வண்டி உரிமையாளர்கள் சங்கம், வர்த்தகர் சங்கம், உட்பட பல்வேறு பொது அமைப்புக்களும் இந்தப் பேரணிக்கு ஆதரவளித்திருந்தன. பெரும் எண்ணிக்கையிலான முச்சக்கர வண்டிகளும் பேரணியில் பங்கு கொண்டன.

25 வருடங்களாக நேரடி நிதி ஒதுக்கீடு உதவியின்றி யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தின் ஒரு பிரிவாக இயங்கி வருகின்ற வவுனியா வளாகத்தை வன்னிப் பல்கலைக்கழகமாகத் தரம் உயர்த்த வேண்டியதன் அவசியம் குறித்து வளாக ஆசிரியர் சங்கத்தினர் வெளியிட்டுள்ள அறிக்கையில் வலியுறுத்தியுள்ளனர்.

"1991 ஆம் ஆண்டு இணைந்த பல்கலைக்கழக கல்லூரியாக ஆரம்பிக்கப்பட்டு, 1996 ஆம் ஆண்டு இது யாழ் பல்கலைக்கழகத்தின் வளாகமாகத் தரம் உயர்த்தப்பட்டது.

இதேபோன்று ஆரம்பிக்கப்பட்ட வேறு இடங்களைச் சேர்ந்த நான்கு இணைந்த பல்கலைக்கழகக் கல்லூரிகள், தனித்தனி பல்கலைக்கழகங்களாகத் தரம் உயர்த்தப்பட்டிருக்கின்றன. இந்தக் கல்லூரியாக ஆரம்பிக்கப்பட்டு 25 வருடங்களாகிவிட்ட போதிலும், இன்னும் பல்கலைக்கழகமாகத் தரம் உயர்த்தப்படவில்லை." என்று அதில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ற-5,402)

### கஞ்சா வைத்திருந்த குற்றச்சாட்டில் நால்வர் கைது

யாழ்ப்பாணம், மார்ச் 1

நாகர்கோவில் பகுதியில் 225 கிராம் கஞ்சாவை வைத்திருந்த குற்றச்சாட்டில் நேற்று முன்தினம் இரவு 4 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டனர்.

நாகர் கோவில் பகுதியில் கஞ்சா கைமாற்றப்படவுள்ளது என்று பருத்தித்துறைப் பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலையடுத்து பொலிஸார் சோதனையில் ஈடுபட்டனர். கஞ்சா வழங்க வந்தவர் தப்பியோடிய நிலையில் நால்வர் கைது செய்யப்பட்டனர். இவர்கள் புத்தளம் பகுதியைச் சேர்ந்தவர்கள் என்று தெரிவிக்கப்பட்டது. (ற-26)



வவுனியா, புளியங்குளத்தில் கஞ்சா மீட்கப்பட்டுள்ளது என்று புளியங்குளம் பொலிஸார் தெரிவித்தனர். பூவரசம்குளம் பகுதியில் வீடொன்றில் கஞ்சா பதுக்கப்பட்டுள்ளது என்று கிடைத்த தகவலையடுத்துப் பொலிஸார் மேற்கொண்ட தேடுதலில் 31 கிலோ 600 கிராம் கஞ்சா மீட்கப்பட்டது. சந்தேகத்தின் பேரில் இருவர் கைது செய்யப்பட்டனர். அவர்களை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர். (ற-5)

# குற்றங்களைக் கட்டுப்படுத்த சைக்கிளில் பொலிஸ் ரோந்து

## யாழ். பிரதிப் பொலிஸ்மா அதிபர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 1

யாழ்ப்பாண மாவட்டத்தில் குற்றச் செயல்கள் பெரும்பாலும் கட்டுப்படுத்தப்பட்டுள்ளன. குற்றங்களைத் தடுப்பதற்காக அனைத்துப் பொலிஸ் நிலையங்களுக்கும் சைக்கிள்கள் வழங்கப்பட்டு சைக்கிள் ரோந்து தினமும் மாலையில் இடம்பெறுகின்றது. அவர்களுடன் கடற்படையினரும்பொலிஸாரும்இணைந்து கஞ்சா கடத்தல்களை பெரிளவில் முறியடிக்கின்றனர்.

இவ்வாறு யாழ்ப்பாண மாவட்ட பிரதிப் பொலிஸ் அதிபர் சஞ்சீவ் தாமரட்ண தெரிவித்தார்.

...ாலை புளியங்கன் சந்தியில் புதிய பொலிஸ் காவலரண் நேற்றுச் செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாண மாவட்ட பிரதிப் பொலிஸ் அதிபர் சஞ்சீவ் தர்மரட்ணவால் திறக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

துன்னாலையை பிறப்பிடமாகக் கொண்ட மறைந்த உப பொலிஸ் பரிசோதகர் கணபதிப்பிள்ளை வடிவேலு ஞாபகார்த்தமாக அவரது குடும்பத்தால் இந்த பொலிஸ் காவல் நிலையம் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது. பொலிஸாரின் குடும்பத்தினரால் பொலிஸாருக்குக் கட்டடம் வழங்கப்படுவது இதுவே முதல்முறையாகும். வெய்யிலிலும் மழையிலும் பொலிஸாரின் அர்ப்பணிப்பான கடமைகளுக்கு மக்களால்ல வழங்கப்பட்ட சிறப்பான சேவையே இந்த பொலிஸ் காவலரண் ஆகும். இந்தக் காவலரணில் தினமும் நான்கு பொலிஸ் அதிகாரிகள் கடமையில் ஈடுபடுவர்.என்றார்.

நிகழ்வில் காங்கேசன்துறை மூத்த பொலிஸ் அத்தியட்சகர் மகாசிங்க, காங்கேசன்துறை உதவிப் பொலிஸ் பரிசோதகர் பியந்த, வல்வெட்டித்துறை பொலிஸ் தலைமை அதிகாரி ராஜ்குமார் மேலும் பொலிஸார், இராணுவத்தினர், பொதுமக்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர். (ற-10, 26)

# நீண்டகால மின் பிறப்பாக்க விரிவாக்க திட்டத்துக்கு மக்கள் கருத்தறிய தளம்

கொழும்பு, மார்ச் 1

நீண்ட கால மின்பிறப்பாக விரிவாக்கத் திட்டத்தின் உருவாக்கத்துக்குப் பயன்பட்ட உள்ளீட்டு தரவுகள் தொடர்பில் பொதுமக்களின் கருத்தை அறிவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. பொதுமக்களின் கருத்துக்கள் எதிர்வரும் 15 ஆம் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ எதிர்பார்க்கப்படுகின்றன. Consultations@pucsl.gov.lk என்னும் மின் அஞ்சலுக்கோ அல்லது 2392641 என்னும் தொலைநகல் இலக்கத்துக்கோ கருத்துக்களை அனுப்ப முடியும் என இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவின் பணிப்பாளர் தமித்த குமாரசிங்க தெரிவித்தார்.

இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் அனுமதி கோரி இலங்கை மின்சார சபையால் குறைந்த செலவு நீண்ட கால மின் பிறப்பாக்க விரிவாக்கத் திட்டம் அண்மையில் சமர்ப்பிக்கப்பட்டது. அந்தத் திட்டத்தின் உள்ளீட்டு அளவுருக்கள் மற்றும் அனுமானங்கள் இந்தத் திட்டத்தின் தயாரிப்பின் அடிப்படையாக இருந்தமையுடன் அதி முக்கியத்துவத்தையும் பெற்றுள்ளன. இந்த உள்ளீட்டு அளவுருக்கள் மற்றும் அனுமானங்கள் தொடர்பில் பொது மக்கள் கருத்தையும் ஆலோசனைகளையும் பெற்றுக் கொள்வதற்கு இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவானது தீர்மானித்துள்ளது.

இது தொடர்பாக பொதுச் சேவைகள் ஆணைக்குழு அனுப்பி வைக்கப்பட்ட செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

**முதல் முயற்சி**

பொதுமக்களின் கருத்தை அறிவதற்கான தளத்தை உருவாக்கியிருப்பது இதுவே முதற்தடவை ஆகும். எரிபொருள் விலைகள் சமூகச் சேத செலவுகள் மாதிரி புதுப்பிக்கத்தக்க சக்தி தொழில் நுட்பங்கள் மற்றும் பிற பாதுகாப்பான பிறப்பாக்க நிலையங்களின் செலவுகள் மற்றும் பயன்படத்தக்க அளவுருக்கள் போன்றவை மீதான கருத்துக்களே பெரிதும் எதிர்பார்க்கப்படுகின்றன. இந்தத் திட்டத்துக்கு அனுமதி கொடுக்கும் செயன்முறையின் போது மக்களின் கருத்துக்களுக்கு மிகுந்த முக்கியத்துவம் வழங்கப்படும்.

இந்த நடவடிக்கையின் மூலம் அனுமதி அளிக்கும் செயன்முறையின் வெளிப்படைத் தன்மையை அதிகரிக்கவே நாம் விரும்புகின்றோம். இலங்கையின் அதிமுக்கிய சக்திப் பிறப்பாகத் திட்டத்தின் முடிவெடுக்கும் செயன்முறையில் பொதுமக்களின் பங்கேற்பு அதிகரிக்கும் என நாம் நம்புகிறோம்.

**தேவை அதிகரிப்பு**

எதிர்வுகூறல் தரவுகளின் அடிப்படையில் 2 ஆயிரத்து 585 MW எனும் உச்சபட்ச தேவைப்பாட்டின் மத்தியில் இலங்கை 2017 ஆம் ஆண்டின் 15 ஆயிரத்து 160 GWH அளவு மின்சாரத்தை பிறப்பிக்கவுள்ளது. 2042 ஆம் ஆண்டுக்கான மின்சாரப் பிறப்பாக்க எதிர்வுகூறலானது 7 ஆயிரத்து 784MW உச்சபட்ச தேவைப்பாட்டுடன் 49 ஆயிரத்து 121 GWHஆகக் காணப்படுகின்றது. 2018 தொடக்கம் 2022 ஆண்டுக் காலப்பகுதியில் மின் பிறப்பாக்கத் தேவைப்பாடானது 5.9 வீதத்தால் ஆண்டுதோறும் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. உச்சபட்ச தேவைப்பாடானது 5.1 வீதத்தால் ஆண்டுதோறும் அதிகரிக்கும் எனக் கூறப்படுகின்றது.

**குறை செலவு மின்பிறப்பாக்கத் திட்டம்**

அரச கொள்கை மற்றும் இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவால் ஆக்கப்பட்ட குறை செலவு மின்பிறப்பாக விரிவாக்க திட்டமிடற் கோவை ஆகியவற்றுக்கு அமைய புதிய பிறப்பாக்கத் தொழிநுட்பங்களின் மாதிரி ஆக்கம் குறை செலவு பிறப்பாக்க நிலைக் கலவையின் அடையாளம் காந்தல் மற்றும் அபிவிருத்திசெய்தல் ஆகியவற்றுக்குப் பயன்படும் இந்த உள்ளீட்டுத் தரவுகளானவை தேவைப்பாட்டு எதிர்வுகூறல்நம்பகப்பிரமாணம்பொருளாதார அளவுறுக்கள் எரிபொருள் விலைகள் செலவு மற்றும் பிற அளவுருக்களை குறித்துரைக்கின்றன. திட்டமிடுபவரால் வரையறுக்கப்பட்ட எல்லைகளுல் ஒரு நீண்ட கால பகுதிக்கான சக்தி பிறப்பாக்க முறைமைக்கான உகந்த விரிவாக்கத் திட்டத்தை பயனாளர் கண்டறிவதற்கு உதவுகின்ற பிறப்பாக்கத் திட்டமிடல் மென்பொருளின் இந்த உள்ளீட்டுத் தரவுகள் பதியப்படும்.

**புதிய மின் நிலையங்கள்**

இலங்கையில் ஆயிரத்து 506.7 MWகொள்ளளவைக் கொண்டதான இலங்கை மின்சார சபைக்குச் சொந்தமான 8 அனல் மின் நிலையங்கள் ஓட்டோ, டீசல், ரிசிடுவல் எண்ணெய், நப்தா மற்றும் நிலக்கரி ஆகியவற்றால் இயக்கப்படுகின்றன. இயற்றை வாயு உலை எண்ணெய் மற்றும் ஓட்டோ, டீசல் ஆகியவற்றால் இயக்கப்படும் 505 MW கொள்ளவுடைய 3 அனல் மின் நிலையங்கள் மேலதிகமாக செயற்பாட்டுக்காக சேர்க்கப்படும். ஏற்கனவே இருக்கும் சுயாதீன மின் சக்தி உற்பத்தியாளர்களால் 252 MW மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகின்றது. ஆயிரத்து 388MW கொள்ளளவுடன் இலங்கையின் 16 நீர் மின் நிலையங்கள் உள்ளன. 182.2MWகொள்ளளவுடனான 3 நீர் மின் நிலையங்கள் 2019 முதல் 2022 காலப்பகுதியில் செயற்பாட்டுக்காக அர்ப்பணிக்கப்படும். -என்றுள்ளது. (ற-10)



# ஞானசாரருக்கு எதிராக குற்றப் பத்திரிகை

கொழும்பு, மார்ச்1

நீதிமன்றத்தை அவமதித்தமை தொடர்பாக பொது பல சேனா அமைப்பின் செயலர் கலகொட அத்தே ஞானசார தேரருக்கு எதிராக நேற்று செவ்வாய்க்கிழமை மேல் முறையிட்டு நீதிமன்றத்தில் குற்றப் பத்திரிக்கை வாசிக்கப்பட்டது.

2016ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 26ஆம் திகதியன்று, ஊடகவியலாளர் பிரகித் எக்னலிகொட காணாமற் போனமை தொடர்பான வழக்கு ஹோமாகம நீதிமன்றத்தில் அழைக்கப்பட்ட போது நீதிமன்றம் முன் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதன் முலம் கலகொட அத்தே ஞானசார தேரர் நீதிமன்றத்தை அவமதித்தார் என்று குற்றம் சாட்டி கோமாகம நீதிவான் நீதிபதி ரங்க திசநாயக்க முறைப்பாடு சமர்பித்திருந்தார்.

இதன்படி சட்ட மா அதிபரால் ஞானசார தேரருக்கு எதிராக குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டது. குற்றப் பத்திரிக்கை வாசிக்கப்பட்ட பின்னர் தான் நிரபராதி என்று ஞானசார தேரர் நீதிமன்றத்தில் தெரிவித்தார். விசாரணை எதிர்வரும் மே மாதம் 16ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டது.

வழக்கு விசாரணை முடிவடைந்த பின்னர் ஊடகங்களிடம் பேசிய ஞானசார தேரர் ராணுவ புலனாய்வு அதிகாரிகள் காரணமின்றி விளக்க மறியலில் வைக்கப்பட்டதை எதிர்த்துத்தான் அன்று நீதிமன்றம் முன் போராட்டத்தில் ஈடுபட்டேன்.

நீதிமன்றத்தை அவமதிக்கும் நோக்கத்துடன் நான் அதனை மேற்கொள்ளவில்லை என்றார். (ற-10)

# மூடிய நிலையில் புதிய கட்டடம் மர நிழலில் கற்றல் செயற்பாடு

## பளை இந்து ஆரம்ப வித்தியாலய மாணவர்களின் பரிதவிப்பு

கிளிநொச்சி, மார்ச்1

பளை இந்து ஆரம்ப வித்தியாலயத்தில் அமைக்கப்பட்டுள்ள புதிய கட்டடம் இன்னமும் கற்றல் நடவடிக்கைகளுக்கு ஒப்படைக்கப்படவில்லை. மாணவர்கள் மர நிழலில் கற்க வேண்டிய நிலை காணப்படுகின்றது என்று பெற்றோர்கள் கவலை தெரிவித்தனர்.

"புதிய கட்டடத்துக்கான திறப்பு இன்னமும் ஒப்படைக்கப்படாததாலேயே கட்டடத்தைக் கற்றல் செயற்பாடுகளுக்கு உபயோகிக்க முடியவில்லை." என்று பாடசாலையின் அதிபர் தெரிவித்தார்.

பளை இந்து ஆரம்ப வித்தியாலயத்துக்கான கட்டடத்தின் கட்டுமானப் பணிகள் 2015ஆம் ஆண்டு 1.40 லட்சம் ரூபா செலவில் ஆரம்பமானது. கட்டட கட்டுமானப் பணிகள் முடிவடைந்து தற்போது ஒரு மாதம் கடந்துள்ள நிலையில் அந்தக் கட்டடம் இன்னமும் கற்றல் செயற்பாடுகளுக்கு வழங்கப்படவில்லை.

பளை மத்திய கல்லூரி கட்டடத் தொகுதிலேயே ஆரம்பப் பிரிவுக் கற்றல் செயற்பாடுகள் தற்போதும் நடைபெறுகின்றன. அங்கு இடவசதி போதாதுள்ளதால் மர நிழல்களிலும் மாணவர்கள் கற்றல் செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது என்று கூறப்படுகின்றது.

பளை மத்திய கல்லூரியில் அண்மையில் கணிதபாட தொழிற்கூடம் திறக்கப்பட்டது. தொழிற்கூடம் ஆரம்பப் பிரிவு மாணவர்கள் கற்ற வகுப்பறைகளிலேயே அமைக்கப்பட்டது. அதனால் ஆரம்பப் பிரிவு மாணவர்கள் அங்கிருந்து வெளியேற்றப்பட்டனர். அந்த வகுப்பறைகள் இன்னமும் மீள வழங்கப்படவில்லை என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

"தைப் பூச தினத்தன்று பால் காய்ச்சி கட்டடத்தைத் திறப்பதாக இருந்தது. கட்டடத்தின் திறப்பு எமக்குக் கிடைக்கவில்லை. அதனால் பால் காய்ச்ச முடியவில்லை.

மாணவர்களை உடனடியாக புதிய கட்டடத்துக்குக் கொண்டு செல்ல முடியாத நிலைமையும் காணப்படுகின்றது. பாடசாலையைச் சுற்றி 4 நீர் துரவுகள் உள்ளன. அவற்றை மூடுவதற்கு யுனிசெப் நிறுவனத்தின் உதவி நாடப்பட்டுள்ளது. அவர்கள் வந்து பார்த்துச் சென்றுள்ளனர். அவற்றை மூடாது மாணவர்களை அங்கு கொண்டு செல்வது பாதுகாப்பற்றது.

உடனடியாக மாணவர்களைப் புதிய கட்டடத்துக்குக் கொண்டு செல்ல வேண்டும் என்று கூறுபவர்கள் துரவு மூலம் ஏற்படும் பாதிப்பகளுக்குப் பொறுப்பேற்பார்களானால் நான் மாணவர்களை அங்கு கொண்டு செல்லத் தயார்.

கட்டடத் தொகுதியில் இடவசதியும் போதாதுள்ளது. அமைக்கப்பட்டுள்ள மாடிக் கட்டடத்தில் 8 வகுப்பறைளே உள்ளன. எமக்கு 12 வகுப்பறைகள் தேவை. நிரந்தர பாதை வசதியும் இல்லை. இதுபோன்ற பிரச்சினைகளுடன் உடனடியாகப் புதிய கட்டடத்தில் பாடசாலையை எவ்வாறு



ஆரம்பிப்பது?.

பளை இந்துக் கல்லூரியால் பெறப்பட்ட வகுப்பறை ஒரு வாரத்தில் மீள வழங்கப்படும் என்று எதிர்பார்க்கின்றேன்." என்று பாடசாலை அதிபர் தெரிவித்தார்.

அதேவேளை, பாடசாலை அதிபருக்கு இடமாற்றம் வந்துள்ளது. அதனாலேயே புதிய வகுப்பறைக் கட்டடத்தைத் திறப்பதில் தாமதம் ஏற்படுத்தப்படுகின்றது என்று குற்றச்சாட்டப்படுகின்றது.

"பாடசாலைக் கட்டடம் திறக்கப்படாவிட்டாலும் பரவாயில்லை. மர நிழல்களில் கற்கும் மாணவர்களைப் புதிய கட்டடத்துக்குக் கொண்டு சென்று அவர்களுக்கு பூரண கல்வியை வழங்க வேண்டும். யார் அதிபர் என்பது எமக்கு முக்கியமில்லை. எமது பிள்ளைகளின் கல்வி மேம்பட வேண்டும் என்பதே எமது நோக்கம்." என்று பெற்றோர்கள் தெரிவித்தனர்.

"அப்படியான சம்பவம் எதுவும் இல்லை. நான் நாளை கூட இடமாற்றலாகிச் செல்வதற்குத் தயராகவே உள்ளேன்." என்று பாடசாலையின் அதிபர் கூறினார்.

இது தொடர்பாக வடக்கு மாகாண கல்வி அமைச்சரின் செயலாளரைத் தொடர்பு கொள்ள இரு நாள்களாக முயன்றபோதும் அவர் தொலைபேசி அழைப்புக்குப் பதிலளிக்கவில்லை. (ற-6)

# மணல் கடத்தலில் ஈடுபட்ட உழவியந்திரங்கள்சிக்கின

## சாரதிகளும் கைது

கிளிநொச்சி, மார்ச்1

அனுமதிப் பத்திரத்துக்கு முரணாகவும், அனுமதிப் பத்திரம் இன்றியும் மணல் ஏற்றிய 7 உழவியந்திரங்கள் கைப்பற்றப்பட்டன. அவற்றின் சாரதிகள் கைதுசெய்யப்பட்டனர்.

இவ்வாறு கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்ட விசேட முறியடிப்புப் பிரிவு பொலிஸ் பொறுப்பதிகாரி ஜெசிந்தன் தெரிவித்தார்.

மருதங்கேணி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் தொடர்ச்சியாக மணல் கடத்தல் நடக்கின்றது என்று கிடைத்த தகவலின் அடிப்படையில் நேற்று எடுக்கப்பட்ட விசேட நட்வடிக்கையில் சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டனர். பொறுப்பதிகாரி ஜெசிந்தன் தலைமையில் சாமர, விஜயகுமார, குலதீபன், ஜசிசாந், மதுசங்க ஆகிய பொலிஸ் உத்தியோகத்தர்கள் இந்த நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

பளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மாமுனை, குடாரப்புப் பகுதியில் அனுமதிப் பத்திரத்துக்கு முரணாக மணல் ஏற்றிய இரு உழவு இயந்திரங்கள் கைப்பற்றப்பட்டன. அனுமதிப்பத்திரம் இன்றி மணல் ஏற்றிச் சென்ற 5 உழவு இயந்திரங்கள் கைப்பற்றப்பட்டன. அவற்றின் சாரதிகள் கைது செய்யப்பட்டனர்.

மேலதிக விசாரணைகள் மற்றும் நீதிமன்ற நடவடிக்கைக்காக கைது செய்யப்பட்டவர்கள் பளை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டனர். உழவு இயந்திரங்களும் பாரப்படுத்தப்பட்டன என்று கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் திணைக்களத் தகவல்கள் தெரிவித்தன. (ற-6)



# மட்டு. பட்டதாரிகளின் பிரச்சினைக்குத் தீர்வு

## பிரதமர் உறுதியளித்தார் என பிரதியமைச்சர் அமீர் அலி தெரிவிப்பு

எருவில், மார்ச்1

மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் தொடர்ச்சியாக உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபடும் வேலையில்லாப் பட்டதாரிகளுக்கு விரைவில் தீர்வு வழங்கப்படும் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உறுதியளித்தார்.

இவ்வாறு பிரதியமைச்சர் எம்.எஸ்.எஸ். அமீர் அலி தெரீவித்தார்.

"கடந்த வெள்ளிக்கிழமை கிராமிய பொருளாதார அபிவிருத்தி அமைச்சுக் காரியாலயத் திறப்பு விழாவுக்குப் பிரதமர் வந்தார். அவரிடம் பட்டதாரிகள் நியமனம் தொடர்பாகப் பேசினேன். பிரச்சினையைத் தீர்க்க வேண்டிய அவசியத்தை வலியுறுத்தினேன்.

விரைவில் தீர்வு பெற்றுத் தரப்படும் என்று பிரதமர் உறுதியளித்தார்" என்று அவர் தெரிவித்தார். (ற-ய)

# மரம் கடத்திய இருவருக்கு தண்டம்

இரவில் வாகனத்தில் மரங்கள் கடத்திய இருவருக்கு சாவகச்சேரி நீதிமன்றில் தலா 5 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது.

சாவகச்சேரிப் பொலிஸார் வீதிப் போக்குவரத்துக் கண்காணிப்புச் சேவையில் ஈடுபட்டிருந்த இரவு வேளையில் வாகனத்தில் மரங்கள் ஏற்றிச் சென்ற இருவர் கைது செய்யப்பட்டனர். அவர்களுக்கு எதிராக வழக்குகள் தாக்கல் செய்திருந்தனர்.

இந்த வழக்குகள் நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டன. வழக்கை விசாரித்த நீதிவான் இருவருக்கும் தலா 5 ஆயிரம் ரூபா வீதம் தண்டம் விதித்தார். (ற-9)

# தெற்கு இளைஞர் சிலர் யாழில் நூதன திருட்டு!

## வர்த்தகர்கள் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், மார்ச்1

யாழ். குடாநாட்டின் பல பகுதிகளிலும் சில நாள்களாக நூதனமான முறையில் ஏமாற்றிப் பணம் பறிக்கப்படுகின்றது என்று வர்த்தகர்கள் பலரும் தெரிவித்தனர்.

உயரகக் காரில் வரும் இருவராக தென்னிலங்கை இளைஞர்களே நூதனமான முறையில் பணம் பறிக்கின்றனர் என்று அவர்கள் தெரிவித்தனர்.

"அதிக வாடிக்கையாளர்கள் உள்ள நேரம் பார்த்து அந்த இளைஞர்கள் வருகின்றனர். 100 ரூபாவுக்குக் குறைந்த பெறுமதியுடைய பொருள்களை வாங்குகின்றனர். அதற்காக 2 ஆயிரம் ரூபாவைக் கொடுகின்றனர். மிகுதிப் பணத்தையும் பெறுகின்றனர்.

பின்னர் தம்மிடம் 100 ரூபா பணம் இருக்கின்றது என்று அதைக் கொடுத்து 2 ஆயிரம் ரூபாவை மீளப் பெறுகின்றனர்.

வர்த்தகர்கள் தாம் வழங்கிய மீதிப் பணத்தைத் திருப்பித் தருமாறு கேட்டால் மிகுதிப் பணம் வழங்கவில்லை என்று கூறித் தகராறு செய்து அங்கிருந்து நழுவுகின்றனர்." என்று வர்த்தகர்கள் தெரிவித்தனர்.

இந்த மோசடிக் கும்பல் யாழ். நகர், கந்தர்மடம், திருநெல்வேலி, சங்கானை, சித்தங்கேணி ஆகிய பகுதிகளில் தமது கைவரிசையைக் காட்டியுள்ளது. ஏமாற்றப்பட்ட வர்த்தகர்கள் ஆதாரம் சரியாக இல்லாததால் தாம் இது குறித்துப் பொலிஸாரிடம் முறைப்பாடுகளை செய்ய முடியாதுள்ளது என்று தெரிவித்தனர். (ற-101)

# தகவலை அறிவதற்கு அலையும் பொதுமக்கள்

## தகவல் தரும் அலுவலர் இல்லை எனக் கூறப்படுவதால் சிக்கல்

தகவல் தரும் அலுவலர் இல்லை என்று தெரிவித்து தகவல் அறியும் விண்ணப்பத்தை ஏற்க மறுக்கும் சம்பவங்கள் வடக்கு மாகாணத்தில் தொடர்ச்சியாக நடைபெறுகின்றன.

தகவல் அறியும் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு ஒரு மாதம் கடக்கவுள்ள நிலையில் கொழும்பு அரசின் தகவல் தரும் அலுவலர்களுக்கு இன்னமும் பயிற்சிகள் வழங்கப்படவில்லை என்று கூறப்படுகின்றது.

தகவல் அறியும் உரிமைச் சட்டம் கடந்த மாதம் 3ஆம் திகதி நடைமுறைக்கு வந்தது. ஒவ்வொரு அலுவலகத்திலும் தகவல் தரும் அலுவலர் (தகவல் வழங்கும் அலுவலர்) நியமிக்கப்பட்டார். வடக்கு மாகாண சபைக்குட்பட்ட அமைச்சுக்கள், திணைக்களங்களில் தகவல் தரும் அலுவலர்களுக்குக் கடந்த 21ஆம் திகதி பயிற்சிகள் வழங்கப்பட்டன. எனினும் கொழும்பு அரசின் கீழான திணைக்களங்களில் நியமிக்கப்பட்ட தகவல் தரும் அலுவலர்களுக்கு இன்னமும் பயிற்சிகள் வழங்கப்படவில்லை.

தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்காக அமைச்சுகள், திணைக்களங்களுக்குச் செல்லும் மக்கள் அலைக்கழிக்கப்படுகின்றனர் என்று குற்றஞ்சாட்டப்படுகின்றது. தகவல் தரும் அலுவலர் வெளியே சென்றுள்ளார், அவர் அலுவலகத்தில் இல்லை என்று காரணங்களைக் கூறி தகவல் அறியும் விண்ணப்பத்தை ஏற்க மறுக்கின்றனர் என்று பொதுமக்கள் கூறுகின்றனர். அலைக்கழிவதால் பணம் செலவாகின்றது என்றும் அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

சில அலுவலகங்களில் தகவல் தரும் அலுவலர் வெளியே சென்றுவிட்டார் என்று தெரிவித்து பதில் அலுவலர் ஒருவர் விண்ணப்பத்தைப் பொறுப்பேற்கின்றார். ஆனால் விண்ணப்பத்தைப் பெற்றுக் கொண்டமைக்கான உறுதிப்படுத்தல் படிவத்தை வழங்க மறுக்கின்றார் என்றும் பொதுமக்கள் கூறுகின்றனர். (ற-5-8)



# பல்லாயிரம் கோடிக் கடனை விட்டுச் சென்றுள்ளார் மகிந்த

### தலைமை அமைச்சர் ரணில் தெரிவிப்பு



கொழும்பு, மார்ச் 1

பல்லாயிரம் கோடி ரூபா கடனை மகிந்த ராஜபக்ச எமக்கு விட்டுச் சென்றுள்ளார். அதைப் 10 வருடங்களுக்குள் செலுத்தி முடிக்க வேண்டியதுள்ளது. எமது வருமானம் கடனைசெலுத்த பயன்படுத்தப்படுகின்றது. புதிய வருமானத் துறைகள் கண்டறியப்பட வேண்டியுள்ளது. தொழில் வாய்ப்புகள், சர்வதேச முதலீடுகள் மற்றும் தேசிய முதலீடுகள் என்பன அத்தியாவசியமாகும். முன்னோக்கிசெல்லவேண்டும் என்றால், பொருளாதாரத்தில் போட்டி நிலை காணப்பட வேண்டும்.

இவ்வாறு தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

கிராமிய பொருளாதார விவகார அமைச்சின் புதிய கட்டடம் நேற்றுமுன்தினம் திறக்கப்பட்டது. அதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

கிராமத்திலிருந்து வந்துள்ள அமைச்சர் பீ.ஹரிசனுக்கு கிராமத்து பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்யும் பொறுப்பை கையளித்துள்ளேன். கிராமத்து பொருளாதார நிலைகளில் இருந்து மக்கள் நகர, பொருளாதாரத்தை நோக்கி நகர்கின்றனர். மத்திய கிழக்கு அல்லது இத்தாலி பொருளாதாரத்தை நோக்கியும் நகர்கின்றனர்.

இந்தக் கட்டடத்துக்கு வருவதற்கு முன்னர் வடக்கு, தெற்கு என அனைத்து பகுதிகளையும் அவதானிக்க வேண்டும்என்றுகூறினேன். மலேசியா, இந்தோனேசியா, வியட்நாம், சீனா மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகள் தொடர்பிலும் அவதானிக்கப்பட வேண்டும். மீண்டும் அரிசி தொடர்பில் பிரச்சினை ஏற்படாமல் இருக்க வேண்டும். கிராமத்து பொருளாதாரத்தை வலுப்படுத்தும் போது கால்நடைத்துறையும் மிகவும் முக்கியமானதாகும். கோழி உற்பத்தியில் ஏற்றுமதி பொருளாதார இலக்குகளை அடைவதற்கு திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. கிராமிய பொருளாதாரத்தில் பல பிரிவுகளை அபிவிருத்தி செய்வதும் அதனூடாக முன்னோக்கி செல்வதுமே எமது நோக்கமாகும். நாட்டின் பொருளாதாரம் தொடர்பில் புதிதாக சிந்திக்க வேண்டும்.

சிங்கப்பூரில் இருந்து நாடு திரும்பும்போது மகிந்தவை ஒரே விமானத்தில் சந்திக்கும் வாய்ப்பு கிடைக்கும் என நான் எதிர்பார்த்து காத்திருந்தேன். அவ்வாறு சந்தித்திருந்தால் சுவிற்சர்லாந்து மற்றும் உகண்டா ஆகிய நாடுகளின் முறைமைகளை கைவிட்டு சிங்கப்பூர் முறைமைக்கு வந்ததையிட்டு வாழ்த்து கூறியிருப்பேன். துரதிர்ஷ்டவசமாக மகிந்த ராஜபக்ச எமது விமானத்தில் வரவில்லை. அடுத்த விமானத்திலேயே வந்தார். அதற்கான காரணத்தை நாடாளுமன்றத்தில் நிச்சயம் கேட்பேன்.

புதிதாக சிந்திக்க வேண்டும். மகிந்த புதிதாக சிந்திக்கின்றார் என்றால் நல்லது. ஒரு இடத்தில் சிக்கினால் முன்னோக்கி செல்ல முடியாது. புதிதாக சிந்தித்தமையினால் சீனா, ஜப்பான், கொரியா, வியட்நாம், தாய்லாந்து, மலேசியா, இந்தோனேசியா, சிங்கப்பூர் ஆகிய நாடுகள் மாற்றமடைந்தன. பங்களாதேஷ் புதிய மாற்றத்தை நோக்கிச் செல்கின்றது. இலங்கை ஏனைய நாடுகளை விட வேகமாக மாற்றத்தை நோக்கி நகர விரும்பியது. ஆனால் போர் முடிந்தும் ஒரு இடத்தில் சிறைப்பட்டு கிடந்தோம். நாம் முதலாவதாக தேசிய ஒற்றுமையை பாதுகாக்க வேண்டும். - என்றார். (ற -10)

# 90 வீதப் பெண்களுக்கு பொதுப் போக்குவரத்தில் பாலியல் துன்புறுத்தல்

## ஐ. நா. சனத் தொகை நிதியம் தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 1

இலங்கையில் பேருந்து மற்றும் ரயில்களில் பயணிக்கும் 90 சதவீதமான பெண்களும், சிறுமிகளும் பாலியல் ரீதியான துன்புறுத்தல்களுக்கு உள்ளாகின்றனர். அவர்களில் 4 வீதமான பெண்கள் மாத்திரமே பொலிஸாரின் உதவியை நாடுகின்றனர்.

இவ்வாறு ஐக்கிய நாடுகளின் சனத் தொகை நிதியம் தெரிவித்தது.

தேசிய முன்னுரிமையின் அடிப்படையில் பெண்கள் மற்றும் சிறுவர்கள் விவகார அமைச்சு, போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சு, பிரதமர் அலுவலகம், இலங்கை பொலிஸ் ஆகியவற்றுடன் இணைந்து ஐக்கிய நாடுகளின் சனத்தொகை நிதியம் 'அவளின் பயணம் பாதுகாப்பானதா?' எனும் தொனிப்பொருளில் பொதுமக்களை அறிவூட்டும் பரப்புரை நடவடிக்கையை ஆரம்பித்துள்ளது. அது தொடர்பான ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று முன்தினம் கொழும்பில் நடைபெற்றது. அதில் நாடு முழுவதும் மேற்கொள்ளப்பட்ட ஆய்வறிக்கை முடிவுகளின் இந்த முடிவுகள் எட்டப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.

பொதுப் போக்குவரத்தில் பெண்கள் எதிர்கொள்ளும் பாலியல் வன்முறைகள் சார்ந்த பிரச்சினைகள் மற்றும் அதற்கான கொள்கைப் பரிந்துரைகள் உள்ளிட்ட முன்மொழிவுகளுடனான கொள்கைச் சுருக்கத்தை ஐக்கிய நாடுகளின் சனத் தொகை நிதியம் வெளியிட்டது.

பொதுப்போக்குவரத்தின் போது பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு பாலியல் துன்புறுத்தல்களுக்கு இடம்பெறுமாயின் அது தொடர்பில் உடனடியாக 119 என்ற தொலைபேசி இலக்கம் மூலம் இலங்கை பொலிஸ் திணைக்களத்துக்கு அறிவிக்க வேண்டும் என்று வேண்டுகோள் விடுக்கப்பட்டது. (ற - 10)

# திருமலையில் டெங்கு அபாயம் பாடசாலைகளை மூடுமாறு கோரிக்கை

மூதூர், மார்ச் 1

திருகோணமலை கிண்ணியாவில் தீவிரமாகிவரும் டெங்கு தொற்றைக் கட்டுப்படுத்தும் வரை கிண்ணியா வலயத்துக்கு உட்பட்ட பாடசாலைகள் மற்றும் தனியார் கல்வி நிலையங்களை தற்காலிகமாக மூடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினரும் அபிவிருத்திக் குழு இணைத்தலைவருமான அப்துல்லா மகருப் கோரிக்கை விடுத்தார்.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற கிண்ணியா பிரதேச அபிவிருத்திக் குழுக்கூட்டத்தி லேயே அவர் இவ்வாறு கோரினார்.

அவர் தெரிவித்ததாவது:

கடந்த சில தினங்களாக பாடசாலைகளுக்கு வருகை தரும் மாணவர்களில் 20க்கும் அதிகமானவர்கள் காய்ச்சலால் பாடசாலை அதிபரின் அனுமதியுடன் பாடசாலையில் இருந்து இடைநடுவில் வீடுகளுக்குச் செல்கின்றனர்.

பாடசாலைச் சூழலிலும் டெங்கு நுளம்பின் தாக்கம் அதிகமாக உள்ளதை அவதானிக்க முடிகிறது. கல்வித் திணைக்களத்தின் ஊடாக ஆளுநர் மட்டத்தில் இதற்கான நடவடிக்கையை மேற்கொள்ள கடிதம் மூலம் அறிவிக்கப்படும்.

இந்த விடயம் தொடர்பான ஆலோசனைகள், கல்வித் திணைக்கள் அதிகாரிகள் மட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மட்டக்களப்பு மாவட்டத்தில் இருந்து நுளம்பை கட்டுப் படுத்தக் கூடிய புகையடிக்கும் கருவிகளுடன் உத்தியோகத்தர்கள் வந்துள்ளனர்.

கிண்ணியாவில் இதுவரை 3 பேர் டெங்குத் தொற்றால் இறந்துள்ளனர். 400க்கும் அதிகமானவர்கள் டெங்கு தொற்றுக்கு உள்ளாகி, கிண்ணியா தளவைத்திய சாலை மற்றும் திருகோணமலை பொது வைத்தியசாலைகளில் சிகிச்சை பெறுகின்றனர்.

அகில இலங்கைரீதியாக திருகோணமலை மாவட்டமானது டெங்குநோய் தாக்கத்தில் அபாயகரமான மாவட்டமாகவுள்ளது என சுகாதார திணைக்கள புள்ளிவிவரங்கள் தெரி விக்கின்றன - என்றார். (ற-ய.40)

# களுத்துறை சூட்டில் ஈடுபட்ட துப்பாக்கிதாரிகளின் வாகனம் மீட்பு

கொழும்பு, மார்ச் 1

**சிறைச்சாலைப் பேருந்து மீது துப்பாக்கிச் சூடு நடத்தியவர்கள் தப்பிச் செல்லப் பயன்படுத்தினர் என்று நம்பப்படும் வாகனம் ஒன்று களுத்துறை மொனராகலையில் நேற்று மீட்கப்பட்டது.**

களுத்துறைச் சிறைச்சாலைக்குச் சொந்தமான பேருந்து கைதிகளை ஏற்றிக் கொண்டு நீதிமன்று சென்றபோது, அதன்மீது இனந்தெரியாதவர்கள் சூடு நடத்தினர். அதில் 5 கைதிகளும், 2 சிறைச்சாலை உத்தியோகத்தர்களும் கொல்லப்பட்டனர்.

தாக்குதல் நடத்திய துப்பாக்கி தாரிகள் அங்கிருந்து வெள்ளை நிற வாகனம் ஒன்றில் தப்பிச் சென்றனர் என்று கூறப்படுகின்றது. (ற-5)

# இலங்கை மாணவியை நாடு கடத்தும் திட்டம் நிறுத்தம்

கொழும்பு, மார்ச் 1

பிரிட்டனில் கல்வி பயிலும் இலங்கைச் சேர்ந்த சிரோமினி சற்குணராஜாவை நாடு கடத்தும் நடவடிக்கை நிறுத்தப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

சிரோமினியையும் அவரது தாயையும் நேற்று நாடு கடத்த பிரிட்டன் அதிகாரிகள் திட்ட மிட்டிருந்தனர். அந்த நாட்டு நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அதிகாரிகளுடன் இடம்பெற்ற சந்திப்பின் பின்னர், இந்தத் திட்டம் கைவிடப்பட்டுள்ளது.

சிரோமினி கடந்த செவ்வாய்க்கிழமை கைது செய்யப்பட்டு தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்தார். சிரோமியும் அவரது தாயும் நேற்று தடுப்பு முகாமில் இருந்து விடுதலை செய்யப்பட்டுள்ளனர் என்று வெளிநாட்டு ஊடகச் செய்திகள் தெரிவிக்கின்றன. (ற-10)

# யுவதியின் படத்தை இணையத்தில் பதிவேற்றியவர் கைது

கொழும்பு, மார்ச் 1

திருமணம் செய்வதற்கு மறுப்பு தெரிவித்த யுவதி ஒருவரின் நிர்வாணப் புகைப்படங்களை இணையத்தில் பதிவேற்றம் செய்த இளைஞன் ஒருவர் கைது செய்யப்பட்டார் என்று பதுளை பொலிஸார் தெரிவித்தனர்.

பதுளை அலுகொல்லை பகுதியைச் சேர்ந்த 26 வயதுடைய பெண் ஒருவரை இளைஞன் ஒருவர் நீண்டகாலமாக காதலித்துள்ளார். எனினும் அந்த யுவதி மற்றுமொரு இளைஞரை திருமணம் செய்துள்ளார்.

ஆத்திரமடைந்த இளைஞன் தன்னிடம் இருந்த யுவதியின் நிர்வாணப்படங்களை இணையத்தில் பதிவேற்றம் செய்துள்ளார். சந்தேக நபரை பதுளை நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர். (ற-10)

# வறட்சி பாதித்த மாவட்டங்களில் மன்னார் மாவட்டமும் அடக்கம்

மன்னார், மார்ச் 1

மன்னார் மாவட்டம் உட்பட தற்போது 17 மாவட்டங்கள் வறட்சி மாவட்டமாக அரசால் பிரகட னப்படுத்தப்பட்டுள்ளன என்று வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

நாட்டில் ஏற்பட்ட கடும் வறட்சியின் காரணமாக விவசாயிகளின் விவசாயம் கடுமையாகப் பாதிப்படைந்துள்ளது. வறட்சி காரணமாக மன்னார் மாவட்ட விவசாயிகளும் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்துள்ளனர்.

பல ஏக்கர் விவசாயச் செய்கையும் பாதிப்படைந்திருந்தது. பாதிக்கப்பட்ட மன்னார் மாவட்ட விவசாயிகள் பட்டினிச் சாவை எதிர் நோக்க வேண்டிய நிலையும் ஏற்பட்டிருந்தது.

அரசு 16 மாவட்டங்களை வறட்சி மாவட்டமாக பிரகடனப்படுத்தி யுள்ளது. கடுமையாக வறட்சியால் பாதிக்கப்பட்ட மன்னார் மாவட்டத்தை வறட்சி மாவட்டமாக அரசு பிரகடனப்படுத்தாதிருந்தது.

இந்த விடயம் தொடர்பாக அமைச்சரின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்டது. மன்னார் மாவட்டமும் கடுமையாக வறட்சியால் பாதிக்கப்பட்ட மாவட்டமாக காணப்படுவதை சுட்டிக்காட்டினேன். தற்போது மன்னார் மாவட்டமும் வறட்சி மாவட்டமாக பிரகட னப்படுத்தப்பட்டுள்ளது.

ஏனைய மாவட்டங்களுக்கு வழங்கப்படுகின்ற வறட்சி நிவாரணங்கள் சமமான முறையில் மன்னார் மாவட்ட விவசாயிகளுக்கு வழங்க உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் - என்றார். (ற-10, 56)



## படை வீரர்களின் நலன்களில் கூட்டு அரசு முக்கியகவனம்

### அரச தலைவர் தெரிவிப்பு



கொழும்பு, மார்ச்1
“கூட்டு அரசு ஆட்சிக்கு வந்து இரண்டுவருடங்களில், படை வீரர்களின் நலன்கள் மற்றும் சலுகைளில் முக்கிய கவனம் எடுத்துள்ளது”.

இவ்வாறு அரசதலைவர்மைத்திரிபாலசிறிசேனதெரிவித்தார்.

மன்னார் முள்ளிக்குளம் கடற்படையின் வயம்ப தலைமையத்தில் மரைன் படைப் பிரிவின் பயிற்சி மற்றும் சின்னம் சூட்டும் நிகழ்வு நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறுதெரிவித்தார் என்று அரச தலைவரின் ஊடகப் பிரிவு அனுப்பி வைத்துள்ள செய்திக்குறிப்பில் குறிப்பி டப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது:

உலகின் முக்கிய நாடுகளில்,” இலங்கைப்பாதுகாப்புப்படையினர் இழந்து போயிருந்த பயிற்சி வாய்ப்புக்களை மீண்டும் பெற்றுக் கொடுக்க முடிந்துள்ளது. எதிர்காலத்தில்அவை அதிகரிக்கப்படும். இலங்கைக் கடற்படையினருக்கு உயர் தொழில்நுட்ப அறிவு மற்றும் பயிற்சிகளை வழங்குவதற்கு ஐக்கிய அமெரிக்கக் கடற்படை விருப்பம் தெரிவித்துள்ளது.

கடந்த போர்க் காலத்தில் இலங்கைக் கடற்படை, தாய்நாட்டுக்காக ஆற்றிய பணியைத் தற்போது நவீன தொழில்நுட்பத்துடன் இணைத்து தேசிய மற்றும் பிராந்தியப் பாதுகாப்புக்காகச் செயற்பட்டு வருகின்றமை பாராட்டுக்குரியது.

இலங்கைக் கடற்படை வரலாற்றில் முதற்றடவையாக மரைன்படைப்பிரிவுநிறுவப்பட்டுள்ளது. இந்த மரைன் படைப்பிரிவு சிறப்புத் திறனைக் கொண்டுள்ளது. கடற்கரை ஊடான எந்தவொரு தாக்குதலுக்கும்முகம்கொடுப்பதற்கும், கடலிருந்து தரைக்குச்சென்று எதிரியின் இலக்குகள் மீது தாக்குதல் நடத்துவதற்கும் சிறந்த பயிற்சி பெற்றுள்ளதுடன், காட்டுப்போர் நிலைகளைச் சார்ந்த நடவடிக்கைகளிலும் திறமை பெற்றுள்ளது.

ஐக்கிய நாடுகளின் அமைதி காக்கும் நடவடிக்கைகளுக்கான பங்களிப்பை வழங்குதல், இலங்கையிலும், பிராந்தியத்திலும் ஏற்படும் இயற்கை இடர்களின் போது உதவுதல் மற்றும் மனிதாபிமான உதவிகளை வழங்குவதற்கும் இந்தப் படைப்பிரிவு சிறப்பு பயிற்சி பெற்றுள்ளது. என்றுள்ளது. (ஐ-10)

# ஜெனிவாவில் அரசு: 10 பேர் தமிழர்: 25 பேர்

## புலம்பெயர்அமைப்புக்களை சேர்ந்தோரே அதிகமானோர்




ஜெனிவா, மார்ச்1
ஐ.நா. மனித உரிமைகள் சபையின் 34ஆவது கூட்டத் தொடர் நேற்று முன்தினம் ஆரம்பமானது. இலங்கை அரசு சார்பில் 10 பேர் கொண்ட குழுவினர் ஜெனிவாவுக்குச் சென்றுள்ள நிலையில், தமிழ் அமைப்புக்கள் அவற்றின் பிரதிநிதிகள் என்று இதுவரையில் 25 பேர் அங்கு சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கை தொடர்பாக 2015ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்டதீர்மானத்தின் கால எல்லை ஐ.நாவின் இந்த அமர்வுடன் முடிவடைகின்றது. அத்துடன் இலங்கை தொடர்பில் 4 விவாதங்கள் நடைபெறவுள்ளன. இலங்கை விவகாரம் ஐ.நாவின் இந்த அமர்வில் முக்கியத்துவம் பெற்றுள்ளது. அதனால் தமிழ்த் தரப்பினர் பலரும் ஜெனிவாவில் கூடியுள்ளனர் எனத் தெரியவருகிறது.

பிரிட்டன் தமிழர் பேரவை, கனடிய தமிழ்க் காங்கிரஸ், உலகத் தமிழர் பேரவை, நாடு கடந்த தமிழீழ அரசு, ஈழத்தமிழரவை, பிரான்ஸ் தமிழர் மனித உரிமை மையம் ஆகியவற்றின் பிரதி நிதிகளையும், இலங்கையிலிருந்து சென்றுள்ள சில தமிழ்ப் பிரதிநிதி களையும் கூட்டத் தொடரின் முதலாம்நாள் அமர்வின் போது ஐ.நா. மனித உரிமைகள் சபை வளாகத்தில் காண முடிந்ததாகத் தெரிவிக்கப் படுகின்றது. (ஐ-5)

## ஜெனீவா அமர்வில் தமிழ்மக்களின் எதிர்பார்ப்புகள் நிறைவேற்றப்படவேண்டும்

*கணேஸ்வரன் வேலாயுதம் கருத்து*

“ஜெனிவாவில் இடம்பெறும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைப்பேரவையின்34ஆவது அமர்வில் தமது அபிலாஷைகளும், கவலைகளும்தீர்த்து வைக்கப்பட வேண்டும் என்பதே தமிழ் மக்களின் எதிர்ப்பாகஉள்ளது.” இவ்வாறுசிவன் அறக்கட்டளை நிறுவனத்தின் இயக்குனரும் ரெலோ இயக்கத்தின் கொள்கைபரப்புச்செயலாளருமான கணேஸ்வரன் வேலாயுதம் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் மேலும் தெரிவித்ததாவது:

ஆட்சிமாற்றத்துக்குப்பின்னர் தமிழர்களின் பிரச்சினைகள் இதுவரைக்கும் தீர்த்து வைக்கப்பட வில்லை. விமானப் படையினரால் ஆக்கிரமிக்கப்பட்ட 42 ஏக்கர் காணிகளைஉடன்விடுவிக்குமாறு வலியுறுத்தி கேப்பாப்பிலவு, பிலக்குடியிருப்பு மக்கள் முன்னெடுத்துச் செல்லும் அறவழிப்போராட்டம் 29ஆவது நாளாகவும் இன்னும் தொடர்ந்து செல்கிறது. இங்குள்ள சிறு பிள்ளைகள் நோய் நிலைக்கு உள்ளாகுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இது தொடர்பாக அரச தலைவர்உரியநடவடிக்கை எடுப்பதாகஎதிர்க்கட்சித்தலைவரிடம் உறுதிமொழி வழங்கியுள்ளார். எனினும் இது விடயமாக காலம் தாழ்த்தாமல் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

இதற்காக நான் தென்னிலங்கை மக்களுடைய அரசியல் ஆதரவைப் பெற்றுக் கொடுக்க முயற்சி செய்தேன். தென் மாகாண சபை உறுப்பினர்சுமங்கலதேரரைஅங்கு அழைத்துச் சென்று போராட்டத்தில் ஈடுபடும் மக்களின் உண்மை நிலையைஅறியச் செய்தோம். அதனால் கேப்பாபிலவு மக்களின் நிலை தென்னிலங்கையிலும் எதிரொலிக்கச்செய்துள்ளோம்.

ஜெனிவாவில்கடந்தவருடம் இடம்பெற்ற ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள விடயங்களை நிறைவேற்றுவதற்கு இன்னும் அரசு தயாராக இல்லாத நிலையே உள்ளது. காலம் தாழ்த்தும் காரியங்களுக்கும் ஏமாற்றும் காய் நகர்த்தலுக்கான வடிவங்களுக்கும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை துணை போகுமா என்கின்ற சந்தேகக் கேள்விகளுக்கப்பால், தமிழ் மக்களின் நம்பிக்கைக்கு பிரதிபலிப்பாக 34 ஆவது அமர்வு அமைய வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பாகும். (ஐ)

## ஐ.நா. செயலரின் இதயத்தில் இடம் பிடித்த நாடு இலங்கை

### அமைச்சர் மங்களவிடம் அவரே எடுத்துரைப்பு



ஜெனிவா, மார்ச்1
“எனது இதயத்தில் இடம் பிடித்த நாடு இலங்கை” என்று ஐ.நாவின் புதிய பொதுச்செயலர் அன்டோனியோ குட்டரஸ், அயலுறவுத்துறை அமைச்சர் மங்கள சமரவீர விடம் தெரிவித்தார்.

கடந்த ஜனவரி முதலாம் திகதி புதியஐ.நா. பொதுச்செயலராகப் பொறுப்பேற்ற பின்னர் அன்டோனியோ குட்டரஸை, அயலுறவுத்துறை அமைச்சர் மங்கள சமரவீர முதல் முறையாகச் ஜெனிவாவில் நேற்று முன்தினம் சந்தித்தார்.

இந்தச் சந்திப்பில், ஜனநாயகத்தையும், மனித உரிமைகளையும் பலப்படுத்துவதற்கு இலங்கை அரசு எடுத்துள்ள நடவடிக்கைகளை வரவேற்ற ஐ.நா. பொதுச் செயலர், மறுசீரமைப்புகளை நடைமுறைப்படுத்துவதற்கு இலங்கைக்கு உதவ ஐ.நா தயாராக இருப்பதாகவும்தெரிவித்தார்.

அத்துடன் அகதிகளுக்கான ஐ.நா. உயர் ஆணையராகப் பணியாற்றியபோதுஉள்ளிட்ட பல சந்தர்ப்பங்களில், 1978 ஆம் ஆண்டில் இருந்து தான் பலமுறை இலங்கைக்குப் பயணம்மேற்கொண்டதாகவும், இலங்கை தனது இதயத்தில் இடம்பிடித்த நாடு என்றும் அவர்தெரிவித்தார். (ஐ-5)

## இலங்கைப் புலனாய்வுப் பிரிவினர் ஹொங்கொங் சென்ற விவகாரம் பொலிஸ் பேச்சாளர் மறுப்பு

கொழும்பு, மார்ச் 01
அமெரிக்காவின் இராணுவ இரகசியங்களை வெளியிட்டார் என்றுகுற்றஞ்சாட்டப்பட்டுள்ள எட்வேட் ஸ்னோவ்டெனுக்கு, அடைக்கலம் கொடுத்த இலங்கையர்களைத் தேடி இலங்கைப் புலனாய்வுப் பிரிவினர் ஹொங்கொங் சென்றுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன. ஆனால் அந்தத் தகவலை இலங்கை பொலிஸ் பேச்சாளர் பிரியந்த ஜெயக்கொடி மறுத்துள்ளார். 2013 ஆம் ஆண்டு அமெரிக்காவை விட்டு வெளியேறி ஸ்னோவ்டென், ஹொங்கொங் சென்றிருந்த போது, அங்குஏற்கனவே இலங்கையில் உயிராபத்து என்று கூறி, மூன்றாம் நாடு ஒன்றுக்குச் செல்வதற்காக அடைக்கலம் பெற்றிருந்த இலங்கையர்கள் ஐந்து பேர் ஸ்னோவ்டனுக்கு அடைக்கலம் வழங்கினர். இந்தச்செய்தியை இலங்கையர்கள் ஐவரும் வெளிப்படையாகவே ஊடகங்களுக்குத் தெரிவித்திருந்தனர்.

இதனையடுத்து இலங்கையின் புலனாய்வாளர்கள் குறித்த ஐவரையும் தேடி ஹொங்கொங் சென்றதாகவும், அவர்கள் ஐவரும் நாடுகடத்தப்படவுள்ளதாகவும் தகவல்கள்வெளியாகியிருந்தன.

ஆனால் இந்தத் தகவலை இலங்கை பொலிஸ் பேச்சாளர்மறுத்துள்ளார். (ஐ-10)

## பொலன்னறுவை மாவட்டத்தில் தீவிரமாகும் சிறுநீரக நோய்

### மாதாந்தம் 150பேர் இனங்காணப்படுகின்றனர்

கண்டி, மார்ச்1
பொலன்னறுவை மாவட்டத்தில் மாதாந்தம் 150 சிறுநீராக நோயாளர்கள் புதிதாக இனங்காணப்படுகின்றனர். -இவ்வாறு மாவட்ட வைத்தியசாலையின் சிறுநீரகப் பிரிவின் பிரதான வைத்திய அதிகாரி மலிக் மெத்தசூரிய தெரிவித்தார்.

பொலன்னறுவை மாவட்ட விவசாயக் குழுக் கூட்டத்தின் போத அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

2016, 2017ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் பொலன்னறுவை மாவட்டத்தில் சுமார் ஒரு லட்சத்து 20ஆயிரம் பேர் முழுமையான பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். பரிசோதனை வேலைத்திட்டத்துக்காக ஏனைய அமைப்புகளின் ஆதரவையும் சுகாதாரத் திணைக்களம் கோரவுள்ளது.

தற்போது பொலன்னறுவை மாவட்டத்தில் சிறுநீரக மத்திய நிலையங்கள் 6 அமைக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் கணிசமானளவு புதிய நோயளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர். என்றார். (ஐ-ய)



## நாமை சாகடித்தவர் உன் தெ.கொரியா குற்றச்சாட்டு

சியோல், மார்ச்.1

வடகொரிய அதிபர் கிம் ஜோங் உன்னே தனது அண்ணன் கிம் ஜோங் நாமைச்சாகடித்தார் என்று தென்கொரியா பகிரங்கமாக குற்றச்சாட்டை முன்வைத்தது.

மலேசியாவின் கோலாலம்பூர் விமானநிலையத்தில், கடந்த 13 ஆம் திகதி திங்கட்கிழமை கிம் ஜோங் நாம் சடலமாக மீட்கப்பட்டார்.

இந்தக் கொலையின் பின்னணியில் இந்தோனேசியப் பெண் சிட்டி ஆய்சா, அவரதுமலேசியக்காதலர், வியட்நாம் பெண் டொன் தி ஹவாங், வடகொரியாவைச்சேர்ந்தரிஜாங்சோல் நால்வரும் ஏற்கனவே கைதுசெய்யப்பட்டனர். வடகொரியத் தூதுவர் ஒருவருக்கும் தொடர்புள்ளது என்றுதெரிவித்துதற்போது விசாரணைகள் நடைபெற்று வருகின்றன.

இந்த நிலையில் நாமைக் கொன்றவர் உன்னே என்று தென்கொரியா பகிரங்கமாக குற்றம் சுமத்தியது.

இதற்காக 3 குழுக்களை தென்கொரிய அதிபர் கிம் ஜோங் உன் அமைத்திருந்தார். இரு குழுக்கள் நாமைக்கொல்வதற்கும்ஓர் குழு ஏனைய இரு குழுக்களுக்கு உதவி செய்வதற்கும் என அவற்றை அவர் நியமித்திருந்தார் என்று தென்கொரியா பகிரங்கமாகத் தெரிவித்துள்ளது. எனினும் இந்தத் தகவலை வடகொரியா மறுத்துள்ளது.

முன்னதாக, கிம் ஜோங் நாம்கொலைவிவகாரத்தில் மலேசியாவுடன்இணைந்து கூட்டுவிசாரணைக்குத் தயார் என்று வடகொரியா தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. (ம)



கிரீஸ் நாட்டின் துறைமுக நகரமான கலக்ஸ்டியில் வருடாவருடம் நடைபெறும் சாம்பல் திங்கள் விழா நேற்று முன்தினம் நடைபெற்றது. இந்த விழாவின் போது பல்லாயிரக்கணக்கான மக்கள் ஒன்றுகூடி, பலவர்ண மாவுகளை ஒருவர் மீது ஒருவர் எறிந்து தமது மகிழ்ச்சியை வெளிப்படுத்துவார்கள். மாவுப் போர் என்றும் இது அழைக்கப்படும். நடப்பு வருட விழாவின் போதும் பல்லாயிரக்கணக்கான மக்கள் ஆர்வத்துடன் கலந்துகொண்டனர். (ம)

## மேற்கு மோசூல் நகரில் மிகத் தீவிரமானது போர்

### மனிதப் பேரவலம் குறித்து கவலை தெரிவித்தது ஐ.நா.

பக்தாத், மார்ச்1

ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்புக்கும்ஈராக்அரச படைக்கும் இடையே ஈராக்கின் மோசூல் நகரின் மேற்குப் பகுதியில் நடைபெற்றுவரும்போர்உக்கிரமடைந்துள்ளதுஎன்று பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

ஈராக், சிரியா நாடுகளின் சில பகுதிகளைக் கைப்பற்றி அவற்றை ஒரு தனிநாடுஎன்று அறிவித்திருந்தது ஐ.எஸ்.ஐ.எஸ். (ஈராக், சிரிய இஸ்லாமிக் ஸ்ரேட்) அமைப்பு. அந்த அமைப்பின் பிடியில் இருந்தபலநகர்கள்மீட்கப்பட்டுவிட்டன. ஈராக்கின் இரண்டாவது பெரிய நகரானமோசூல்ஐ.எஸ்ஸின் பிடியிலேயே இருந்தது. இதன் கிழக்குப் பகுதி முழுவதுமாக மீட்கப்பட்டு விட்டது. மேற்குப் பகுதியைக் கைப்பற்றும் போர் கடந்த சில தினங்களுக்கு முன்னர் ஆரம்பித்தது. ஜாவ்சாக்பகுதி, தைகிரிஸ்ட்நதிக் கரையின் சில பகுதிகள் முழுமையாக மீட்கப்பட்டு விட்டன. ஏனைய பல இடங்களில்பரவலாககடும்போர் இடம்பெறுகிறது. ஜாவ்சாக் நகரில் உள்ள மக்கள் தற்போது ஈராக் படையால் வெளியேற்றப்படுகின்றனர். வான் வழியாகவும் ஐ.எஸ்ஸுக்கு எதிரான தாக்குதல்கள் நடத்தப்படுகின்றன.

இந்த நிலையில், மேற்கு மோசூலில் நிலவும் மனிதநேய நிலமைகளால் நாம் கவலையும் அதிருப்தியும் அடைந்துள்ளோம் என்று ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்தது.



**தாக்குதலில் கால்நடைகள் ஐ.எஸ்.ஐ.எஸ்ஸின் வியூகம்**

மேற்கு மோசூலில்தமதுபின்னடைவைச் சமாளிப்பதற்காகவும்இருப்பைத்தொடர்ந்தும் தக்க வைப்பதற்காகவும் ஐ.எஸ். ஐ.எஸ். அமைப்பு கால்நடைகளைப் பயன்படுத்தி தாக்குதல்களை நடத்துகிறது. நாய், ஆடு போன்ற விலங்குகளின் உடல்களில்வெடிபொருள்களைக் கட்டி பொதுமக்கள், படையினர் உள்ள இடங்களுக்கு செல்லவிட்டு வெடிக்கவைப்பதில்அந்த அமைப்புதீவிரம்காட்டுகிறது. தவிர, ஆளில்லாத சிறுரக விமானங்களும் ஐ.எஸ்ஸிடம் தற்போது உள்ளன. இவ்வாறான சவால்களால் மேற்கு மோசூல் மீட்புப் போரில் ஈராக்படைகள்சிரமத்தை எதிர்கொள்ளக்கூடும் என்றுகருத்துக்கணிப்புகள் உள்ளன. (ம)

## தனதுதெரிவு தொடர்பில் பதிலளித்தார் சின்னம்மா


சென்னை, மார்ச்1

அ.தி.மு. கழகத்தின் பொதுச் செயலாளராக தான் தேர்ந்தெடுக்கப்பட்டதுதொடர்பில்சசிகலா தேர்தல்ஆணையத்துக்கு பதில் வழங்கினார்.

அ.தி.மு. கழகம் தற்போது சசிகலா தலைமையில் சிலரும் முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் தலைமையில் சிலரும் என இரு பிரிவாக உடைந்துள்ளது.

கட்சியில் ஏற்பட்ட உடகட்சிப் பூசல்களால் ஓ.பன்னீர்செல்வத்தை அ.தி.மு. கழகத்தின் பொருளாளர் பொறுப்பில் இருந்து விடுவித்தது மட்டுமல்லாமல், அடிப்படை உறுப்பினர் அந்தஸ்தில் இருந்தும் சசிகலா நீக்கியுள்ளார்.

ஆனால்அவர்பொதுச்செயலாளராகநியமிக்கப்பட்மையே செல்லாது என்று ஓ.பி.எஸ். தரப்பினர் வாதிட்டு வந்தனர். இது தொடர்பாக தேர்தல் ஆணையத்திடம் முறைப்பாடும் வழங்கினர்.



இந்தமுறைப்பாடுகளுக்கு சசிகலா பதில்வழங்க வேண்டும் என்று தேர்தல் ஆணையம் உத்தரவு பிறப்பித்தது.

நேற்றுவரைகாலக்கெடுவும் வித்தித்தது. இந்த நிலையில் சசிகலாவின் தரப்புநியாயங்கள்நேற்று வழங்கப்பட்டன. (ம)



## ஆற்றுக்குள் பாய்ந்தது பஸ்; 11 பேர் பரி

### இந்தியாவில் துயரம்

புதுடெல்லி, மார்ச்1

இந்தியா ஆந்திர மாநிலம் விஜயவாடா அருகே பேருந்து ஒன்று பாலத்தில் இருந்து வீழ்ந்ததில் 11 பேர் சாவடைந்தனர். விசாகப்பட்டினத்தில் இருந்து ஹைதரபாத் நோக்கி சென்று கொண்டிருந்த தனியார் பேருந்து ஒன்றே இவ்வாறு விபத்துக்குள்ளானது. 11 பேர் உயிரிழந்தனர் என்று முதல்கட்டத் தகவல்கள் வெளியாகிய போதிலும் சில இந்திய ஊடகங்கள் 8 பேர் உயிரிழந்தனர் என்று குறிப்பிட்டன. 40 பேர் காயம





# முஸ்லிம் பயணிகளுக்கு தடை இன்று விதிக்கவுள்ளார் ட்ரம்ப்

வொஷிங்டன், மார்ச்1
அமெரிக்காவுக்குள் நுழைவதற்கு 7 இஸ்லாமிய நாடுகளைச் சேர்ந்த முஸ்லிம் பயணிகளுக்கு தடை விதித்து அமெரிக்க அதிபர் ட்ரம்ப் இன்று கைச்சாத்திடுவார் என்று வெள்ளை மாளிகையின் செய்தித் தொடர்பாளர் சீன் ஸ்பைசர் தெரிவித்தார்.
சிரியா, ஈரான், ஈராக், லிபியா, ஏமன், சோமாலியா, சூடான் ஆகிய 7 இஸ்லாமிய நாடுகளைச் சேர்ந்த அகதிகள், பயணிகள் அமெரிக்காவில் நுழைய தடை விதித்து கடந்த ஜனவரியில் அதிபர் ட்ரம்ப் உத்தரவு பிறப்பித்தார். முன்னேற்பாடு, அறிவித்தல்கள் இல்லாமல் பிறப்பிக்கப்பட்ட இந்தத் தடையால் குறித்த 7 நாடுகளின் 60 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பயணிகள் பாதிக்கப்பட்டனர். இதனால் இந்தத் தடையை அமெரிக்க நீதிமன்றங்கள் தற்காலிகமாக நீக்கியுள்ளன. இந்த நிலையில் 7 நாடுகளின் முஸ்லிம் அகதிகள், பயணிகளுக்கு தடை விதிக்க வகை செய்யும் புதிய உத்தரவை அதிபர் ட்ரம்ப் பிறப்பிக்கவுள்ளார்.
புதிய தடை உத்தரவு நாளை மறுதினம் புதன்கிழமை (இன்று) பிறப்பிக்கப்படும். இதை எவராலும் தடுத்து நிறுத்த முடியாது என்று வெள்ளை மாளிகையின் செய்தித்தொடர்பாளர் ஸ்பைசர் சன்மேலும் தெரிவித்தார். (ம)

# தலிபான் முக்கியஸ்தர் அமெ. தாக்குதலில் சாவு


தலிபான் அமைப்பின் முக்கியஸ்தர் ஒருவர் அமெரிக்காவின் ஆளில்லா விமானங்கள் நேற்றுமுன்தினம் நடத்திய தாக்குதலில் சாவடைந்தார். இந்தத் தகவலை அமெரிக்கா தெரிவித்தது. தலிபான் அமைப்பும் உறுதிப்படுத்தியது. முல்லா அப்துல் சலாம் அகுந்த் என்ற ஆயுததாரியே கொல்லப்பட்டார். ஆப்கானிஸ்தானின் குண்டூஸ் நகரை 2015 ஆம் ஆண்டு தலிபான் அமைப்பு வசப்படுத்தியது. இதில் முல்லா அப்துல் சலாம் முக்கிய பங்காற்றினார். அவரது தலைமையிலும் வழிகாட்டல்களிலும் தலிபான் அமைப்பு தொடர்ந்து பல தாக்குதல்களை நடத்தி வந்தமை குறிப்பிடத்தக்கது. (ம)



# காட்டு முயல்களை அழிக்கிறது ஆஸி.

ஆஸ்திரேலியாவின் சுற்றுச்சூழல் பேரழிவுக்கு மிகவும் காரணமாக விளங்கும் காட்டு முயலுக்கு எதிரான புதியதொரு வைரஸ் அந்த நாட்டில் அறிமுகப்படுத்தப்படவுள்ளது.
விவசாயப் பண்ணைகளுக்கு ஒவ்வோர் ஆண்டும் மில்லியன் கணக்கான டொலர் சேதங்களை விளைவிக்கின்ற காட்டு முயல்களில் ஐந்தில் ஒரு பகுதியை இந்த வைரஸ் அழித்துவிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
தென் கொரியாவில் உருவாக்கப்பட்ட இந்த வைரஸ், காட்டு முயல்களின் பல உறுப்புகளில் விரைவாக செயலிழப்பு ஏற்பட காரணமாகிறது. மனிதர்களையோ அல்லது ஏனைய விலங்குகளையோ இந்த வைரஸ் தாக்காது என்று அதிகாரிகள் தெரிவித்தனர். (ம)





# ஐ.எஸ். அமைப்புக்கு எதிராக பென்ரகன் புதிய வியூகங்கள்

வொஷிங்டன், மார்ச். 1
ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்புக்கு எதிரான தாக்குதல்கள் தொடர்பில் புதிய வியூகங்களை வகுத்துள்ளது அமெரிக்க இராணுவத் தலைமையகமான பென்ரகன். அதை அதிபர் ட்ரம்பின் அனுமதிக்காக அனுப்பி வைத்துள்ளது.
அமெரிக்க அதிபராக பொறுப்பேற்றவுடன் ட்ரம்ப் பல்வேறு கட்டளைகளைப் பிறப்பித்தார். அவற்றில், ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்புக்கு முடிவுகட்டுவதற்காகப் பல திட்டங்களை பரிசீலித்துத் தருமாறு பென்டகனுக்கு உத்தரவிட்டார். இந்த உத்தரவை அடுத்தே பென்டகன், பல்வேறு திட்டங்கள், வியூகங்கள் அடங்கிய ஆய்வறிக்கையைத் தயாரித்தது.
அதிபர் ட்ரம்பின் ஒப்புதலுக்காக அதை வெள்ளை மாளிகைக்கு அனுப்பியுள்ளது. (ம)

# சூரியனுக்கு விண்கலம் நாசா அதிரடித் திட்டம்

வொஷிங்டன், மார்ச்1
சூரியனுக்கு விண்கலமொன்றை அடுத்த ஆண்டில் அனுப்புவதற்கு நாசா திட்டமிட்டுள்ளது என்று விஞ்ஞானி எரிக் கிறிஸ்ரியன் தெரிவித்தார். சூரியனுக்கு விண்கலத்தை அனுப்புவதில் இரு சிக்கல்கள் இருக்கும். ஒன்று, சூரியன் பூமியில் இருந்து 14 கோடியே 90 லட்சம் கிலோ மீற்றர் தொலைவில் உள்ளது. இரண்டாவது சூரியனின் வெப்பநிலை கிட்டத்தட்ட 5 ஆயிரத்து 500 டிகிரி செல்சியஸ் ஆக இருக்கும்.
எனவே இத்தகைய வெப்பநிலைகளை தாக்குப்பிடித்து சூரியனுக்கு நெருக்கமாகச் சென்று ஆய்வு நடத்தக் கூடிய விண்கலங்கள் விசேட உலோகங்களால் ஆக்கப்படவுள்ளன. அவை அடுத்த வருடம் ஏவப்படலாம் என்று கிறிஸ்ரியன் மேலும் தெரிவித்தார். (ம)



# மெரீனாபோல் மாறுகிறது நெடுவாசல் போராட்டம்

சென்னை, மார்ச்1
தமிழகம் புதுக்கோட்டை மாவட்டம் நெடுவாசல் கிராமத்தில் இயற்கை எரிவாயு பெறும் திட்டத்துக்கு இந்திய மத்திய அரசு ஒப்புதல் வழங்கியுள்ள நிலையில் அதைக் கண்டித்து 14 ஆவது நாளாக நேற்றும் போராட்டம் தொடர்ந்தது.
இயற்கை எரிவாயு பெறும் திட்டத்தைச் செயல்படுத்தினால் விவசாய நிலங்கள் அழியும், நெடுவாசல் கிராமத்தையொட்டிய சுமார் 50 கி.மீ. தூரத்திற்கு நிலத்தடி நீர் மட்டம் பாழாகும் என்ற அச்சம் இருப்பதாலேயே திட்டத்துக்கு வழங்கிய அனுமதியை திரும்பப் பெறவேண்டும் என்று வலியுறுத்தி இந்தப் போராட்டம் நடத்தப்படுகிறது.
நெடுவாசல் கிராம மக்களுடன்



பாடசாலை மாணவர்கள் இளைஞர்கள் எனப் பலரும் இணைந்துள்ளதால் ஜல்லிக்கட்டு மெரினா போராட்டம்போல் இந்தப் போராட்டம் மாற்றம் பெறலாம் என்றும் கருதப்படுகிறது. சமூக வலைத்தளங்களிலும் போராட்டத்துக்கு ஆதரவு திரட்டப்படுகிறது.
இயற்றை எரிவாயு மையம் அமையப்போகும் இடத்துக்கு அருகாமையில் பந்தல் அமைத்து நெடுவாசல் கிராம மக்கள் சுழற்சி முறையில் உணவு ஒறுப்பில் ஈடுபட்டு வருகின்றனர்.
மக்களின் போராட்டத்துக்குத் தி.மு. கழகத்தின் செயல் தலைவரும் சட்டசபை எதிர்கட்சித் தலைவருமான ஸ்டாலின், சீமான் உள்ளிட்ட அரசியல் பிரமுகர்கள் தமது ஆதரவைத் தெரிவித்தனர்.
மத்திய அரசின் பெட்ரோலியத்துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், இந்த இயற்கை எரிவாயுத் திட்டத்துக்கு குறைந்த அளவே இடம் கையகப்படுத்தப்படும், நிலத்தடி நீருக்கு பாதிப்பு ஏற்படாது, 500 பேருக்கு வேலைவாய்ப்புக் கிடைக்கும் என குறிப்பிடப்பட்டது. (ம)

# தாப உயிரிழப்பு

டைந்த நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். முதல்கட்ட விசாரணைகளின் அடிப்படையில் ஓட்டுநரின் கவனக்குறைவாலேயே விபத்து இடம் பெற்றது என்று தெரிவிக்கப்பட்டது. (ம)

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## எஞ்சிய காணிகளும் விடுவிக்கப்படவேண்டும்

ஒரு வழியாக பிலக்குடியிருப்பு மற்றும் புதுக்குடியிருப்பு மக்களின் அறவழிப் போராட்டம் முடிவுக்கு வரும் அறிகுறிகள் தென்பட்டிருக்கின்றன. அவர்களின் காணிகளை விடுவிப்பதற்கான ஆரம்பப் பணிகள் தொடங்கப்பட்டு விட்டனஎன்று அறியவருகின்றது. மக்கள்தமது காணிகளை விடுவிப்பதற்குக் கிட்டத்தட்ட ஒரு மாத காலத் தொடர் போராட்டம் நடத்தவேண்டியிருந்தமை கவலையளிக்கும் விடயம்தான் என்றாலும், இறுதியில் அவர்களுக்கு வெற்றி கிடைத்திருப்பது மகிழ்ச்சிக்குரியதே.

நாளை அல்லது அதன் பின்னரான ஓரிரு நாள்களில் காணிகள் விடுவிக்கப்படும் என்று அறிய முடிகிறது. அதற்கான நடவடிக்கையை எடுத்தமைக்காக அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவைப் பாராட்டுகின்றோம். அதேநேரத்தில் எந்தப்பிரச்சினையும்சிக்கலும்இன்றிவிடுவிக்கப்படக்கூடிய இந்தக் காணியை விடுவிப்பதற்கு கிட்டத்தட்ட ஒரு மாத காலத்தை இழுத்தடித்து மக்களை வீதிகளில் பரிதவிக்கவிட்டமைக்காக அவரைக் கண்டிக்கவும் வேண்டியிருக்கிறது.

கொழும்பில் ஆட்சியில் உள்ள எந்த அரசிடமிருந்தும், காணிகளையும் உரிமைகளையும் வீதிக்கு இறங்கிப் பேராடித்தான் பெறவேண்டியிருக்கிறது என்ற பாடத்தை இந்தப் போராட்டம் நிலை நிறுத்தியிருக்கிறது. இதற்கான பொறுப்பையும் படைகளின் தளபதி என்ற வகையில் அரச தலைவரே ஏற்றுக்கொண்டாகவும் வேண்டும்.

பிலக்குடியிருப்பு, புதுக்குடியிருப்பு மற்றும் பரவிப் பாஞ்சான் காணிகள் விடுவிக்கப்படுவதுடன் மட்டும் இந்தப் பிரச்சினை தீர்ந்துவிடப்போவதில்லை. யாழ்ப்பாணத்திலும் கிளிநொச்சியிலும், வன்னியிலும் இன்னமும் விடுவிக்கப்படவேண்டிய காணிகள் பெருமளவில் இருக்கின்றன. மக்களின் காணிகள் அவர்களிடமே திரும்ப ஒப்படைக்கப்படும் என்று அரசதலைவர் தேர்தலில் வழங்கப்பட்ட வாக்குறுதி நிறைவேற்றப்படாமல் இருக்கிறது. இவற்றுக்கும் விரைவில் தீர்வு காணப்படவேண்டும்.

அந்தக் காணிகள் எப்போது விடுவிக்கப்படும் என்கிற தீர்க்கமான அட்டவணையை அரச தலைவர் படைகளின் அதிகாரிகள் ஊடாக அறிவிக்கவேண்டும். இல்லையேல் அந்தந்தப்பகுதி மக்களும்தமது காணிகளைவிடுவிப்பதற்காகப் போராட்டத்தில் குதிக்கக்கூடிய வாய்ப்புகள் அதிகம் இருக்கின்றன. எனவே, எஞ்சியுள்ள காணிகளை விடுவிப்பதற்கான திட்டத்தை அரசு அறிவிக்கவேண்டும்.

இதற்கிடையே பிலக்குடியிருப்பில்தற்போது போராட்டத்தில் ஈடுபடும் மக்களுக்கு கோப்பாபிலவு மாதிரிக் கிராமத்தில் வழங்கப்பட்ட காணிகளைத் தரமுடியாது என்று கூட்டமைப்புடனான சந்திப்பில் அரசதலைவர் தெரிவித்திருப்பதும் ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்று. அவர்களுக்கு முன்னர், பிலக்குடியிருப்பையொட்டிய பகுதிகளில் மீளக்குடியமர்ந்த மக்களுக்கு மாதிரிக் கிராமக் காணியும் சேர்த்தே கொடுக்கப்பட்டிருக்கும் நிலையில், இந்த மக்களுக்கு மட்டும் அவற்றைக் கொடுக்க மறுப்பது அரச நீதியல்ல. அரசுக்கு எதிரான போராட்டத்தில் ஈடுபட்டார்கள் என்பதற்காகப் பழிவாங்குவதாகவே அதுஇருக்கும்.

தமிழ் மக்களின் வாக்குப் பலத்தால் ஆட்சிக்கு வந்த அரசும் அதன்தலைவரும் இப்படிப் பழிவாங்கும் விதத்தில் செயற்படுவதை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது. அனைவருக்கும் ஒரே நீதியே நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். அந்த மக்கள் சொந்த இடத்திற்குத் திரும்பினாலும், மாதிரிக்கிராமத்தில் உள்ள காணியும் அவர்களுக்கே கொடுக்கப்படும் என்று அவர்களைக் குடியமர்த்தும்போதே வாக்குறுதி வழங்கப்பட்டிருந்தால் அதனை நிறைவேற்றுவதும் அரசினதும் அரச தலைவரினதும் கடமை.

பிலக்குடியிருப்பு மக்கள் ஏமாற்றப்படுவதோ, பழிவாங்கப்படுவதோ இடம்பெறக்கூடாது. அது எதிர்பார்க்கப்படும் நல்லிணக்கத்திற்கு பெரும் பாதகமாக அமைந்துவிடக்கூடும். பழிவாங்குவதைவிடுத்து, தமிழ் மக்களை அரவணைத்துச் செல்ல அரசுகள் பழகவேண்டும்.

# நீதிச் சேவையில் பெருந்தோட்ட மக்களுக்கான அங்கீகாரம்

**மேல் நீதிமன்ற நீதிபதியாக கண்ணன் நியமனம் குறித்து ஜனாதிபதி விளக்கம்**

**விமானசேவைப் பணிப்பாளர்கள் அமைச்சரையே ஓரம்கட்டி விடுகிறார்கள் அமைச்சரவையில் திடுக்கிடும் தகவல்**

சண்டேரைம்ஸ் கட்டுரையில் இருந்து ரெங்கன்


இலங்கை விமானசேவைகள் தொடர்பில் ஏற்பட்டுள்ள சிக்கல்கள்மற்றும்பொருளாதாரப் பிரச்சினைகள் குறித்து கடந்த வாரம் கூடிய அமைச்சர்கள் கூட்டத்தில் விரிவாகவும் காரசாரமாகவும் விவா திக்கப்பட்டது. இது தொடர்பாக அமைச்சர்ஹாபிர்ஹாசிம்பலதிடுக்கிடும் தகவல்களை அமைச்சரவையில் வெளியிட்டுள்ளார்.

> மேல்நீதிமன்ற நீதிபதியாக இராமநாதன் கண்ணன் நியமிக்கப்பட்ட சூழ்நிலை குறித்து ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, கடந்த செவ்வாய்க்கிழமை அமைச்சரவை உறுப்பினர்களுக்கு விளக்கினார். மலையக பெருந்தோட்ட சமூகத்தைச் சேர்ந்த ஒருவர் மேல்நீதிமன்ற நீதிபதியாக நியமனம் பெறுவது இதுவே முதற்றடவை. இவ்வாறான உயர் பதவிகளில் அந்தச் சமூகத்தவர்களுக்கு பெரும்பாலும் சந்தர்ப்பம் கிடைப்பதில்லை என்பதையும் சிறிசேன சுட்டிக் காட்டினார்

மேல்நீதிமன்றநீதிபதியாக இராமநாதன் கண்ணன் நியமிக்கப்பட்ட சூழ்நிலை குறித்து ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, கடந்த செவ்வாய்க்கிழமை அமைச்சரவை உறுப்பினர்களுக்கு விளக்கினார். மலையக பெருந்தோட்ட சமூகத்தைச் சேர்ந்த ஒருவர் மேல்நீதிமன்ற நீதிபதியாக நியமனம் பெறுவது இதுவே முதற்றடவை. இவ்வாறான உயர் பதவிகளில் அந்தச் சமூகத்தவர்களுக்கு பெரும்பாலும் சந்தர்ப்பம் கிடைப்பதில்லை என்பதையும் சிறிசேன சுட்டிக் காட்டினார்.



சட்ட வல்லுநரான இராமநாதன் கண்ணன், உயர்நீதிமன்ற நீதிபதியாக நியமிக்கப்பட்டமை தொடர்பில் ஜனாதிபதி விளக்குகையில், இந்த நியமனம் தொடர்பாக இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் (BASL) எனக்குக் கடிதம் எழுதியிருந்தது. சங்கத்தின் கோரிக்கை சாத்தியம் இல்லை என்று தெரிவித்து நான் முன்னர் அவர்களுக்கு அறிவித்திருந்தேன். அதன் பின்னர் சட்டத்தரணிகள் சங்கப்பிரதிநிதிகள் குழுவொன்று என்னைச் சந்தித்து விண்ணப்பம் ஒன்றைமுன்வைத்தது. அதன் பின்னர் நீதிச் சேவைகள் ஆணையம் மற்றும் சட்டமா அதிபர்ஆகியதரப்புக்களுக்கு நான் கடிதம் எழுதினேன். இரு தரப்பினரும் தாம் இந்த நியமனத்தை ஆதரிப்பதாகப் பதிலனுப்பியிருந்தார்கள்என்று குறிப்பிட்டார். அவர் மேலும் கூறுகையில், இலங்கை பெரும்தோட்டச் சமூகத்தைப் பிரதிநிதித்துவம் செய்யும் முதலாவது மேல் நீதிமன்ற நீதிபதியாக



தமக்கும் நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்கவுக்கும் இடையில் மோதல்களை ஏற்படுத்திவிட ஊடகங்கள் முயல்வதாக அமைச்சர் ஹாசிம் கருதுவரானால், அவர் தேசிய விமான சேவை யினரையே குற்றம் சாட்ட வேண்டும். தனது சொந்த அமை ச்சரை, அமைச்சரவையை மற்றும் சட்டமா அதிபரை எல்லாம் ஓரம் கட்டி விட்டு, வரியிறுப்பாளர்களின் பணத்தை கபளீகரம் செய்யும், வருமானம் தராத ஒரு சேவையை நடத்தும் அதிகாரம் பெற்ற ஒரு சுயாதீன நிறுவனமாக அது செயற்பட்டுள்ளது.

கண்ணன் திகழ்கின்றார். உயர் மட்ட நிலைகளில் அந்தச் சமூகத்துக்கு பிர திநிதித்துவம் இல்லாமல் காணப்படு கின்றது என்று சுட்டிக்காட்டினார்.

**விளையாட்டு நிதி அமைச்சர்கள் மோதல்**

கடந்த செவ்வாய்க்கிழமை நடை பெற்ற அமைச்சர்கள் கூட்டத்தில், விளையாட்டுத்துறை அமைச்சர் தயா சிறி ஜயசேகரவுக்கும், நிதி அமைச்சர் ரவிகருணாநாயக்கவுக்கும் இடை யில் சிறு மோதல் ஏற்பட்டது. நிதி அமைச்சர் எப்போதுமே இலக்கங்க ளைப் பற்றியே பேசிக்கொண்டிருக்கி றார் என்று ஜயசேகர கூறியபோது, இலக்கங்களை எனது நண்பரால் புரிந்து கொள்ள முடியாது போனால் என்னால் ஒன்றும் செய்யமுடியாது என்று கருணாநாயக்க திருப்பிக்கூறி னார். முன்னைய அரசுத் தலைவர் களிடமிருந்து ஒரு சிக்கல் மிக்க பொருளாதார நிலைமையை நாம் கையேற்றுள்ளோம் என்றும் அவர் குறிப்பிட்டபோது, முன்னைய அரசில் அங்கத்தவராக இருந்துள்ளவரான ஜயசேகர குறுக்கிட்டு, இந்தக் குற்றச் சாட்டுகளில் சிறிசேனவையும் நிதி அமைச்சர் கருணாநாயக்க சேர்த்துத் தான் கூறுகிறாரா என்று கேட்டார். அதற்குத் திருப்பிப் பதிலளித்த கரு ணாநாயக்க, இந்தக் குற்றச்சாட்டுக்க ளில் அவர் குறிப்பிடப்படவில்லை என்பதை அவர் புரிந்து கொள்வார் என்றார்.

பேஜட் வீதி இல்லத்தில் கடந்த வாரம் நடந்த சிறிலங்கா சுதந்திரக்கட்சி தேர் தல் தொகுதி ஏற்பாட்டாளர்கள் கூட்டம் ஒன்றுக்கு ஜனாதிபதி சிறிசேன தலைமை வகித்தார். கட்சியிலுள்ள இரண்டு பிரிவினராலும் ஏன் ஒன்று சேர முடியாமல் இருக்கின்றது என்று பலரும் கேட்கிறார்கள். இந்தக் கேள் வியானது, இப்போது கடுமையான ஊழல்மற்றும்மோசடிக்குற்றச்சாட்டுக்க ளில் சிக்கியுள்ளவர்களை விடு விக் கும் நோக்கத்தைக் கொண்டிருக்கின் றது என்று ஜனாதிப்தி மிகச்சாதாரண மாகக் குறிப்பிட்டார். அப்படிப்பட்டவர் கள் தான் ஒற்றுமையைப் பற்றிப் பேசுகிறார்கள் என்று கூறிய ஜனாதி பதி என்னால் அதனைச் செய்ய முடி யாது. இப்பொழுது நடைபெற்று வரும் விசாரணைகள் தொடர்ந்து நடைபெறும் என்றார். சிறிலங்கா சுதந்திரக்கட்சியைச் சுத்திகரிக்க வேண்டும் என்று மக்கள் விரும்பு கிறார்கள். முந்திய அரசில் ஊழல்கள் நிலவியமை பற்றியும், திருடுபவர்கள் இருந்தமைபற்றியும்குற்றச்சாட்டுக்கள் இருக்கின்றன. தற்போதைய அரசில் இருப்பவர்கள் மீதும் அதேவிதமான குற்றச்சாட்டுக்கள் எழுந்துள்ளன என் றார். சுத்தமற்றவர்கள் பலர் இருக்கி றார்கள் என்றார் ஜனாதிபதி.

கட்சியின் ஏற்பாட்டாளர்கள் சிறப்பா கச் செயற்படுபவர்களாக இருந்து வரவேண்டும். கட்சியின் நிறைவேற் றுக் குழுக் கூட்டம் மார்ச் மாதம் மூன் றாம் திகதி இலங்கை மன்றக் கல் லூரி மண்டபத்தில் நடைபெறவிருக் கின்றது. மே தினத்தைப் பெரிய அளவில் கொண்டாடுவதற்குத் தாம் விருப்பம் கொண்டிருப்பதாக சிறி சேன அறிவித்தார். அதன் பின்னர் சட்டவாளர் இராமநாதன் கண்ணன், மேல் நீதிமன்ற நீதிபதியாக நியமிக் கப்பட்டமை தொடர்பான விளக்கத்தை யும் கூறினார்.

**சிறிலங்கா விமான சேவை பற்றிய குற்றச்சாட்டுகள்**

செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற கூட் டத்தில் வெளியான மிக முக்கியமான தகவலானது இலங்கை விமான சேவைகளில் (சிறிலங்கா எயார் லைன்ஸ்) உள்ள பாரதூரமான நிலை மைகளை மிகத் தெளிவுபடுத்துவ தாக இருந்தது. இதில் ஒன்று, விமா னசேவையின் பணிப்பாளர்கள் தொடர்ச்சியாகவே அவர்களின் அமைச்சரைப் புறக்கணித்துச் செயற் பட்டு வந்துள்ளார்கள் என்பதாகும். ஏனைய அரசு நிறுவனங்களின் பணிப்பாளர் சபையினர் அனைவரும் இதைவிட சிறு காரணங்களுக்காக பதவிகளை விட்டு விலகுமாறு கேட் கப்பட்டுள்ள நிலைமையில், இது இவ்வாறு நடைபெற்றுள்ளது. அவர் களின் அமைச்சர் மட்டும் ஓரம்கட்டப் பட்டுள்ளார் என்றில்லை. விமான சேவைகள் குறித்த விடயங்களுக்கு நாடாளுமன்றத்தில் பதிலளிக்க வேண்டியவராகவும் அவர் இருக் கின்றார் என்பதும் குறிப்பிடத்தக்கது. முகாமையாளர்கள், விமான ஓட்டிக ளின் சங்கத்தையும் பகைத்துக் கொண்டுள்ளார்கள். அவர்கள் தலை வர் அஜித் டயஸ் மற்றும் இன்னொரு முக்கியஸ்தரான சுரேன் ரத்வத்தை ஆகியவர்களுடன் சந்திப்பொன்றுக்கு கோரிக்கை விடுத்திருந்தபோதிலும், அதற்குப் பதில் கிடைக்கவில்லை. தேசிய விமான சேவையின் மோச மான நிலைமையை எடுத்துக் காட்டு வதாக இது இருப்பதாக விமான ஓட் டிகள் சங்கம் குறிப்பிட்டுள்ளது. இதன் காரணமாக விமான ஓட்டிகள் சங்கம் தொழில் முறை நடவடிக்கை ஒன்றை மேற்கொள்ள, பிரேரணை ஒன்றை முன்வைத்த போது 160 பேர் "ஆம்" என்று வாக்களித்திருந்தனர். 75 பேர் மட்டும் "இல்லை" என்று வாக்களித்தி ருந்தனர். தொழில் முறை நடவடிக்கை என்றால், வேலை நிறுத்த மாகவும் இருக்கலாம். அல்லது சட்டப்படி வேலை என்பது போன்ற ஏதாவது ஒரு நடவ டிக்கையாகவும் இருக்கலாம். இதன் விளைவு, தேசிய விமான சேவைக்கு மேலும் அதிக நட்டம் ஏற்படுவதாகவே இருக்கும். அவ்வா றாயின் விமான சேவை அதிகாரிகள் மீண்டும் அதிக நிதி கள் அல்லது கடன்க ளைப் பெறுவதற் கான உறுதிகளை யும் கேட்டு அமைச்ச ரவையினரைத் தான் நாடவேண்டியி ருக்கும். அதன் மூலமே விமான சே வையைக் கொண்டு நடத்தக்கூடிய தாய் இருக்கும். இது விமான சே வைக்கோ அதன் ஊழியர்களுக்கோ நன்மை புரியப் போவதில்லை.

**விமானசேவை அதிகாரிகளை அமைச்சர் குற்றம் சாட்ட வேண்டும்**

தமக்கும் நிதி அமைச்சர் ரவி கருணா நாயக்கவுக்கும் இடையில் மோதல் களை ஏற்படுத்திவிட ஊடகங்கள் முயல் வதாக அமைச்சர் ஹாசிம் கருதுவா ரானால், அவர் தேசிய விமான சேவை யினரையே குற்றம் சாட்ட வேண்டும். தனது சொந்த அமைச்சரை, அமைச் சரவையை மற்றும் சட்டமா அதிபரை எல்லாம் ஓரம் கட்டி விட்டு, வரியிறுப் பாளர்களின் பணத்தைக் கபளீகரம் செய்யும், வருமானம் தராத ஒரு சேவையை நடத்தும் அதிகாரம் பெற்ற ஒரு சுயாதீன நிறுவனமாக அது செயற்பட்டுள்ளது.

ஜனாதிபதித் தேர்தலின்போதும், பொதுத் தேர்தலின்போதும் லஞ்சத் தையும் மோசடி ஊழல்களையும் ஒழிப்பதாக வாக்குறுதிகள் வழங்கப் பட்டிருந்தபோதும், இதில் அரச இயந் திரம் மிக மந்தமாகவே நகர்வதாகத் தெரிகின்றது. உள்நாட்டு மற்றும்வெளி நாட்டுக் கடன்கள் தொடர்பாக பொரு ளாதார நெருக்கடி ஒன்றை நாடு எதிர்நோக்கக் கூடிய நிலைமையில், பொது நிறுவனங்கள் தமது தவறான முகாமைத்துவம் காரணமாக பெரு மளவில் நட்டங்களை ஏற்படுத்திக் கொண்டிருப்பதை அனுமதிப்பது சரியா என்பது பெரும் கேள்வியாகக் காணப்படுகின்றது.

பதவியில் அமர்ந்த பல அரசுகளும் தமது ஆதரவாளர்கள், நண்பர்கள், நிதி சேகரித்தளிப்பவர்கள் மற்றும் எடுபிடிகளை முக்கிய பதவிகளில் நிய மிப்பதை வழக்கமாகக் கொண்டிருந் துள்ளன. அவர்களால் சேவைகளை வழங்கமுடியாமல் தோல்வி ஏற்படு கையில் அவர்கள் மட்டும் தோல்வியு றுவதில்லை. அவர்களை நியமித்த வர்களும் தோல்வியடைகின்றனர். அவர்கள் தலைமைவகிக்கும் நிறுவ னமும் தோல்வியுறுகின்றது. ஜனாதி பதியே ஒப்புக்கொள்கின்றார் ஊழல் கிருமியானது, தமது அரசுக்குள்ளும் நுழைந்து விட்டது என்பதாக. இதற் காக பொதுமக்களே பெரும[illegible]வில் விலைகொடுப்பவர்களாய் [illegible]ள்ள னர்.



# வாசகர் திருமுகம்

## நிதானமாகச் செயற்பட முயல்வோம்

கடந்த பெப்ரவரி 23 ஆம் திகதிய உதயனில் பிரசுரமாகியிருந்த எதிர்க்கட்சித் தலைவர் சம்பந்தன் ஐயாவின் நாடாளுமன்றப் பேச்சு இன நல்லிணக்க முயற்சிக்குப் பொருத்தமானதொரு உதாரணம். அரசியல் நெருக்கடி நிலவும் தறபோதைய சந்தர்ப்பத்தில் நிதானம் மிக அவசியம். அது சம்பந்தனிடம் இருக்கிறது. சுமந்திரனைப் பற்றி அவர் சொன்னதும் நூற்றுக்கு நூறு உண்மை. கூட்ட மைப்பைக் குறைகூறி விமர்சிக்கும் தரப்பினர்களுக்கு இது நல்ல அடி. மட்டக்களப்பில் "எழுக தமிழ்" கூட்டம் நடத்தி இவர்கள் எதைத்தான் சாதித்தார்கள்? சும்மா கிடந்த சங்கை ஊதிக் கெடுத்தது தான் மிச்சம். முதலமைச்சர் விக்னேஸ்வரனுக்கு அடுத்த தேர்தலில் நாடாளுமன்றத்துக்குத் தாம் செல்லவேண்டும் என்றதொரு ஆசை தொற்றிக் கொண்டுள்ளது. அதற்காகத் தான் புலம் பெயர்ந்த சில தீவிரவாத அமைப்புக்களுடன் அவர் நெருக்கம் கொண்டா டுகின்றார் .முதலில் கஜேந்திர குமாரை ஆதரித்த இந்த அமைப்புக்கள் இப்போது விக்னேஸ்வரனுக்குப் பின்னால் நிற்கின்றன். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மூலம் தமிழ் மக்களது பிரச்சினைக்குத் தீர்வு கிட்டுவதை இவர்களில் எவரும் விரும்புவதில்லை, தமிழ் மக்களது கஷ்டதுன்பங்களை வைத்து அரசியல் நடத்தத்தான் இவர்களுக்கு விருப்பம்.

இன்றைய நாட்டின் அரசியல் நிலை, படு பயங்கரமாகப் போய்க் கொண்டிருக்கிறது. கிழக்கில் சில தீய சக்திகள் கோயில்களை, விகாரைகளை உடைத்து மீண்டும் இனக் கலவர மொன்றை ஏற்படுத்த முயற்சிக்கின்றன. முன்னர் நாட்டுக்குள் இருந்து செயற்பட்ட இந்தத் தீய சக்திகள், இன்று வெளியில் இருந்து கொண்டு செயற்படுகின்றன. எனவே ஈழத் தமிழ் மக்களாகிய நாம், இன்று நிதானத்துடன் செயற்பட்டு உரிய அணுகுமுறைகளைக் கைக் கொண்டு, எமது உரிமைகளைப் பெற்றுக் கொள்ள முயல வேண்டி யது காலத்தின் கட்டாயமாகும்.

எஸ்.ஆர்.சந்திரன்,
கொழும்பு_06

இ.இராஜேஸ்கண்ணன்



# தனித்துத் தெரியும் அஜந்தகுமாரின் பரிசளிக்கப்பட்ட கடல்

அஜந்தகுமார் நன்கு அறியப்பட்ட ஒரு படைப்பாளி. கவிஞராய், சிற்றிலக்கிய ஏட்டின் ஆசிரியராய், சிறுகதை எழுத்தாளராய், சிறந்த தமிழியல் ஆய்வாளராய், பத்தி எழுத்தாளராய், நல்லதொரு உரைஞராய் பல பரிமாணங்களில் அறியப்பட்டவர். தமிழில் முதுதத்துவமாணிப் பட்டம் பெற்ற இவரது ஆய்வுப் புலமையை வெளிக்காட்டுபவையாக 'தனித்துத் தெரியும் திசை', 'படைப்பின் கதவுகள்' முதலிய நூல்கள் அமைகின்றன. இலங்கையிலும் வெளிநாடுகளிலும் பல ஆய்வரங்குகளில் பங்கேற்று தமிழியல் சார்ந்த புலமைத்துவத்தை நிலைநாட்டி வருபவர். இன்றுவரை தொடர்ந்து தன் ஆய்வாற்றலைக் குறைத்துக் கொள்ளாது படைப்பாற்றலையும் வெளிப்படுத்திவரும் அஜந்தகுமார் அண்மைக் காலக் கவிஞர்களில் தனித்துவமான அடையாளங்களோடு பயணிப்பவர். இவரது 'ஒரு சோம்பேறியின் கடல்' என்னும் கவிதைத் தொகுதி கவனிப்புப்பெற்றதொன்று. நவீன கவிதை இலக்கியத்தில் அதிக ஈடுபாடு காட்டிவரும் இவரது ஆய்வுகளில் சேரனின் கவி தைகள் தொடர்பான ஆய்வுகள் முக்கியமா னவை. தொடர்ந்து கவிதைத்துறையில் தனித்த அடையாளத்துடன் இயங்கிவரும் அஜந்தகுமார் 'நான் அவளுக்கு ஒரு கடலைப் பரிசளித்தேன்' என்னும் தனது இரண்டாவது கவிதைத்தொகுதியை அண்மையில் வெளியிட்டுள்ளார்.

### அறுபத்தேழாவது வெளியீடு

'நான் அவளுக்கு ஒரு கடலைப் பரிசளித்தேன்' ஜீவநதியின் அறுபத்தேழாவது வெளியீடாக வெளிவந்துள்ளது. ரஷ்மியின் சிறப்பான அட்டை வடிவமைப்புடனும் ஈழத்தின் முதன்மையான கவிஞர்களில் ஒருவரான சேரனின் 'அஜந்தகுமார் காற்றிடம் கொடுத்த கவிதைகள்' எனும் தலைப்பிட்ட முன்னுரையுடனும் ஐம்பத்தொன்பது பக்கங்களில் நாற்பத்துநான்கு கவிதைகளுடனும் வெளிவந்துள்ளது. சேரன் தனது முன்னுரையிலே "மரபு, புதுமை, மீறல் என்பன இணைந்தும் முரண்பட்டும் காட்சிகளாகவும் கவிதைகளாகவும் உருமாற்றம் பெறுவதை உணர்வதற்கு அவருடைய கவிதைகள் சுவைமிக்க எடுத்துக்காட்டாக அமைகின்றன. இங்கு மரபு என்று பேசுகின்றபோது பழமையின் இறுக்கம், நெகிழ்வற்ற தன்மை என்பவற்றை நான் கருதவில்லை. அறிவு, அனுபவம், அழகியல் என்பவற்றின் வரலாற்றுத் திரட்சியையே கருதுகின்றேன்" என்று குறிப்பிடுவது இந்தத் தொகுதியில் வெளிவந்த அஜந்தகுமாரின் கவிதைகளையும் அஜந்தகுமார் போன்று எழுதி வரும் சமகாலத்துக் கவிஞர்களையும் புரிந்து கொள்வதற்கான தெளிவான அடிப்படையைத் தருகின்றது. சமகாலத்துக் கவிஞர்கள் பலருக்கும் சமூக உலகிலிருந்து கிடைக்கும் அனுபவங்கள் விசித்திரமானவையாகவும் வித்தியாசமானவையாகவும் அமைகின்றன. அவர்களின் அறிவுத் தேட்டமானது அந்த அனுபவங்களின் வழி வருவதே. புதிய அனுபவங்களைச் சொல்ல புதிய அழகியல் தேவைப்படுகின்றது. புதிய அழகியல் வெளிப்படுத்தப்படுவதற்கு அவர்கள் கையாளும் நுட்பங்கள், மொழிக்கூறுகள், வெளிப்பாட்டு முறைகள் வேறுபடுகின்றன. இவை சில சமயங்களில் சென்ற காலத்து அறிவு மற்றும் அனுபவத் திரட்சியை மறுப்பதலிப்பதாகவோ அல்லது நிராகரிப்பதாகவோ அமைந்து விடுகின்றன. அஜந்தகுமாரின் இந்தத் தொகுதியிலுள்ள கவிதைகள் அவரின் கவிதைகளுக்கான நுட்பங்கள், மொழிக்கூறுகள் மற்றும் வெளிப்பாட்டு முறைகளைப் புரிந்து கொள்வதற்கான திறவுகோல்களைத் தருகின்றன.

இன்றுவரை தொடர்ந்து தன் ஆய்வாற்றலைக் குறைத்துக்கொள்ளாது படைப்பாற்றலையும் வெளிப்படுத்திவரும் அஜந்தகுமார் அண்மைக் காலக் கவிஞர்களில் தனித்துவமான அடையாளங் களோடு பயணிப்பவர். இவரது 'ஒரு சோம்பேறியின் கடல்' எனும் கவிதைத் தொகுதி கவனிப்புப் பெற்றதொன்று.

### தனித்துவம் மிகுந்தவை

அஜந்தகுமாரின் 'நான் அவளுக்கு ஒரு கடலைப் பரிசளித்தேன்' என்னும் இந்தக் கவிதைத் தொகுதியில் உள்ளடங்கும் கவிதைகள் வெளிப்பாட்டு முறையினால் பல தனித்துவங்களைக் கொண்டவை. அவற்றில் பின்வருவன குறிப்பிடத்தக்கவை:

இயல்பாக காணுகின்ற தோற்றப்பாடுகளை வெளிப்படுத்தும் முறையினால் புதிய பரிமாணத்தில் காணவைக்கின்ற ஒருவகை தரிசனப் புதுமை.

இயல்பான தோற்றப்பாடுகளை உள்ளதை உள்ளவாறு வெளிப்படுத்தாது கையாளும் மொழியின் புதுமையினால் மறைபொருளாய் அல்லது புரிதலில் 'அருவநிலை உடையனவாய் சித்திரிக்கம் புதுமை.

வெளிப்பாட்டு முறையில் யதார்த்தத்தைக் கடந்து ஒருவகை மீயதார்த்தப் பாங்கான சித்திரத்தைத் தருகின்ற உத்திகளைக் கையாள எத்தனிக்கும் புதுமை.

வெளிப்பாட்டு முறையில் ஒருவகையில் Collage Poem எனும் வகைமைக் கான சில சித்திரிப்புப் புதுமைகள்.

படிமமாக்கப்பட்ட, பிம்பமாக்கப்பட்ட ஒரு வகைக் காட்சி நிலைப்பட்ட அனுபவங்களைத் தொற்றவைக்கும் புதுமை.

நாட்குறிப்புக்களாகவும் விடுகதைத் துணுக்குகள் 'போலவும் அமைந்த துணுக்கான வடிவ வெளிப்பாட்டுப் புதுமை.

கியூபிடுக்கள் வெளிப்படுத்தவதைப் போன்ற சில வடிவப் புதுமைகள்.

மொழியினால் கவிதைகளைச் செய்து புறநிலையான தோற்றப்பாடுகளில் புகுத்தி தோற்றப்பாடுகளுக்கு உயிர்ப்பளிக்க எத்தனிக்கும் புதுமை.



மேலே குறிப்பிட்ட இந்த வகையான புதுமைகளை அண்மைக் காலத்துக் கவிஞர்கள் பலரின் பொதுப்பண்பாக ஆராயுமிடத்து, கவிஞர் சேரன் முன்னுரையில் கூறும் 'படிமங்கள்' திட்பமாக இருக்க வேண்டும். நுணுக்கமான விவரங்களால் நெய்யப்பட்டிருக்க வேண்டும் அல்லது அத்தகைய விவரங்களால் கட்டியெழுப்பப்பட்டிருக்க வேண்டும் என்று வாதிடுகின்ற ஒரு கவிஞர் குழாமும் விமர்சனம் செய்யும் பெரியோரும் உள்ளனர். எனினும் அஜந்தகுமாரும் அவருடைய காலத்தைச் சேர்ந்த வேறு சில புதிய கவிஞர்களும் இத்தகைய வாதங்களைக் குலைத்துப் போடுகிறார்கள். திட்பம் என்பதை நெகிழ்வு, விசித்திரம், ஆச்சரியம், நுட்பம், இதுவரை இல்லாதவை அல்லது இதுவரை இயலாதவை என மாற்றிவிடுகிற நளினமும் துணிவும் அஜந்தகுமாரிடம் உள்ளது என்னும் கருத்தும் ஆழ்ந்து கவனிக்கவேண்டியதே. 'கற்பனையில் இறுகித் திட்பமாயினோரான கவிஞர்கள்மத்தியில் மேற்கண்ட இயல்புகளால் அஜந்தகுமார் இன்றைய கவிஞர்களின் கவிதைப் போக்குகளில் தனித்துத் தெரியும் கவிஞராகின்றார்.

இந்தக் கவிதைத் தொகுப்பிலுள்ள கவிதைகளில் 'நான் அவளுக்கு ஒரு கடலைப் பரிசளித்தேன்', 'மண்ணாங்கட்டி', 'கண்ணாடிக் குருவிகள்', 'என் ஆடைகளுக்குள் இருந்த மணல்கள்' போன்ற கவிதைகள் இயல்பான தோற்றப்பாடுகளை புதிய பரிமாணத்தில் காணவைக்கின்ற கவிதைகளாகின்றன. இவை வெளிப்படையான புரிதலில் கடல், கடற்கரை, கண்ணாடியில் தம்மைத்தாமே கொத்திக்கொண்ட குருவிகள், குழந்தைகளாகக் குவிந்த கடற்கரையின் மணல்களை மீண்டுசெல்ல முடியாப் பிரிவு முதலிய தோற்றப்பாடுகளை காட்சிப்படுத்தும் பின்னணியில் இனித்த காதலின் இழப்பும் உருமாற்றமும், குருவியாய் முத்தமிட்ட மகளின் முத்தத்தின் இனிமை, கடற்கரை மணலில் பட்டம் விட்ட தருணத்தில் கிடைத்த வாழ்வு பற்றிய அனுபவம் ஆகிய திட்பமான செய்திகளைத் திட்பமற்ற வெளிப்பாட்டு வடிவத்தில் தருகின்றன. 'என் ஆடைக்குள் இருந்த மணல்கள்' கடற்கரை மணலில் பட்டமேற்றிய ஒரு மாலைப் பொழுதை

*'நாம் பட்டமாக*
*வாழ்வின் ருசி விண்ணாக*
*குவிந்த மணல்கள் குழந்தைகளாக*
*நமக்குள் இருந்த இடைவெளி இருட்டாக*
*அலைச்சத்தம் உன் கதையாக*
*நான் வீடுவருகிறேன்*

என்று திட்பமற்ற ஒரு சூழல் வருணனையைத் திட்பமாக்குகின்றது. அர்த்தச் செறிவுடைய தாக்குகின்றது. கடற்கரையில் மகள் எண்ணிய மணலில் 'குழந் தைகளின் பேரோசையும் சிரிப்போசையும் கேட்கின்றேன்' என்று முடிவடைகின்றபோது கவிதை இயல்பான தோற்றப்பாடுகளை விவ ரிக்கும் பின்புலத்தில் வாழ்வு பற்றிய தரிசனங்களையும் காணத்துடிக்கிறது எனலாம். 'மண்ணாங்கட்டி' எனும் கவிதை மண்ணாங்கட்டியை உண்டு சிரட்டையில் கொடுத்த தண் ணீரைக் குடித்த ஒரு விசித்திரமானவள் பற்றிய தோற்றப்பாட்டை விவரித்துச் செல்கின்றது. கவிதையின் இறுதி இரண்டு வரிகளில்தான் தோற்றப்பாட்டைப் பார்த்த கவிஞரே மண்ணாங்கட்டியாய் உதிர்ந்து வீழ்வது காட்சிப் படிமமாக்கப் படுகிறது.

*'மண்ணாங்கட்டிகளைப் பார்த்துக் கொண்டே இருந்தேன்*
*திடீரென்று இதயத்தில் கனக்கத்தொடங்கி*
*என்னில் இருந்து உதிர்ந்து கொண்டிருக்கிறது'*

என்று அந்த வரிகள் முடிகின்றன. புரி தலில் ஓர் அருவநிலை வெளிப்பாடு இது. இந்த அருவநிலை வெளிப்பாட்டை வேறொரு விதமாகவும் அஜந்தகுமாரின் கவிதைகளில் காணலாம்.

*'கரைகளில் இருந்த ஈர்ப்புகள் வற்றி*
*அலைகள் திரும்பிவிட்டன*
*அலைகளிடம் கரைகள் நகர்கையில்*
*கடலைக் காணவில்லை'*

எனும் 'ஈர்ப்பு' எனத் தலைப்பிடப்பட்ட நான்குவரிக் கவிதையில் புதைக்கப்பட்ட அருவநிலை வாசக அனுபவத்தினால் நிரப்பப்படவேண்டிய வெளிகளுடன் வந்துள்ளன. இதனால் தோற்றப்பாடுகள் வெறும் தோற்றப்பாடுகளாகவன்றி அருவநிலை உள்ளர்த்தங்களுடன் புனையப்படுவதையும் காணலாம்.

வெளிப்பாட்டு முறையில் யதார்த்தத்தைக் கடந்த ஒருவகை மீயதார்த்தப் பாங்கான சித்திரங்களை அஜந்தகுமாரின் கவிதைகளில் காணலாம். மீயதார்த்தப் பாங்பான சித்திரம் என்னும்போது, வெறும் 'பிரமிப்பை ஏற்படுத்தும் முயற்சியாகவன்றி நடைமுறை வாழ்வின் முரண்களை வெளிப்படுத்த முனையும் தருணங்களில் நடைமுறைக்கு அப்பாலான உலகமொன்று தரும் அனுபவத்தை முரண்படு காரணியாக முன்னிறுத்தி தன் உட்கருத்தை வெளிப்படுத்துவனவாகவும் அஜந்தகுமாரின் கவிதைகள் உள்ளன. 'இரகசியங்களின் கைரேகை', 'முகத்தில் புன்னகை முதுகில் செட்டைகள்', 'கைகளால் ஒழுகும் முகம்' போன்ற கவிதைகளில் இந்தப் பண்பைக் காணலாம். இது ஒரு வகையில் அஜந்தகுமாரின் உத்தியாகவும் இனங்காணப்படலாம்.

கட்டுரையாளர்:
முதுநிலை விரிவுரையாளர்,
யாழ். பல்கலைக்கழகம்

(மீதி அடுத்த வாரம் தொடரும்)

சி.ப.வேந்தன்

# நான் அநிதிக்கு எதிரானவள்



அடித்துக் கூறுகிறார்
பெண் எழுத்தாளர்
**நஸ்பியா அஜித்**

நீங்கள் சந்தித்துக்கொண்டிருக்கும் துயரத்தை எதிர்கொண்டு அந்தப் பிரச்சினைகளுக்கு முக்கியத்துவம் தந்து, அதற்காகக் குரல் கொடுங்கள்-என்றார் நோபல் பரிசு பெற்ற பாகிஸ்தானின் பெண்கல்விப் போராளி மலாலா யூசுப்சாய்.

அப்படி தன்னுடையதும் சக மனிதர்களுடையதும் வாழ்க்கையில் சந்தித்துக் கொண்டிருக்கும் பிரச்சினைகள், துயரங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து, அதற்காக எழுத்தின் மூலம் குரல்கொடுத்துக்கொண்டிருப்பவர்தான் இஸ்லாமியப் பெண் எழுத்தாளர் நஸ்பியா அஜித்.

கண்ணீர்ப்பூக்கள், சிதறல்களில் சில துளிகள், அவலங்கள் என மூன்று சிறுநாவல்கள் மூலம் தன்னை இலக்கிய உலகுக்கு அடையாளங்காட்டி, சமூக அவலங்களைதன்னுடையஎழுத்துக்களால்பேசிக்கொண்டிருக்கிறார்.

வெயில் சுட்டெரித்துக்கொண்டிருக்கும் ஒரு நண்பகல்நேரம், காதி அபூபக்கர் வீதியில் அமைந்திருக்கும் அவரது வீட்டுக்கு புதன்பொய்கை இதழுக்காக அவரைச் சந்திக்கச் சென்றேன். மெல்லிய புன்னகையுடன் வரவேற்று தனது எழுத்துப்பயணம் குறித்து உரையாடத் தொடங்கினார்.

**யாழ்ப்பாணம்தான் சொந்த இடம்**

என்ர சொந்த இடம் யாழ்ப்பாணம்தான். 1990ஆம் ஆண்டுநான் க.பொ.த. சாதாரணதரம்படிச்சுக்கொண்டிருக்கேக்கதான் முஸ்லிம் இடப்பெயர்வு நடந்தது. அப்படியே போய் புத்தளத்தில இருந்தனாங்கள். சின்ன வயசில இருந்தே புத்தகம் வாசிக்கிறது, ஏதாவது எழுதுறது, நாடகங்கல நடிக்கிறது எல்லாத்திலயும் நிறைய ஆர்வம். படிச்சுக்கொண்டிருக்கேக்க இப்பிடியான விடயங்களில நிறைய ஈடுபட்டனான்.

பிறகு புத்தளத்துக்கு இடம்பெயர்ந்துபோய் அகதிமுகாமிலதான் எங்கட வாழ்க்கை தொடர்ந்தது. இங்க ஒரு நடுத்தரமான குடும்பமா இருந்தனாங்கள். ஆனா, புத்தளத்துக்குப் போகும்போது எல்லாத்தையும் இழந்து வெறுங்கையோட போனோம். நாங்கள் ஏழு சகோதரர்கள் குடும்பம் மிக வறுமையான நிலையிலதான் இருந்தது. நான் மேற்கொண்டு படிக்கிறதுக்கும் வறுமை காரணமாக வீட்டில வேணாமென்று சொல்லிட்டினம். ஆனாலும் நான் படிக்கோணும் என்ற ஆசை இருந்துகொண்டே இருந்தது. எப்பிடியாவது படிக்கோணும் என்று முடிவுசெய்து, அங்கே இருந்த ஒரு சவர்க்கார தொழிற்சாலையில பகுதிநேர வேலைக்குச் சேர்ந்து, அதில இருந்து வாற காசில படிக்க தொடங்கினன். பள்ளிக்கூடத்துக்கும் வேலைக்கும் போறதால பகுதிநேர வகுப்புகளுக்கெல்லாம்(ரியூசன்) போக ஏலாது. ஊரில இருந்தவர்களும் சில நிறுவனங்களும் செய்த உதவிகளில படிச்சுக்கொண்டிருந்தன். பல்கலைக்கழகத்துக்கு இரண்டு புள்ளியால கிடைக்காமல் போட்டுது. கிடைச்சிருந்தாலும் அதைத் தொடர்ந்து படிக்க முடியுமா என்ற பயமும் இருந்தது. அப்படியான ஒரு குடும்ப வறுமைச்சூழல்.

**தொண்டர் ஆசிரியராக**

அதுக்குப்பிறகு, நான் படிச்ச பள்ளிக்கூடத்தில தொண்டர்ஆசிரியர் வேலை கிடைச்சது. அதோட நிறுவனம் ஒன்றிலயும் வேலை கிடைச்சது. அதில வேலை செய்யும்போதுதான் நான் நிறைய மனிதர்களையும் அவர்களுக்குள்ள பிரச்சினைகளையும் கூடுதலா அறிஞ்சுகொள்ளத் தொடங்கினன். 120 முகாம்களுக்கு மேல் நான் நிறுவன, கடமை ரீதியாக போய்வேலை செய்தனான். அது எனக்கு பெரிய அனுபவத்தைக் கொடுத்தது. எங்கட குடும்பச் சூழல் அயலவர்கள், இடப்பெயர்வு, அகதிமுகாம் வாழ்க்கை இப்பிடி நிறைய விடயங்கள் என்னைப் பாதிச்சது. பொதுவாக சமூகத்தில ஏதாவது பிரச்சினையைக் கண்டா அது தொடர்பில கேள்வி கேக்கிறது என்ர வழக்கம். நான் அநீதிக்கு எதிரானவள். அதால நிறையப் பிரச்சினைகளையும் சந்திச்சிருக்கிறன்.

இங்க நாங்க இருக்கும்போது, பக்கத்து வீட்டுக்கும் போக மத்தான் எல்லா மக்களும் வாழ்ந்தவர்கள். ஆனா, அகதி முகாம் வாழ்க்கை அப்படியே எல்லாரையும் மாற்றிப்போட்டுவிட்டது. பொதுக்கிணறு, பொது மலசலகூடம் ஒரு குறுகிய சூழலுக்குள்ள வாழ்க்கை இப்பிடி எல்லாம் மாற்றங்களோடையும் பிரச்சினைகளோடையும் தான் வாழ்ந்தம். அப்படியான வாழ்க்கை அதில இருக்கிற வலி, பிரச்சினைகள் எல்லாம் என்னைப்பாதிச்சது. அதைஎப்படியாவது பேசவேணும் இதுக்கு தீர்வுகள் காணவேணும்என்று ஒரு அவா. ஆனா எவரிட்டச் சொல்லுறது, எப்படித் தீர்வுகாணுறதுஎன்றதெல்லாம் கேள்விக்குறியாகத்தான் இருந்தது. இப்படியான விடயங்கள் மனசுக்கு இருந்து அழுத்திக்கொண்டிருக்க, அதை இறக்கி வைக்க அது பற்றி எழுதத் தொடங்கினன். ஆரம்பத்தில இவைகளையெல்லாம் டயறிலதான் சும்மா ஏதோ மனவிடுவிப்புக்காக எழுதிக்கொண்டு வந்தனான். அந்தப் பழக்கம் அப்படியே தொடர்ந்து இருந்தது. பிறகு கால ஓட்டத்தில திருப்பியும் படிக்கதொடங்கி கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில படிச்சுக்கொண்டிருக்கேக்க நான் எல்லா விடயத்திலை யும் கொஞ்சம் முன்னின்றுசெய்யிறனான். எழுத்து, பேச்சு, கவிதை என்று எல்லா விடயத்திலயும்செய்ய ஆரம்பிக்க திருநாவுக்கரசு ஆசிரியர் என்ர எழுத்துக்களை வாங்கிப் பாத்திற்று உனக்கு எழுதுற ஆற்றல் இருக்கு. நீ எழுத ஆரம்பி என்று ஊக்கப்படுத்தினார். நான் அதில கவனமில்லாம இருந்தனான். அவர்என்னைக்காணும்போதெல்லாம் அடிக்கடி இதைதான் சொல்லுவார். அங்க நடந்த முத்தமிழ்விழாவில நான் எழுதின சிறுகதை ஒன்றுக்கு முதலிடமும் கிடைச்சு-நிறைய வரவேற்பும் பாராட்டும் கிடைச்சது. அதுக்குப்பிறகு தான் நான் என்னால எழுத முடியும் எழுதுவம் என்று எழுத ஆரம்பிச்சன். தொடர்ந்து லலீசன் ஆசிரியர். புவனேஸ்வரி அம்மா, கணபதிப்பிள்ளை ஐயா இப்பிடி எல்லாரும் நிறைய ஊக்கம் தந்திச்சினம். அதுக்குப்பிறகு இதில கவனம் எடுத்து எழுத ஆரம்பிச்சன்.

> என்ர சொந்த இடம் யாழ்ப்பாணம்தான். 1990ஆம் ஆண்டு நான் க.பொ.த. சாதாரணதரம் படிச்சுக் கொண்டிருக்கேக்க தான் முஸ்லிம் இடப்பெயர்வு நடந்தது. அப்படியே போய் புத்தளத்தில இருந்தனாங்கள். சின்ன வயசில இருந்தே புத்தகம் வாசிக்கிறது ஏதாவது எழுதுறது நாடகங்கல நடிக்கிறது எல்லாத்திலயும் நிறைய ஆர்வம். படிச்சுக்கொண்டிருக்கேக்க இப்பிடியான விடயங்களில நிறைய ஈடுபட்டனான்.

பிறகு எனக்கு ஆசிரியர் வேலை கிடைச்சது. அதுக்குப்பிறகு பள்ளிக்கூடத்தில பிள்ளைகளுக்கு போட்டிகள். விழாக்களுக்கு கதைகள், கவிதைகள், நாடகங்கள் இப்பிடி எழுத ஆரம்பிச்சன். இப்பிடி எழுத ஆரம்பிச்சஎன்ரஎழுத்துப்பயணம்இப்பமூன்றுநாவல்கள் வெளியிட்டதில வந்து நிக்குது. ஆனாலும், நான் இந்தத்துறைக்குள்ள நிறையச்சவால்களை எதிர்கொள்ள வேண்டி இருந்தது. என்னுடைய முதல் நாவல் கண்ணீர்ப் பூக்கள். அது நான் கண்ட, கேட்ட, பழகிய மனிதர்களை வைத்து யதார்த்தங்களையும் உண்மைகளையும் பேசின நாவல்.

**சாத்தியமில்லாத அச்சு வடிவம்**

நான் என்னதான் கதைகளை எழுதினாலும், அதை அச்சுவடிவில கொண்டுவர என்ர குடும்ப பொருளாதாரத்தால சாத்தியமில்லை. அப்ப எனக்குத் தெரிஞ்ச சிலர் சொல்லிச்சினம் நூல் வெளியீட்டுக்கு நிதிஉதவி செய்ய எங்கட சமூகத்தில சில தனவந்தர்கள் இருக்கினம் நீங்க அவைகளை அணுகிப்பாருங்க என்று-நானும்நம்பிக்கையோட அவரைத்தொடர்புகொண்டேன் நூல் வெளியீடா? அதுக்கு நாங்கள் உதவிசெய்யிறதில்லை என்று முகத்திலயறைஞ்சமாதிரி சொல்லிட்டார். அது எனக்கு மனதளவில பெரிய தாக்கத்தைத் தந்தது. சமூகத்தில ஒரு நல்லவிடயம்தானே செய்யப்போறன்;அதைஏன்இவர்கள்புரிஞ்சுகொள்கிறார்கள். இல்லையென்ற வருத்தம் ஒரு வைராக்கியமாமாறி, எப்பிடியாவது இந்தநாவலைவெளியிட்டே ஆகவேணும் என்ற வெறியோட முயற்சி செய்ய ஆரம்பிச்சன். ஆனாலும், தொடர்ந்தும், ஏமாற்றமும், ஏளனமும், வலியும்தான் மிஞ்சியது. நான் மனசுடைஞ்சுபோன நேரம் பிள்ளைகள் எனக்கு ஆறுதலாக இருந்து, ஊக்கப்படுத்தி, கட்டாயம் வெளியிட வேணுமென்று என்னை வற்புறுத்தினார்கள். அதுக்குப்பிறகு இந்த நாவலை எவ்வளவு முடியுமோ அவ்வளவுக்கு சுருக்கி என்னுடைய பொருளாதாரத்தைக் கவனத்தில கொண்டு வெளியிட்டன். இந்த நூல் வெளியீட்டில என்னுடைய ஆசான்கள், நண்பர்கள், இலக்கிய ஆர்வலர்கள் என்று நிறையப்பேர் வந்து ஆதரவு தந்திச்சினம். அது எனக்கு கிடைச்ச முதல் வெற்றி. உழைப்புக்கும் திறமைக்கும் முழுமையான திருப்தி கிடைச்சது. இதைவிட இவா என்ன செய்யிறா என்று விமர்சிக்கவும், வேடிக்கை பார்க்கவும் என்றும் சில கூட்டம் வந்தது.

முதல் நாவல் தந்த நம்பிக்கையால ஒருவருடம் கழிச்சு, என்ர இரண்டாவது நாவல் சிதறல்கள் சில துளிகள் வெளியிட்டன். அதுவும் எனக்கு நல்ல பெயரையும் ஆதரவையும் தேடித்தந்தது. யாழ்ப்பாணத்தில தமிழ், முஸ்லிம் மக்கள் எப்பிடி அன்னியோன்னியமாக இருந்தார்கள். (23ஆம்பக்கம் பார்க்க)



## கூட்டுறவுச் சங்கத்தின் ஏற்பாட்டில் நெல்லியடியில் புத்தகச் சந்தை






கட்டைவேலி நெல்லியடி பல நோக்குக் கூட்டுறவுச் சங்க கலாசார பெருமன்றத்தின் ஏற்பாட்டில் நடந்த புத்தகச் சந்தை கடந்த 24ஆம் திகதி முதல் 26ஆம் திகதி வரை நெல்லியடி மத்திய கல்லூரியில் இடம்பெற்றது. இப்புத்தகச் சந்தையில் கிடைத்தற்கரிய பல நூல்கள் விற்பனைக்கு விடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (108)

# புதிய ஆரம்பம்

















சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் முன் உள்ள ஒழுங்கையில் திருவேரகம் இசை நடனக் கல்லூரி ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது. கல்லூரியின் தொடக்க விழாவில், தென்மராட்சி கல்வி வலய தமிழ்ப்பாட ஆசிரிய ஆலோசகர் வே. உதயகுமார் தலைமையில் இடம்பெற்றது. முதன்மை விருந்தினராக தென்மராட்சி பிரதேச செயலக, உதவிப் பிரதேச செயலர் ரஞ்சனா நவரத்தினம் கலந்து கொண்டார்.

சிறப்பு விருந்தினர்களாக உதவிக் கல்விப் பணிப்பாளர் விஜிதா அரியரட்ணம், ஓய்வுபெற்ற பேராசிரியர் நா.வி.மு. நவரத்தினம், கலாநிதி சி.மகேந்திரன், நயினை ப. சிவமைந்தன், இசையாசிரியர் சுந்தரவல்லி ஆனந்தராசா ஆகியோர் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் வரவேற்புரையை முகாமைத்துவ உதவியாளர் ச.தயாபரன் ஆற்றினார். ஆசியுரையை மட்டுவில் பன்றித்தலைச்சி கண்ணகை அம்மன் தேவஸ்தான முதன்மைக் குரு துன்னையூர் சிவசக்தி ஸ்ரீராம் தேவலோகேஸ்வரக் குருக்கள் வழங்கினார். தொடக்கவுரையை கோப்பாய் ஆசிரிய கலாசாலை பிரதி முதல்வர் ச.லலீசன் ஆற்றினார். நிகழ்வில் சங்கீத வித்துவான் பொன்.ஸ்ரீவாமதேவனின் இசைக் கச்சேரி மற்றும் பரத சூடாமணி நா.செந்தூர்ச்செல்வனின் பரதநாட்டியம் ஆகியன இடம்பெற்றன.

வயலின் வித்துவான் கா.குகபரன், மிருதங்க வித்துவான் கலாநிதி மகேந்திரன் ஆகியோர் அணிசேர் இசை வழங்கினர்.

நிகழ்ச்சிகளை பிரதேச செயலக முகாமைத்துவ உதவியாளர் வே.இளவேந்தன் தொகுத்து வழங்கினார்.





# திருக்குறள் மனனம் மற்றும் பண்ணிசைப் போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையினால் புண்ணிய நாச்சி அம்மையார் தினத்தை முன்னிட்டு, பாடசாலை மாணவர் மத்தியில் நடத்தப்பட்ட திருக்குறள் மனனப் போட்டி மற்றும் பண்ணிசைப் போட்டிகளில் வெற்றிபெற்றவர்களுக்கான பரிசில்கள் அண்மையில் நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் இடம்பெற்ற நாச்சியம்மையார் தின விழாவில் வைத்து வழங்கப்பட்டன.

வெற்றிபெற்றோர் விவரம்:

**திருக்குறள் மனனப்போட்டி**

**கீழ்ப்பிரிவு**

முதலாம் இடம்:விமல்ஸ் மாவிஸ்விகன் --மானிப்பாய்சோதிவேம்படி வித்தியாலயம், இரண்டாம் இடம்:நேர்சிகா கரன், கிளிநொச்சி மகாவித்தியாலயம், மூன்றாம் இடம்: மதுமிதா ஜங்கரன், கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை

**மத்திய பிரிவு**

முதலாம் இடம்:ரேந்தினி பிரபாகரன், காரைநகர் யாழ்ரன் கல்லூரி, இரண்டாம் இடம்: விஜயகுமார் நித்தியரூபா சர்மா , கொக்குவில் இந்துக்கல்லூரி, மூன்றாம் இடம்: சர்துரியா கதிரவேற்பிள்ளை,யாழ் வேம்படி மகளிர் உயர்தர ப் பாடசாலை

**மேற்பிரிவு**

முதலாம் இடம்:தாமோதரகுமார் ஜீவசாந், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி, இரண்டாம் இடம்: ஜெகரட்ணம் உமா சுதன், வட்டுக்கோட்டை யாழப்பாணக் கல்லூரி, மூன்றாம் இடம்:தாருண்ணியா கதிரவேற்பிள்ளை, யாழ் வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை

**பண்ணிசைப்போட்டி**

**கீழ்ப்பிரிவு**

முதலாம் இடம்:பரியசாகி கைலாயபிள்ளை, வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக்கல்லூரி, இரண்டாம் இடம்: ஆ.அரிகரன், வலந்தலைதெற்கு அமெரிக்கன் மிசன் பாடசாலை, மூன்றாம் இடம்: மதுசாயினி இதயரூபன், கோண்டாவில் இராம கிருஷ்ண வித்தியாலயம்

**மத்திய பிரிவு**

முதலாம்இடம்:ஹரிகிருஷ்ணி சந்திரகுமார், நெல்லியடி மத்தியகல்லூரி, இரண்டாம் இடம் :டர்ஜிகா காங்கேஸ்வரன், கிளிநொச்சி மகாவித்தியாலயம், மூன்றாம் இடம்: கம்சிகா சுரேஷ்குமார், காரைநகர் யாழ்ரன் கல்லூரி

**மேற்பிரிவு**

முதலாம்இடம்: கணேசானந்தன் விந்தகன், தெல்லிப்பழை மகாஜனக்கல்லூரி, இரண்டாம்இடம்: சிவகுமார் சிவகஜன், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி, மூன்றாம் இடம்: சிவனுஜா ஈஸ்வரலிங்கம், கோப்பாய் சரவணபவானந்த வித்தியாலயம். (11)

# கலையின்பமே நிலையின்பமாம்



கே.எஸ்.சிவஞானராஜா

இளையதலைமுறைகளின் பால் கலைகளை வளர்க்கும் பொருட்டு, யாழ்ப்பாணத்தில் முதன்முறையாக ஸ்தாபிக்கப்பட்ட ஒரு கலைஞர் மன்றம்தான், நல்லூர் இளங்கலைஞர் மன்றமாகும். பொன்போன்ற இசைக்கலைஞர்களாலும், சமூக ஆர்வலர்களாலும், அந்தணப் பெருமக்களின் நல்லாசிகளாலும் தூரநோக்கோடு அமைக்கப்பெற்றதே நல்லூர் சட்டநாதர் கோயிலுக்கருகில் கம்பீரமாக வரவேற்கும் இளங்கலைஞர் மன்றமாகும்.

சங்கீதப் புயல் டாக்டர் பாலமுரளி கிருஷ்ணாவின் வருகையால் இளங்கலைஞர் மன்றம் இலங்கையிலும், உலகிலும் வரம் கொண்டதெனலாம். சங்கீத பூசணம் பொன் சுந்தரலிங்கத்தின் சிந்தனையில் எழுந்த ஒரு கருவானது, யாழ்ப்பாணத்தின் அனைத்துக் கலைஞர்களையும் அரவணைத்துக் கொண்டது மட்டுமல்ல, யாழ்ப்பாணத்தின் ஆர்வலர்கள், சுவைஞர்கள், வர்த்தகப் பெருமக்கள் அனைவரையும் ஒன்று சேர்த்து கலையின்பத்தை அனுபவிக்கச் செய்துவிட்ட ஒரு பெருங்கைங்கரியத்தை இளங்கலைஞர் மன்றம் தொண்டாக்கியுள்ளது. இந்த உபகாரமானது இன்று மட்டுமல்ல என்றும் நீடித்து வாழக்கூடியதாகும். இதனை நிரூபிக்கும் வகையிலே 10.02.2017 வெள்ளிக்கிழமை சற்குரு ஸ்ரீ தியாகராஜ சுவாமிகளின் 170 ஆவது ஆராதனை உற்சவம் மிகுந்த பக்திசிரத்தையோடு அனுஷ்டிக்கப்பட்டது. ஈழமணித்திருநாட்டின் மூத்த தவில் நாதஸ்வர, வாய்ப்பாட்டு, பக்கவாத்திய இசைக் கலைஞர்கள், இளம் கலைஞர் மண்டபத்திலே ஒன்றிணைந்து பங்குபற்றிச் சிறப்பித்தமை பெருமைக்குரிய விடயமே, தொடர்ந்தும் வெல்வதாக.

### தியாகப் பிரம்மம்

ஸ்ரீ ராமனையே சதா நினைந்து நினைந்து, நெக்கி நெக்கி உருகிக் கனிந்து கனிந்து பாடிய பஞ்சரத்தினக் கீர்த்தனைகளை, உளமாரப் பாடி ஸ்ரீதியாகராஜ சாம்ராஜ்ஜியத்தை நல்லூரில் நிறுவிய பெருமை இளங்கலைஞர் மன்றத்தையே சாரும். காரைநகர், நல்லூர், மருதனார்மடம் என ஒரு முக்கோண வலயத்தை யாழ்ப்பாண மக்கள் சிருஷ்டித்திருப்பது மண்வாசனை நிலைப்பதற்கு இசையாளர்கள் செய்த ஒரு இசைவரைபடம் என்று துணிந்து கூறலாம்.

வவுனியா, மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி, தீவகம், திருகோணமலை, மட்டக்களப்பு, மலையகம், கொழும்பு ஆகிய இடங்களிலும் தியாகப் பிரம்ம இசை ஆராதனைகள் உளப்பூர்வமாக நடத்தப்பட வேண்டும். இந்தியாவில் முழுவீச்சில் இசையாராதனையும், இசை விழாக்களும் நடத்தப்படுவது போன்று இலங்கையிலும் கிரமமாக இடம் பெறவேண்டும். ஆண்டறிக்கையில் குறிப்பிடப்படுவதற்கு என்றில்லாமல் ஒவ்வொரு சங்கீத ஆசிரிய வீடுகளிலும், விரிவுரையாளர்கள் வீடுகள் தோறும் இசை யாராதனை இடம் பெறுமாயின் கலையும் வளரும், காலமும் ஜெயிக்கும், நாடும் சுபீட்சமாகும். சம்பளத்துக்குச் சங்கீதம் என்றில்லாமல், சகவாழ் வுக்காகச் சங்கீதம் அமையக்கூடாதா?

எந்த விதச் சம்பளமும் இன்றி, பிரதியுபகாரமும் இன்றி, தியாகப் பிரமம் எல்லாம் வல்ல ஸ்ரீ ராமனையே முற்று முழுதாக நம்பியவராய், உடல் பொருள், ஆவிஅத்தனையையும் இசைக்காய் அர்ப்பணித்து, உஞ்சவிருத்தியோடு உலகமான்மியம் செய்த பேறதனால் தான் இன்றும் கலை" இன்பமாகி நிலை பெறுகிறது. கலையின்பம் தேடுவதிலேயே இனிக்கிறது.



### இன்பம்

இன்பம் என்பது உடல் சார்ந்தது மட்டுமல்ல, உளம் சார்ந்ததுமே. உளம் இரசிக்க உடல் புளகாங்கிதமடையும். ஆய கலைகள் அறுபத்திநான்கிலும் இன்பம் பின்னிப்பிணைந்து இழையோடியிருக்கின்றது. அவற்றுள் லலித கலை, நுண்கலை, அழகியல்கலை, முருகியல் கலை, முதன்மைக்கலை, மூத்தகலை, பிரபல்யக்கலை, புராதனக்கலை, பூரித்தகலை, புளகாங்கிதக் கலை என வர்ணிக்கப்படுபவை சங்கீதம், நடனம், சித்திரம், ஓவியம், நாடகம், சிற்பம், இலக்கியம் என்ப வற்றைச் சிறப்பாகக் குறிப்பிடலாம். இவற்றுள் உள்நுழைந்து குடைந்து குழைந்து தேடும் போது இன்பம் பீறிடுகிறது உள்ளத்தில் இன்பம் நீடிக்கிறது. கொஞ்சநேரமல்ல கோடி தரம் நீடிக்கிறது. இறை இன்பம், இசையின்பம், நடன நாட்டிய நாடக இன்பம், சிற்ப சித்திர ஓவிய இன்பம், இலக்கிய இலக்கண பேச்சின்பம் யாவுமே கொஞ்ச நஞ்சமல்ல அபாரமாகும். அதிலும் குரலின்பமும், விரலின்பமும். நீடித்த நேரம் நிலைபெறக் கூடியது. குரலின்பம் இறைவனோடு ஐக்கியப்பட வைப்பதாகும், தம்புரா சுருதியோடு, திரிமூர்த்திகள் எனப்படும் தியாகராஜ சுவாமிகள், முத்துச்சாமி தீட்சதர், சியாமாசாஸ்திரிகள் மூவரும் குரல் வண்ணமயமாகி, ஏராளமான உருப்படிகளைச் செய்திருப்பது, கலையின்பமாகிய நிலையின்பம் பயக்க வல்லதாகும்.

தியாகராஜ சுவாமிகளின் கீர்த்தனைகளைத் திராட்சை ரசத்துக்கும்.

தீட்சதரின் கீர்த்தனைகளை நாளிகேர (தேங்காய்) இரசத்துக்கும், சியாமாசாஸ்திரிகளின் கீர்த்தனைகளை கதலி இரசத்துக்கும் ஒப்பிடப்பட்டு தெய்வீக இன்பத்துக்கு அழைத்துச் செல்வதாகிக் கீர்த்தனைகள் உயிர்பெறுகின்றன. இருந்தபோதும் தியாகராஜா கிருதிகள் தேன் சொட்டவைக்கும் திராட்சைரசத்துக்கு வாயூறவைப்பனவாகும்.

ஜகதானந்தகாரக, துடுகுகல, ஸாதிஞ்சனே, கனகனருசி, எந்தரோ மகானு ஆகிய ஐந்து இரத்தினக் கீர்தனைகளும் உலகெங்கணும் ஓங்கி ஒலிக்கின்ற பாக்கியத்தைப் பெற்றிருக்கிறது இந்த உலகம்! அது ஒன்றேபோதும்.

லௌகீகத்துக்குச் சிலகாலமும், சொத்துக் காகச் சிலகாலமும், பணத்துக்காகச் சிலகாலமும், பதவிக்காகச் சிலகாலமும், பட்டத்துக்காக சிலகாலமும், மதங்களில் வெறிகொண்டு சில காலமும் நாயாக அலைந்து நோயாளியாகப் போனேன்! இறைவா! கலையின்பமூலம் நிலையான இன்பத்தையடைய எனக்கு மட்டுமல்ல எல்லோருக்கும் அருள் செய்ய வேண்டும் ஸ்ரீராமா!

### ஆராதனை

1847 தைமாதம் பகுளபஞ்சமித் திதியன்று தியாகராஜ சுவாமிகள் முத்தி பெற்ற தினத்திலிருந்து இன்றுவரை 170 ஆவது ஆராதனை இனிக்க இனிக்க உலகெங்கணும் நடைபெற்றிருக்கிறது. கொழும்பு, காரைநகர், நல்லூர், மருதனார்மடம், பல்கலைக்கழகங்கள், உடுவில் ஆகிய இடங்களில் பஞ்சரத்தின கீர்த்தனை ஆராதனை நடைபெறுவதனால் போலும் இலங்கை ஓரளவாவது இனிக்கிறதோ?

ஆம்! நல்லூர் இளங்கலைஞர் மன்றம் தனது பணியைச் செவ்வனவே ஆற்றி வருவது பாராட்டுதற்குரியதே! தொடரும் காலங்களில் இசைப்போட்டிகள், இசை விழாக்கள், கருத்தரங்குகள் வெளியீடுகள், கண்காட்சிகள், கௌரவங்கள் என பரிணாமம் கொள்வது இசைக்கு மட்டுமல்ல ஏனைய கலைகளுக்கும் வரமாக நிச்சயம் அமையும். சகல கலைகளுக்கும் நல்லதோர் மையப்புள்ளி நல்லூரான் பையப் பைய யாவற்றையும் வெல்லவைப் போமாக! நல்லூர் இனிக்குமே!

### ஆனந்தம்

இளங்கலைஞர் மன்ற மண்டபத்தில் தியாகராஜ சுவாமிகளின் பஞ்சரத்தினக் கீர்த்தனைகளைப் பாடும்போது ஆனந்தம் கொழித்தது.சுமார் ஒரு மணித்தியாலமாக நடைபெற்ற இந்த ஆராதனை திருமதி ஞானகுமாரி சிவனேசனது தலைமையில், பொன். ஸ்ரீவாதேவன், செல்வி பரமா கணேசன், திருமதி நா.மகாலிங்கம் மற்றும் பின்னணி அணிசெய்கலைஞர்களும், முதன்மைக் கலைஞர்களான சைந்தவி, கோபிதாஸ், ரமணசர்மா, பிரணவன், வேலழகன் மற்றும் கல்யாண்சரண், சுரசாகித்தியன், குமதா கூடவே ஏனைய அனுசரணைக் கலைஞர்களும் பக்திமழை சொட்ட ஆராதித்தார்கள் அருமை! ஆனந்தம்! அபாரம்.

### சிறப்பு

பென்னம் பெரிய மண்டபத்தில் நல்லூர் ரஜீந்திரன், அளவெட்டி கேதீசன் சகோதரர்கள், உதயசங்கர் குழுவினரின் நாதஸ்வர/தவில் வாத்திய சமர்ப்பணம் ஆன்மாவைத் தொடும் படியாக மேலோங்கியது.. வாத்திய இன்பம் இதயத்தை வருடக்கூடியது மட்டு மல்ல, நரம்புகளில் படிந்துள்ள கொழுப்புக்களையும் கரைக்க வல்லதாகும். தவில் நாதமும், நாதஸ்வர ஓசையும் உடலில் புகுந்து, நரம்புகளை அருட்டச் செய்து, விவேகத்தையும், திறனையும் விவகாரத்தையும், ஆயுளையும் அதிகரிக்கச் செய்கிறது. அதனால் தான் எமது வாழ்வோடு மங்கல வாத்தியங்கள் இணைந்திருக்கச் செய்தனர் முன்னோர்கள்.

### பிந்துமாலினி

நாதஸ்வர கானசுரபி ரஜீந்திரனின் எந்தமுத்து' உருப்படி பிந்துமாலினி" இராகத்தைப் பிழிந்து பருகத் தந்தது உடம்பில் சுவறியது பலே!

### உசேனி

அடடா! என்ன அற்புதம் உசேனி இராகத்துக்குக் கேதீசன் தீட்டிய அழகைப் பார்த்தால் ஓர் அழகிய பெண்ணைக் கையிலே தந்ததுபோல் இரசிக்க முடிந்தது. சபாஷ் உதயசங்கரின் விரல்களுக்கு மோதிரங்கள் அணிவிக்கலாம்!

### 2018

நல்லூரில் பாடுகின்ற சகல கலைஞர்களும் ஒருங்கே சேர்ந்து 2018 இல் நடைபெறவிருக்கும் ஆராதனையைச் சிறப்பித்தால் தியாகராஜ உற்சவத்துக்கு நிகரேது?

# ஏட்டுருவில் இருந்து நூலுருவுக்கு மாற்றம் பெற்ற நாடகங்கள்





வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் 2016ஆம்ஆண்டுக்கானமாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நன்கொடையின் கீழ் எமது மரபுரிமைசார்ந்த அழிந்து வரும் கலை மரபுகளைப் பேணிப் பாதுகாக்கும் செயற்திட்டத்தின் ஓர் அங்கமாக மன்னார் மாதோட்டத்தில் ஏட்டுருவில் அமைந்திருந்து மேடையேற்றப்பட்டு வருகின்ற நாடகங்கள் ஆவணப்படுத்தப்பட்டு நூலுருவாகி வெளியீடு செய்யும் நிகழ்வு கடந்த 26ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 3 மணியளவில் நானாட்டான் கலாசார மண்டபத்தில் நடைபெற்றது.

குறித்த நிகழ்வுக்கு வடமாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் இ.இரவீந்திரன் தலைமைதாங்கினார்.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக மன்னார் மறைமாவட்ட அப்போஸ்தலிக்க பரிபாலகர் மேதகு கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை கலந்து கொண்டார்.

சிறப்பு விருந்தினராக மீன்பிடி, போக்குவரத்து, வர்த்தகவாணிபம், கிராமஅபிவிருத்தி, வீதி அபிவிருத்தி மற்றும் மோட்டார் போக்குவரத்து அமைச்சர் பா.டெனீஸ்வரன் கலந்து கொண்டார்.

வரவேற்புரையை பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் உதவிப்பணிப்பாளர் திருமதி வனஜா செல்வரட்ணம் வழங்கினார்.

அறிமுக உரையை வடமாகாண பிரதம செயலாளர் திரு அ.பத்திநாதனும், வெளியீட்டு உரையை கலையருவி இயக்குநரும் மன்னா பத்திரிகையின் ஆசிரியருமான அருட்பணி தமிழ்நேசன் அடிகளாரும் நிகழ்த்தினர்.

இந்த நிகழ்வில் ஏட்டுருவில் காணப்படும் புனித சந்தியோகுமையோர் நாடகம், இம்மானுவேல் நாடகம், என்பன நூல்வடிவில் வெளியிடப்பட்டதுடன், கலைஞர்களும்கௌரவிக்கப்பட்டு, நாடகங்களின் சில காட்சிகளும் நடித்துக்காட்டப்பட்டன.

மேலும் இந்த நிகழ்வில் அரங்கம் நிறைந்த முதியவர்கள் கலந்துகொண்டு மாகாண சபையின் இப்புதிய முயற்சிக்கு ஆதரவு தெரிவித்தனர்.





## சிவராத்திரி தினத்தன்று பட்டி மன்றம்

கீரிமலைநகுலேஸ்வரர்ஆலயசிவபூமிமடத்தில்தெல்லிப்பழைதமிழ்ச்சங்கஉறுப்பினர்கள் வழங்கிய மனித வாழ்வை மேம்படுத்துபவை மதநிறுவனங்களா? தகவல்தொழிநுட்பங்களா? என்னும் தலைப்பிலான பட்டிமன்றம் சிவராத்திரி தினத்தன்று இடம்பெற்றது.

விரிவுரையாளர் பா.மகாலிங்கசிவம் தலைமையில் நடைபெற்ற பட்டிமன்ற நிகழ்வில் மனித வாழ்வை மேம்படுத்துபவை மதநிறுவனங்கள் என்ற அணியின் தலைமைப் பேச்சாளராக தெல்லியூர் சி.ஹரிகரனும், இணைப் பேச்சாளர்களாக யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி ஆசிரியர் சைவப்புவலர் சித்தாந்த பண்டிதர் எஸ்.ரி.குமரன், தந்தை செல்வா தொடக்க நிலைப்பள்ளி அதிபர் த.வாமதேவமன் ஆகியோரும் தகவல்தொழிநுட்பங்கள் என்ற அணியின் தலைமைப் பேச்சாளராக கீரிமலை நகுலேஸ்வரா மகாவித்தியாலய அதிபர் த.தயானந்தனும் இணைப் பேச்சாளர்களாக மானிப்பாய் இந்துக்கல்லூரி ஆசிரியர் எஸ்.ரி.அருள்குமரன், தேசிய சேமிப்பு வங்கி பிராந்திய முகாமையாளர் ந.பகீர்தன் ஆகியோரும் வாதிட்டார்கள்.

# மற்றவர்களுக்காகவே வாழ்ந்து மறைந்த மருத்துவர் சங்கரப்பிள்ளை அம்பிகைபாகன்

தென்னவன்

மனிதனின் பிறப்பு ஒரு சம்பவமாக இருந்தாலும் அவனது இறப்பு சரித்திரமாக அமையவேண்டும் என்ற வாக்கியத்துக்கமைய தனது வாழ்நாளில் மற்றவருக்காக வாழ்ந்து தனது சேவையை அர்ப்பணித்த மருத்துவர் ச.அம்பிகைபாகன் கடந்த பெப்ரவரி முதலாம் திகதி இவ்வுலகை விட்டுப் பிரிந்துள்ளார்.

சாவகச்சேரி பெரிய அரசடிப் பகுதியில் பிறந்து, சாவகச்சேரி இந்து ஆங்கிலப் பாடசாலையில் கல்வியை ஆரம்பித்து மருத்துவ சேவையில் இணைந்து 46 வருடங்கள் வைத்திய உலகில் அரும்பணியாற்றியுள்ளார் என்பதை அவரின் சேவையை முழுமையாக அனுபவித்தவர்கள் மூலம் அறியமுடிந்தது.

தனது சேவைக் காலத்தில் தென் பகுதியில் கடமையாற்றிய பின்னர் வடமாகாணத்தில் முழங்காவில், பளை, பண்டத்தரிப்பு, சங்கானை போன்ற வைத்தியசாலைகளில் கடமையாற்றி மீள் நியமன காலத்தில் சாவகச்சேரி மாவட்ட வைத்தியசாலையில் பத்து ஆண்டுகள் பொறுப்பதிகாரியாகவும் பின்னர் நான்கு வருடங்கள் மருத்துவராகவும் பணியாற்றியுள்ளார்.



சேவையில் இருந்த போது ஊர் மக்களால் கௌரவிக்கப்பட்ட ஒரேயொரு அரச மருத்துவர் ச.அம்பிகைபாகன் என்று துணிந்து சொல்லுமளவுக்கு அவரது பணிகள் மக்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றிருந்தன. முழங்காவில் வைத்தியசாலையில் கடமையாற்றியபோது அங்கு சிகிச்சை பெறவரும் மக்கள் அனைவரும் ஒன்றிணைந்து 1988ஆம் ஆண்டு செங்கம்பள வரவேற்பை வழங்கி 'கடவுள்' என்ற பட்டமும் கொடுத்துக் கௌரவித்தனர். அவ் வேளையில் அமைதி காக்கும் படையினராக இருந்த இந்தியப் படையின் அதிகாரிகளால் இந்தக் கௌரவிப்பைச் சகிக்க முடியாமல், போராளிகளுக்கு உதவினார் எனக் குற்றஞ்சாட்டி முகாமில் தடுத்து வைத்தனர். இதனையறிந்த அனைத்துக் கிராம மக்களும் ஒன்றுதிரண்டு முகாமைச் சுற்றிவளைத்துப் போராட்டம் நடத்தி இவரை விடுவித்தனர்.

அதன் பின்னர் பளை வைத்தியசாலையில் பொறுப்பதிகாரியாகப் பொறுப்பேற்று 2000 ஆம் ஆண்டு இடப் பெயர்வு ஏற்படும் வரை கடமையாற்றி, பளையிலிருந்து புறப்பட்ட கடைசி ஆளாக இவர் காணப்பட்டார். அங்கு கட மையாற்றிய வேளையிலும், 1998 ஆம் ஆண்டு பளைப் பிரதேச மக்களால் கௌரவிக்கப்பட்டார். வைத்தியசாலையிலிருந்து பளை மத்திய கல்லூரி வரை செங்கம்பள வரவேற்பு வழங்கப்பட்டது. பளை வைத்தியசாலையிலிருந்து மத்திய கல்லூரி வரையான ஒரு கிலோ மீற்றர் தூரத்தில் அமைந்துள்ள பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகத்தில் உள்ள 18 கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த அனைத்து கிராம மக்களும் வீதியின் இருமருங்கிலும் பூரண கும்பங்கள் வைத்து மலர் மாலை அணிவித்து வரவேற்றனர். வைத்தியசாலைக்கும் மத்திய கல்லூரிக்கும் உள்ள தூரத்துக்கு ஊர்வலமாகச் செல்ல 5 மணி நேரம் பிடித்தது. அந்த அளவுக்கு பிரதேச மக்கள் தமது வரவேற்பை மேற்கொண்டிருந்தனர்.

நோயுற்றிருந்த இறுதி நேரத்தில் கூட வைத்தியசாலை வளாகத்துக்கு வெளியே காணப்படும் புற்றரைக்கு சுழல் நீர்ப் பாய்ச்சலை ஏற்படுத்த ஏற்பாடுகள் மேற் கொண்டு வேலைகள் முழுமை செய்து அவரது கையால் மாலை 5.00 மணிக்கு திறந்து வைக்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்ட வேளையில், பி.ப.3.30 மணிக்கு வைத்தியசாலை விடுதியில் அவர் உயிர் பிரிந்தது.

இவரது இழப்புச் செய்தி அறிந்து இவர் கடமையாற்றிய இடங்களிலிருந்து பெரும் எண்ணிக்கையான மக்கள் கலந்து கொண்டு இறுதி மரியாதை செலுத்தினர்.




நான் இவருடன் நீண்ட காலம் பழகியவன். சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் வளர்ச்சிக்கு முழுமனதுடன் செயற்பட்டவர் என்ற வகையில், அமரரின் நினைவாக வைத்தியசாலைக்கு முன்பாக, மருத்துவர் ச.அம்பிகைபாகனின் நினைவு உருவச்சிலை வைப்பதற்கு வைத்தியசாலை நிர்வாகம் முன்வர வேண்டும். அவ் வாறான முயற்சி மேற்கொள்ளப்பட்டால் பெருமளவு மக்கள் பங்களிப்பு வழங்க முன் வருவார்கள் என்பது எனது நம்பிக்கை.

# "இலக்கியங்களின் தராதரத்தை காலம்தான் தீர்மானிக்கின்றது"

## பண்டிதர் ம.ந.கடம்பேசுவரன் பேட்டி

எஸ்.மல்லிகா

"மனிதர்களை நல்வழிப்படுத்துவனவே சிறந்த இலக்கியங்கள். அவற்றின் தராதரத்தைக் காலம்தான் தீர்மானிக்கின்றது என்று கூறுகிறார் எழுத்தாளரும் பண்டிதருமான கலாபூஷணம் ம.ந.கடம்பேசுவரன். உதயன் பத்திரிகைக்கு அளித்த நேர்காணலின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஒரு பயிற்றப்பட்ட ஆசிரியராகக் கல்விப்புலத்தில்காலடி பதித்த இவர், முதுகலை மாணிப் பட்டதாரி ஆவார். இயற்றமிழ்நூல்களை முறை யுறக் கற்றுப் பண்டிதர் பட்டம் பெற்றவர். கட்டுரை வன்மையும் கவிசெயும் ஆற்றலும் உள்ளவர். ஈழத்து இலக்கியப் புலத்தில் தனக்கென்றொரு தடம் பதித்தவர். தொழில்நுட்பவல்லுநராக, நூலகவியலாளராக, பத்திரிகையாளராக என்றுபல்வேறுதுறைகளிலும் பணியாற்றியவர். கலைவாரிதி, ஆளுநர் விருது மற்றும் அவர் எழுதிய நூல்களுக்கான விருதுகள் எனப் பல விருதுகள், பட்டங்கள் பெற்றவர். தற்போது யாழ். பல்கலைக்கழக முதுகலை மாணி மாணவர்களுக்குக் கற்பித்து வருகிறார். அத்துடன், வடமாகாணக் கல்வித் திணைக்களத்திலுள்ள ஆரியதிராவிடபாஷாபிவிருத்திச்சங்கத்தில் பண்டித வகுப்புக்களைப் பொறுப்பெடுத்து நடத்தி வருகிறார். இனி அவரது நேர்காணலிலிருந்து.........

**கேள்வி:** எழுத்துத்துறைமீதான ஆர்வம் தங்களுக்கு எவ்வாறு ஏற்பட்டது?

**பதில்:** எனது வளர்ச்சிக்குக் காரணகர்த்தராகத் தந்தை விளங்கினார். அத்துடன், எனது முயற்சியும் தேடலும் என்னை வளர்த்தன. எனக்கு நல்ல ஆசான்களும் வாய்க்கப்பெற்றனர். நான் படித்தவற்றையெல்லாம் எழுத்தில் வடிக்க வேண்டும் என்ற வேணவா எனக்குள் ஏற்பட்டது. இவையே நான் எழுத்துப்புலத்தின் மீது நாட்டம் கொள்ள வழிவகுத்தன.

**கே:** ஒரு சிறந்த இலக்கியம் எவ்வாறு இருக்க வேண்டும் என்று தாங்கள் கருதுகிறீர்கள்?

**ப:** மனிதர்களை நல்வழிப்படுத்துவனவாக இருக்கவேண்டும். அவர்கள் வாழ்வதற்கான இலக்குகளைப் போதிப்பனவாக இருக்க வேண்டும். மனிதர்களுள் சிறந்த மாற்றங்களை ஏற்படுத்துவனவாக இருக்க வேண்டும். அப்படிப்பட்ட இலக்கியங்களே சிறந்த இலக்கியங்கள்.

**கே:** பண்டைய தற்கால இலக்கியங்களிடையே தாங்கள் காணும் வேறுபாடு என்ன?

**ப:** பண்டைய இலக்கியங்கள் வாழ்க்கையை வாழும் வழிமுறைகளைக் கற்றுத் தந்தன. இலக்கியம் (இலக்கு+இயம்) என்பது குறிக்கோளை அடைய வழிகாட்டுவதாகும். பண்டைய இலக்கியங்கள் குறிக்கோளை உடையனவாக அமைந்து விளங்குகின்றன. அந்நூல்களைக் கற்பவர்கள் அந்தக் குறிக்கோளை அடைவதிலேயே நாட்டம் காட்டினர். அந்த இலக்கியங்கள் வாழ்க்கைக்கு வழிகாட்டிகளாகவும் அமைந்து விளங்கின, வாழும் நெறிகளையும் கற்றுக்கொடுத்தன. இராமாயணத்தில் ஒருத்தனுக்கு ஒருத்தி என்ற உண்மை உரைக்கப்பட்டது. சிலப்பதிகாரத்தில் கற்புக் கோட்பாடு வலியுறுத்தப்பட்டது. திருக்குறளில் ஒருவன் எப்படி வாழ வேண்டும் என்ற நிலை போதிக்கப்பட்டது. இவ்வாறு பழந்தமிழ் இலக்கியங்கள் ஒவ்வொன்றும் மண்ணில் நல்ல வண்ணம் வாழும் வழிவகைகளைக் கற்றுத் தந்தன. இவற்றைப் படிக்கின்ற ஒருவன் நிச்சயமாகச் செம்மையான வாழ்க்கையை வாழ்வான். ஆனால், இன்றைய இலக்கியங்களில் இப்பண்புகளைக் காண்பது அரிதாகவேயுள்ளது. அவற்றுள் வாழ்க்கையைக் காணமுடிவதில்லை. மனிதர்கள் வாழும் நெறிமுறைகளை அவை போதிப்பதில்லை. தற்கால இலக்கியங்களில் யதார்த்தம் என்ற பெயரில் அமைந்தவை பல இருந்த இடம் தெரியாமல் போன வரலாறும் உண்டு. இருந்த போதிலும் நல்ல படைப்புகள் முற்றிலும் வெளிவருவதில்லை என்று கூறமுடியாது.

**கே:** பண்டைய இலக்கியக் கருத்துக்கள் பல தற்காலத்துக்குப் பொருத்தமற்றன என்ற கூற்று ஒன்று உள்ளது. இதனைத் தாங்கள் ஏற்றுக்கொள்கிறீர்களா?

**ப:** இலக்கியங்களைக் காலத்துக்கு உகந்தவை, ஒவ்வாதவை என்று காலம்தான் தீர்மானிக்க வேண்டும். இதனையே 'பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல கால வகையினானே' என்று நன்னூலாரும் கூறியுள்ளார். எனினும், எல்லா இலக்கியங்களையும் அந்தப் பட்டியலில் சேர்த்துவிட முடியாது. பண்டைய தமிழ் இலக்கியங்களில் பல இன்றும் காலம் கடந்து வாழ்கின்றன. செம்மொழியான நம் தமிழ் மொழியில் காலம் கடந்தும் வாழும் இலக்கியங்கள் உள்ளமையை வெளிநாட்டவர்களும் மெச்சியுள்ளமை இங்கு விதந்து சுட்டத்தக்கது.

**கே:** தாங்கள் எழுதிய நூல்கள் குறித்துக் கூற முடியுமா?

**ப:** நிச்சயமாக. எனது முதலாவது நூலாக மூலவேர் எனும் நூல் அமைந்து விளங்குகிறது. தொடர்ந்து பல நூல்களை வெளியிட்டுள்ளேன். அவையாவன: தீந்தேன் (சிறுவர் பாடல் தொகுதி), பொறுப்பனோயான்? (இலக்கிய நாடகம் 4), இலக்கண மரபு (வரலாற்றாய்வு வழிகாட்டி) பாகம் 1, பொற்கலசம் என்பனவாகும். தமிழறிஞர் சரித்திரம், ஞானச்செல்வர் ஆகிய இரு நூல்களையும் இணைந்து எழுதியுள்ளேன். கல்யாணி என்ற மாத சஞ்சிகை சுன்னாகம் அவைக்காற்றுகைக் குழுவால் 6 மாதங்களுக்கும் மேலாக வெளியிடப்பட்டது. அந்தச் சஞ்சிகையில் ஆசிரிய தலையங்கங்களை நான் தான் எழுதினேன். இச்சஞ்சிகையின் ஆக்கத்துக்குத் துணை நின்றவர் தற்போது கிளிநொச்சி மாவட்டத்தில் கலாசார உத்தியோகத்தராக இருக்கின்ற வை.மா. அருட்சந்திரன் ஆவார். நன்னூல் விருத்தியுரை விளக்கம், திறனாய்வும் கொள்கைகளும், காப்பியதாசன் கட்டுரைகள் (பத்திரிகைகளில் வெளிவந்தவையும் பிறவும்), இலக்கண மரபு (வரலாற்றாய்வு வழிகாட்டி) பாகம் 2 ஆகிய நூல்கள் இந்த வருடம் வெளிவரவுள்ளன. தொடர்ந்தும் பல நூல்கள் எழுதும் முயற்சியில் ஈடுபட்டுள்ளேன்.

**கே:** தற்கால எழுத்தாளர்களில் அநேகமானோர் தமக்குத் தாமே பட்டங்கள் சூட்டிக் கொள்ளும் நிலை காணப்படுகிறது. இது குறித்துத் தாங்கள் என்ன கருதுகிறீர்கள்?


**ப:** பண்டிதர் பட்டம் பெற்ற பலர் முந்தைய காலங்களில் தமது பட்டத்தைப் பெயரில் பயன்படுத்தாமல் எழுதினர். மறைவாகத் தம் பெயரைக் கூடக் காட்டாமல் எழுதினர். அவர்களது தகுதியை அவர்களின் ஆக்கங்களே மேம்படுத்திக் காட்டின. அவர்களின் ஆக்கங்களை வைத்துக்கொண்டே அவர்கள் பண்டிதர்களாக இருக்க வேண்டும் என்று மக்கள் இனங்கண்டனர். ஆனால், இன்றோ பலர் போலியாகப் பட்டங்களைப் போட்டுத் தங்கள் தகுதியை மறைக்க முயல்கின்றனர். இதனால் பட்டங்களுக்கு இழிவு ஏற்படுகிறது. இது இவ்வாறிருக்க இன்னும் சிலர் சைவ சித்தாந்த பண்டிதராக இருந்தால், அதனைவிடுத்து பண்டிதர் என்ற பட்டத்தைத் தமது பெயருக்கு முன்னால் போடுகின்றனர். சைவப் புலவர் என்ற பட்டத்தில் சைவத்தை எடுத்துவிட்டு புலவர் என்று தமது பெயருக்கு முன்னால் போடுகின்றனர். இவர்களது செயலால் சைவம் மதிப்பிழக்கிறது. சைவம் ஒன்றும் மதிப்புக் குறைந்ததில்லை. அவ்வாறு இருக்க இவர்கள் ஏன் சைவத்தை அவமதிக்கின்றனரோ தெரியவில்லை. இன்னும் சிலர் எந்தப் பட்டத்தையும் பெறாமலேயே பண்டிதர் என்றும்-புலவர் என்றும்-கவிஞர்களுக்கு முன்னால் பல்வேறு பட்டங்களும் போட்டுப் பத்திரிகைகளில் எழுதுகின்றனர். மேலும், ஒரு சில நாள்கள் வகுப்புகளில் இருந்துவிட்டுத் தமது பெயருக்கு முன்னால் பட்டங்கள் போடுபவர்களும் உள்ளனர். எது எப்படியிருந்தாலும் தன்னறிவை வளர்க்காதவர்கள் பரிதாபத்துக்குரியவர்களே.

**கே:** மரபுக்கல்வி வளர்ச்சியில் தாங்கள் அக்கறையுடையவராகக் காணப்படுகிறீர்கள். இது குறித்துக் கூறமுடியுமா?

**ப:** எனது தந்தையார் ஒரு தண்டமிழ் ஆசானாகத் திகழ்ந்தமையால் பண்டைய இலக்கண இலக்கிய நூல்களைக் கற்பதில் ஆர்வம் ஏற்பட்டது. அத்துடன், மரபுநிலைத் தமிழறிஞர்களின் தொடர்பும் அவர்களிடம் கல்வி பெறக் கிடைத்த வாய்ப்பும், எனது வளர்ச்சிக்கும் மரபுப் பற்றுக்கும் காரணமாக அமைந்தன. இதனால் நான் பண்டைய இலக்கண இலக்கிய நூல்களைச் சிறப்பாக மாணவர்களுக்குப் போதித்து வருகிறேன்.

**கேள்வி:** தற்கால எழுத்தாளர்களுக்குத் தாங்கள் கூறவிரும்புவது என்ன?

**பதில்:** தற்காலப் படைப்புக்களில் எழுத்துப்பிழைகளே விஞ்சிநிற்கின்றன. இதில் அச்சுப்பேய் என்று கூறப்படுகின்ற அச்சுப்பிழைகள் தவிர்க்க முடியாததாக அமைந்து விளங்கினாலும் அநேகமான படைப்புக்கள் தமிழ்க் கொலைகளுடனேயே வெளிவருவது வேதனையளிக்கிறது. பலர் ஒழுங்காக வசனம் அமைப்பதிலேயே இடறுகின்றனர். ஆதலால், தற்கால எழுத்தாளர்கள் முதலில் தமிழ் இலக்கண இலக்கிய நூல்களை ஐயந்திரிபறக் கற்க வேண்டும். தாம் வெளியிடுகின்ற நூல்களைத் தமிழ்ப்பிழையற காலத்தை வென்று வாழும் தரமுள்ளனவாக வெளியிட வேண்டும்.



> பண்டைய இலக்கியங்கள் வாழ்க்கையை வாழும் வழிமுறைகளைக் கற்றுத் தந்தன. இலக்கியம் [இலக்கு+இயம்] என்பது குறிக்கோளை அடைய வழிகாட்டுவதாகும். பண்டைய இலக்கியங்கள் குறிக்கோளை உடையனவாக அமைந்து விளங்குகின்றன. அந்நூல்களைக் கற்பவர்கள் அந்தக் குறிக்கோளை அடைவதிலேயே நாட்டம் காட்டினர். அந்த இலக்கியங்கள் வாழ்க்கைக்கு வழி காட்டிகளாகவும் அமைந்து விளங்கின.










# சுவிஸில் ‘சிறுவர் மலர் செயல் நூல்’ வெளியீடு

சுவிற்சர்லாந்தின் சூரிச் நகரில் வாழும் ஆசிரியை திருமதி தர்மபாலா சிவாஜினி எழுதிய ‘சிறுவர் மலர் செயல் நூல்’ வெளியீட்டு விழா அண்மையில் சூரிச் நகரில் வெகு சிறப்பாக இடம்பெற்றது. நிகழ்வில் முதன்மை விருந்தினராக சுவிஸ் தமிழர் ஆசிரியர் சங்கத் தலைவரும், சூரிச் தமிழ் வித்தியாலயப் பொறுப்பாளருமான அன்ரன் றட்ணா கலந்து சிறப்பித்தார். சிறப்பு விருந்தினர்களாக சூரிச் தமிழர் நட்புறவுச் சங்கத் தலைவர் க. சற்குணமோகன், ஆசிரியர்களான காசிநாதர் மகேஸ்வரன், பொன் பற்றிக் மற்றும் கௌரவ விருந்தினராக ஊடகவியலாளர் சண் தவராஜா ஆகியோர் கலந்து கொண்டனர். நிகழ்வில் மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

சுமார் 200 மாணவர்களைக் கொண்ட ஒரு தமிழ்ப் பாடசாலையைத் தன்னந்தனியனாக நடத்தி வரும் ஆசிரியை சிவாஜினி, ஏற்கனவே ‘தமிழ் மொழி இலக்கணம்’, ‘புணரியல் தொகுதி’, ‘ஆண்டு 4,5 இலக்கணத் தொகுப்பு’ ஆகிய நூல்களை வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# நான் அந்திக்கு எதிரானவள்

(19 ஆம் பக்கத் தொடர்ச்சி....)

அவர்களுடைய உறவு எப்பிடி இருந்தது என்பதுபற்றி இன்றைக்கு இருக்கிற தலைமுறைக்குத் தெரியாது. முன்பு இருந்தவர்களில நிறையப்பேர் இறந்துவிட்டார்கள். வெளிநாடுகளுக்கும் சென்றுவிட்டார்கள். நாங்கள் மீண்டும் இந்த மண்ணுக்கு வர எங்களைப் புதியவர்களாகத்தான் இங்க உள்ள இன்றைய தலைமுறை எதிர்கொண்டார்கள். அப்ப அதை மையப்படுத்தி, எங்கட இரு இனத்தினுடைய உறவையும் மையப்படுத்தி முதலாவது நாவலை எழுதினனான்.

இண்டாவது நாவலில் எங்கட முஸ்லிம் சமூகத்துக்குள்ள உள்ள ஒற்றுமையின்மையையும் மனித நேயத்தையும் அது எதிர்கொள்கிற பிரச்சனைகளையும் சில குடும்ப சூழலையும் மையப்படுத்தி எழுதியிருந்தன்.

மூன்றாவது, அவலங்கள் என்ற நாவலை பெண்களுக்கெதிராக நிகழ்த்தப்படுகிற வன்முறை, அவர்கள் முகங்கொடுக்கிற பிரச்சினை, பெண்களுக்குள்ள பொறுப்பு, அவர்கள் எப்படி நடந்து கொள்ளவேண்டும், தடைகளைத்தாண்டி எப்படி முன்னேறவேண்டும் என்றவகையில படைச்சனான்.

இப்பிடி கூடுதலாக சமூகத்தில எனக்கிருக்கிற பொறுப்பு, அதுமேல் கொண்டிருக்கிற பற்று, கோபம், வெறுப்பு, விருப்பு, ஆர்வம் இப்பிடியான எல்லாத்தையும் யதார்த்தமா என்ர கதைகளில கொண்டு வர முயற்சி செய்வன். ஏதாவது ஒருவகையில மாற்றம் நிகழ்ந்துவிடாதா என்ற ஒரு பேராசை என்னை திரும்பத் திரும்ப இதில ஈடுபட வைக்குது. நான் இப்பதான் ஆரம்பநிலை எழுத்தாளர். இன்னும் கடந்துவர நிறைய இருக்கு. கற்றுக்கொள்ள நிறைய இருக்கு. ஆனாலும் என்னால் முடிஞ்ச அளவுக்கு முயற்சிசெய்து நல்ல படைப்புக்களை சமூகத்துக்கு கொடுப்பன் என்ற நம்பிக்கை இருக்கு. எனக்கு இடைஞ்சல்கள் தடைகள் என்று நிறைய இருந்தாலும் அதையும் மீறின ஒத்துழைப்பும் இருந்தது. எங்கட முஸ்லிம் சமூக கலை இலக்கிய ஆர்வலர்கள், சமூக ஆர்வலர்கள், தமிழ் இலக்கித்துறை சார்ந்தவர்கள், ஊடகவியளாளர்கள், கல்விப்புலம்சார்ந்தவர்கள், நண்பர்கள், கலாசாரத் திணைக்களம் இப்படி பல நல்ல மனிதர்கள் எனக்கு பக்கத்தில இருந்ததால நான் என்னை அடையாளங்கண்டிருக்கிறன். அடையாளப்படுத்தியிருக்கிறன். இது எல்லாம் எப்பவுமே என்ர மனசில நன்றியா இருக்கும். என்னுடைய இந்தப் பணிக்கு கணவர் உதவியும் செய்வதில்லை. இடைஞ்சலாகவும் இருந்ததில்லை. சுதந்திரமா என்னை இயங்க அனுமதிச்சிருக்கிறார். குறிப்பா நான் உடைஞ்சு போற நேரமெல்லாம் என்னை ஆறுதல் படுத்தி என்னை இயங்க வைப்பதில பிள்ளைகளுடைய பங்கு அளப்பரியது. அதோட இப்பிடி ஒரு ஆற்றலைத் தந்ததுக்கு கடவுளுக்கு நன்றி சொல்லவேணும்.

கவிதை எழுதுவதில்தான் நிறைய விருப்பம். நிறைய கவிதைகள் எழதி இருக்கிறன். இன்னும் அது தொகுப்பாக வெளிவரேல்ல. கொண்டுவரவேணுமென்ற ஆசை இருக்கு. வசதி இல்லை. முயற்சி செய்துகொண்டிருக்கிறன்.

ஆரம்ப காலத்தில இருந்து இன்றுவரைக்கும் தமிழ், முஸ்லிம் மக்களின் உறவுகள் தொடர்பில் ஒரு முழுமையான நாவல் எழுத வேணும் எண்டது. ஒரு கனவா இருந்துகொண்டிருக்குது. என்னைப்போல பெண்கள் இப்படியான துறைகளில இயங்குறதுக்கு சமூகத்தில தடை இல்லை. ஆனா அவர்கள் சமூகத்தின்ர தடையை மீறி செய்யத் தயாரில்லை. அது மாற வேணும். தயவுசெய்து திறமையை வறுமைக்குள்ள முடக்காதீர்கள். தடைகளைக் கண்டு துவளாதீர்கள். உங்களால எது முடியுமோ அதைச் செய்யுங்க, சாதிக்கலாம். எழுதுறதைக் கூட்டுங்கள். யாழ்ப்பாணத்தில ஏகப்பட்ட பெண் எழுத்தாளர்கள் கலைஞர்கள் இருக்கிறார்கள். அவர்களுடைய நல்ல நல்ல எழுத்துக்கள் வெளியில் போய்ச் சேரேல்ல. நிறைய விடயங்கள் மூடப்பட்டுக்கிடக்கு அதை எழுத்தின் மூலமா வெளிய கொண்டுவர வேண்டும்" என தன்னுடைய அனுபவத்தை தன்னைப்போன்ற இளைய படைப்பாளிகளுக்கு கூறுகிறார் இளங்கலைஞர் எழுத்தாளர் நஸ்பியா அஜீத்.


**UNIVERSITY OF JAFFNA, SRI LANKA**

**VACANCIES**

**FACULTY OF AGRICULTURE, KILINOCHCHI PREMISES**

University of Jaffna will entertain applications reach us on or before **14.03.2017** from qualified persons for the under mentioned posts **on Temporary basis**

| Positions | Disciplines |
|---|---|
| Temporary Lecturer | Agronomy, Agric Biology, and Animal Science |
| Temporary Demonstrator | Agronomy, Agricultural Chemistry, and Agricultural Engineering |

Note 1: Candidates who are awaiting the results of the final degree examinations may also apply
Note 2: Candidates who are willing to apply for more than one positions, should submit separate applications.

**Salary scale**

Temporary Demonstrator    Rs.29,190/- p.m. (fixed)
Temporary Lecturer    Rs. 35,556 /- p.m (Fixed)

In addition to the above salary, the allowances approved by University Grants Commission will also be paid.

Application forms and other details may be obtained from the office of the Deputy Registrar/ Academic Establishments, University of Jaffna, Sri-Lanka, either in person or by post, on a payment of Rs.100/- per application form. Those who wish to obtain application forms by post are requested to send a Money Order drawn in favour of the **Bursar, University of Jaffna** together with a self-addressed stamped envelope 23x10 c.m. in size.

Applications shall be sent to the Deputy Registrar/Academic Establishments, University of Jaffna, Sri Lanka.

Application forms and other details will also be available in the University website www.jfn.ac.lk. Those who wish to send the application forms downloaded from the University website should attach a Money Order for Rs.100/- to the application form drawn in favour of the **Bursar, University of Jaffna.**

Applicants from the University System/Government Departments /Corporations and Statutory Board should channel their applications through the Head of respective Institutions. Illegible, incomplete and late applications will be rejected without intimation. Only short listed applicants will be called for an interview.

**Registrar,**
University of Jaffna,
Sri Lanka.
28.02.2017.





## மகுட விழா

ஊவா கல்வி அபிவிருத்தி மன்றத்தின் கலை, இசை, நடன மேம்பாடுகளுக்கான மகுடவிழா நேற்றுமுன்தினம் பதுளை மாநகர மண்டபத்தில் நடைபெற்றது. இதில் கிழக்குப் பல்கலைக்கழக ஓய்வுநிலைப் பேராசிரியர் சி.மௌனகுரு முதன்மை அதிதியாகக் கலந்து கொண்டார். (ய-41)

# 2017

## மார்ச் மாத பலன்



### மேடம்

அச்சுவினி, பரணி, கிருத்திகை முதலாம் பாதம்

மேட ராசி நேயர்களே! தன்னுடைய கௌரவத்துக்கும், பெயருக்கும் களங்கம் ஏற்படாதவாறு பொறுப்புடன் நடந்து கொள்ளும் பண்பு கொண்ட உங்களுக்கு லாப ஸ்தானமான 11ஆம் வீட்டில் மாத முற்பாதியில் சூரியன், புதன் சஞ்சரிப்பதாலும் சனி அதிசாரமாக பாக்கியஸ்தானத்தில் சஞ்சரிப்பதாலும் எல்லா வகையிலும் சாதகமான பலன்களை அடைவீர்கள். குரு பகவான் வக்ர கதியில் சஞ்சரிப்பதால் தடைப்பட்ட சுபகாரியங்கள் கை கூடும். குடும்பத்தில் மகிழ்ச்சியும் சுபீட்சமும் அதிகரிக்கும். உங்கள் பலமும் வலிமையும் கூடும். எல்லா வகையிலும் ஏற்றம் உண்டாகும். நீங்கள் எடுக்கும் முயற்சிகளில் அனுகூலப் பலன்கள் கிடைக்கும். உத்தியோகஸ்தர்கள் எடுக்கும் பணிகளை சிறப்பாக செய்து முடித்து அதிகாரிகளின் பாராட்டுதல்களைப் பெறுவார்கள். எதிர்பாராத தன வரவுகளால் குடும்பத் தேவைகள் யாவும் பூர்த்தி ஆகும். தொழில் வியாபாரம் செய்பவர்கள் நல்ல முன்னேற்றங்களை அடைய முடியும். வெளியூர் வெளிநாட்டு தொடர்புடையவைகளால் அபிரிமிதமான லாபம் கிடைக்கும். புதிய தொழில் தொடங்குபவர்களுக்கும் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். கடந்த கால கடன்களும் குறையும்.

**பரிகாரம்**-முருக வழிபாடு உத்தமம்.

# உரும்பிராய் ஜெகநாதனின் கவிதை நூல் வெளியீடு

சமூகத்தால் ஒதுக்கப்பட்டவர்கள் விழிப்படைந்து போராட வேண்டும். இவ்வாறு, 'சாதி வலயங்களுள் வாக்கு வங்கிகள்' எனும் கவிதை நூல் வெளியீட்டு நிகழ்வில் முதன்மை விருந்தினராக கலந்து கொண்டு உரை நிகழ்த்திய அருட்பணி கலாநிதி அ.பி.ஜெயசேகரம் அடிகளார் மேற்கூறியவாறு தெரிவித்தார்.

உரும்பிராயைச் சேர்ந்த வி.ஜெகநாதனால் எழுதப்பட்ட 'சாதி வலயங்களுள் வாக்கு வங்கிகள்' எனும் கவிதை நூல் வெளியீட்டு நிகழ்வு கடந்த 19 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை யாழ் முதன்மைச் சாலையில் அமைந்துள்ள திருமறைக்கலாமன்ற கலைத்தூது மணிமண்டபத்தில் திருமறைக் கலாமன்றத்தின் பிரதி இயக்குநர் யோ.யோண்சன் ராஜ்குமார் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் தொடர்ந்து உரையாற்றிய முதன்மை விருந்தினர் தொடர்ந்து தமதுரையில் தெரிவித்ததாவது. இளைஞர்கள் இளம் வயதில் போராட்ட குணத்துடன் இருப்பார்கள். திருமணமானதும் இந்தக் குணம் குறைந்துவிடும். சிலர் சுயவிருப்பத்தில் எழுதுவார்கள், ஆனால் உணர்வுபூர்வமாக எழுதமாட்டார்கள் ஆனால் அன்னை திரேச உணர்வுபூர்வமாக மக்களுடன் ஒன்றுபட்டவர். ஜெகநாதனின் உணர்வுகள் இந்தக் கவிதைகளில் உள்ளது.

சாதி ஓர் அழகான சொல்லல்ல. சாதி தற்செயலாக நடந்த ஒரு விடயம். ஒரு சமூகத்துக்குள் அவர் அல்லது அவள் பிறந்துள்ளார். இதைப் பெரிதுபடுத்துவது ஒரு மடமையாகும். இது ஓர் அறியாமை. இந்தச் சாபக்கேட்டை அறிவியல் ரீதியாக அணுகவேண்டும். இதற்கெதிராக மக்கள் விழிப்படையவேண்டும். சாதி எமது சமூகத்தில் ஒரு பிரச்சினையாக உள்ளது. எமது பேச்சுக்களில் இது எங்கடை, அவர்கள் உங்கடை ஆக்கள் எனப் பேசுகிறோம். இது நாகரிகமல்ல இதற்கெதிராக நாம் போராட வேண்டும். நாம் ஒரு தாய் மக்கள் என்ற உணர்வு இருக்கவேண்டும். தாழ்வு மனப்பான்மையிலிருந்து முன்னேற வேண்டும். தமிழனில் உள்ள வடு முழுமையாக அகற்றப்படவில்லை. எமது தமிழ் மொழியும் அழிந்து கொண்டு போகிறது. வடக்கு மாகாணத்தையாவது நாம் காப்பாற்ற வேண்டும். தமிழ்த் தேசியத்தில் அக்கறை கொள்ளவேண்டும் மானிடம் எங்கு வதைபடுகிறதோ அங்கெல்லாம் ஜெகநாதனின் இந்தக் கவிதை நூல் பேசும் என்றார். முதன்மை விருந்தினர் நூலை வெளியிட்டு வைக்க முதற் பிரதியை முன்னாள் வடக்கு, கிழக்கு மாகாண சபை முதல்வர் அ.வரதராஜப் பெருமாள் பெற்றுக்கொண்டார். நூலின் ஆய்வுரையை அ.வரதராஜப் பெருமாளும், சொல்லின் செல்வர் இரா. செல்வ வடிவேலும் நிகழ்த்தினர் நூலின் ஏற்புரை நூலாசிரியரால் நிகழ்த்தப்பட்டது. (51)

## நாளை

**மாசி-18**

வியாழக்கிழமை -02.03.2017
திதி: சதுர்த்தி பி.ப. 03.20
நட்சத்திரம்: அச்சுவினி பி.இ.03.55
சுபநேரம்:07.57-09.27 வரை
ராகுகாலம்:01.57-03.27 வரை
சதுர்த்தி விரதம்

## வரலாற்றில் இன்றைய தினம்

1565- றியோ டி கெனாறியோ நகர் உருவாக்கப்பட்டது.

1700- கிறகோரியன் நாள் காட்டிக்கு இயைபுபடுத்தும் முயற்சியாக சுவீடன் தனது சொந்த நாள் காட்டியை அறிமுகப்படுத்தியது.

1790- அமெரிக்காவின் முதல் மக்கள் தொகை கணக்கெடுப்புக்கு ஆணையிடப்பட்டது.

1815 - நாடுகடந்த நிலையிலிருந்து பிரான்ஸுக்கு நெப்போலியன் திரும்பினார்.

1872 - உலகின் முதல் தேசிய பூங்காவாக ஜெலோ ஸ்டோன் தேசிய பூங்கா உருவாகியது.

1901 - ஆஸ்திரேலிய இராணுவம் உருவாக்கப்பட்டது.

1914- பூகோள அஞ்சல் யூனியனுடன் சீனக் குடியரசு இணைந்தது.

1919- கொரியாவில் ஜப்பானிய ஆட்சியில் மார்ச் 1 இயக்கம் தொடங்கியது.

1936- ஹீவர் அணை பூர்த்தியாகியது.

1946 - இங்கிலாந்து வங்கி தேசியமயமாக்கப்பட்டது.

1947 - பன்னாட்டு நாணய நிதியம் தனது நிதி நடவடிக்கைகளைத் தொடங்கியது.

1953 - சோவியத் பிரதமர் ஜோசப் ஸ்டாலின் மாரடைப்புக் காரணமாக நிலைகுலைந்து நான்கு நாள்களின் பின் மரணமடைந்தார்.

1961- அமெரிக்க ஜனாதிபதி ஜோன் எப் கெனடியால் அமைதிப்படை ஸ்தாபிக்கப்பட்டது.

1966- சிரியாவில் பாத் கட்சி அதிகாரத்துக்கு வந்தது.

1974-வோட்டர் கேற் ஊழல் நீதிக்கு இடையூறு விளைவித்ததாக வோட்டர் கேற் விவகாரத்தில் 7பேர் மீது குற்றம் சுமத்தப்பட்டது.

1981- ஐரிஷ் குடியரசு இராணுவத்தைச் சேர்ந்த உறுப்பினர் பொபிசான்ட்ஸ் எச் எம் சிறைச்சாலையில் தனது உணவு தவிர்ப்புப் போராட்டத்தைத் தொடங்கினார்.

1988 - புலிகளுடன் உடன் பேசுங்கள் இந்திய அரசிடம் எதிர்க் கட்சிகள் வற்புறுத்து.

1995- யாகூ கூட்டிணைக்கப்பட்டது.

1998- உலகளாவிய ரீதியில் ஒரு பில்லியன் டொலர் சம்பாதித்த முதற்படமானது டைட்டானிக்.

2003- ஹேக்கில் பன்னாட்டுக் குற்றவியல் நீதிமன்றம் தொடக்க வைபவத்தை நடத்தியது.

2007- மகிந்த-புலிகள் இரகசிய ஒப்பந்தம் விசாரிக்க நாடாளு மன்ற தெரிவுக்குழு தேவையென சிறிபதி சூரியாராச்சி கோரிக்கை, திடுக்கிடும் உண்மைகள் வெளிவரும் எனவும் தெரிவிப்பு.

2008 - இராணுவ நகர்வை நியாயப்படுத்தவே அரசின் 13 ஆவது திருத்த முயற்சி கிழக்கில் சுமுகநிலை குறுகிய காலத்தில் சாத்தியமில்லையென ரவூப் ஹக்கீம் தெரிவிப்பு.

2014 - மாபெரும் கத்திக் குத்துக்கு இலக்காகிச் சீனா குண்மிங் ரயில் நிலையத்தில் 29 பேர் உயிரிழந்தனர்.

2016- நாவாந்துறை விளையாட்டு மைதானம் 2 வாரங்களுள் அனுமதி பெற வேண்டும், இல்லையேல் சட்ட நடவடிக்கை என்கிறது கடலோர பாதுகாப்புத் திணைக்களம்.

# காரைநகரில் நாகமுத்துப் புலவரின் கவிதைகள் நூல் வெளியீடு





















காரைநகர் நாகமுத்துப் புலவர் கவிதைகள் நூல் அண்மையில் காரைநகர் இந்துக்கல்லூரி நடராசா ஞாபகார்த்த மண்டபத்தில் கல்லூரியின் முன்னாள் அதிபர் கலாபூஷணம் பண்டிதர் மு.சு. வேலாயுதபிள்ளை தலைமையில் இடம்பெற்றது.

இவ் விழாவில் ஆசியுரையினை யாழ் பல்கலைக்கழக வாழ்நாள் பேராசிரியர் வே.தர்மரட்ணம் அவர்களும் வாழ்த்துரைகளை வடமாகாணக் கல்வி அமைச்சின் ஓய்வு நிலை பிரதிச் செயலரும் காரைநகர் அபிவிருத்திச் சபைத் தலைவருமான ப.விக்னேஸ்வரன்.காரைநகர் இந்துக்கல்லூரி முன்னாள் அதிபர் திருமதி வாசுகி தவபாலன்.பண்டிதை செல்வி யோகலட்சுமி சோமசுந்தரம்.காரைநகர் மணிவாசகர் சபையின் முன்னாள் செயலர் கவிஞர் வே.குமாரசுவாமி ஆகியோரும்.

நூலின் அறிமுகவுரையினை சிவத்தமிழ் காவலர் ஆ. செந்தில்நாதனும் வெளியீட்டுரையினை யாழ் பல்கலைக் கழக முன்னாள் தழிழ்த் துறைத் தலைவர் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜாவும் நிகழ்த்த யாழ். பல்கலைக்கழக ஆங்கிலத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி திருமதி வீரமங்கை ஸ்டாலினா யோகரத்தினம் நூலினை வெளியிட்டு வைக்க கௌரவப் பிரதியை செல்வி இராணி வைத்தீசுவரக்குருக்கள் பெற்றுக்கொண்டார்.

ஆய்வுரையினை கோப்பாய் ஆசிரியர் கலாசாலை பிரதி முதல்வர் செந்தமிழ்ச் சொல்லருவி ச.லலீசனும் நன்றியுரையினை நூலின் தொகுப்பாளரும் வெளியீட்டாளருமான கனக சிவகுமாரனும் வழங்கினர். மண்டபம் நிறைந்த பார்வையாளர்கள் கலந்துகொள்ள அறிமுக விழா சிறப்பாக இடம்பெற்றது. ஆய்வுரையில் கோப்பாய் ஆசிரியர் கலாசாலை பிரதி முதல்வர் செந்தமிழ்ச் சொல்லருவி ச.லலீசன் குறிப்பிட்ட விடயங்கள் வருமாறு

காரைநகர் அன்னை இன்று இன்னும் அக மகிழ்கின்றாள். எந்தத் துறை சார்ந்தாலும் அந்தத் துறை சார்ந்து முதன்மையானவர்களைத் தந்த மண்ணாக காரைநகரைப் பார்க்கின்றோம். அப்படிப்பட்ட பெருமைக்குரிய இந்தப் பதியானது மிகச் சிறந்த தமிழ்ப் புலமையாளரது இலக்கியத்தைத் தந்துள்ளது. அத்தகைய இலக்கியங்கள் அழியாது அடுத்த சந்ததிக்கு எடுத்துச் செல்லப்படுகின்றது என்கின்ற நம்பிக்கையினை ஏற்படுத்தும் வகையில் இந்த நூல் பதிப்பாக்கம்செய்து வெளியிடப்பட்டுள்ளமை பாராட்டுக்குரிய சிறந்த வரலாற்றுப் பணியாகும்.

இவ்வாறு காரைநகர் இந்துக் கல்லூரி நடராசா ஞாபகார்த்த மண்டபத்தில் நடைபெற்றிருந்த 'காரைநகர் நாகமுத்துப் புலவர் கவிதைகள் நூல்' வெளியீட்டு விழாவில் ஆய்வுரை வழங்கிய கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் பிரதி முதல்வர் 'செந்தமிழ்ச் சொல்லருவி' ச.லலீசன் தெரிவித்தார். புலவரின் பாடல்கள் சிலவற்றை எடுத்து அவற்றிற்கான பொருள்களையும் அவற்றில் தெரிவிக்கப்பட்டுள்ள செய்திகளையும் சுவை படக்கூறியதுடன் அவ்வப்போது பாடல்களுடன் தொடர்புபடுத்தி காரை மண்ணின் மகத்துவத்தினை எடுத்துக் கூறிய இவரது உரை சபையின்கண் சமுகமளித்திருந்த அறிஞர்களை மட்டுமல்லாது சாதாரண மக்களையும் வெகுவாகக் கவர்ந்திருந்தது.

லலீசன் தமது ஆய்வுரையில் மேலும் தெரிவித்ததாவது:

ஓர் ஊரிலே பிச்சைக்காரன் ஒருவன் மர நிழலின் கீழேயிருந்து போகின்றவர்கள் வருகின்றவர்களிடம் அம்மா பிச்சை! ஐயா பிச்சை! என யாசித்துக்கொண்டிருந்தான். இந்த யாசித்தலுக்கு அந்த ஊரே உதவி செய்தது. திடீரென அந்தப் பிச்சைக்காரன் அந்த இடத்திலேயே இறந்து விட்டான். ஊர்ப் பெரியவர்கள் ஒன்று கூடி தங்கள் ஊரிலே பிச்சை எடுத்தவனுக்கு என்ன கைமாறுசெய்யலாம் என சிந்தித்தார்கள். இந்த ஊரிலே வாழ்ந்து இந்த ஊரிலே பிச்சை எடுத்து இந்த ஊர்ச் சோற்றை உண்டு உடம்பு வளர்த்த பிச்சைக்காரனை அந்த இடத்திலேயே அடக்கம் செய்து விடலாம் என முடிவு செய்தார்கள். அந்த இடத்தில் குழி தோண்டும்போது அவர்களுக்கு ஓர் ஆச்சரியம் காத்திருந்தது. குழியிலிருந்து தங்கப்பாளங்கள் மிதந்து வந்தன. பிச்சைக்காரன் தனது காலடியிலே தங்கப்பாளங்கள் இருந்துள்ளன என்பதை மறந்து அல்லது மறைத்து போகின்றவர்கள் வருகின்றவர்களிடம் அம்மா பிச்சை! ஐயா பிச்சை! எனக் கேட்டுக்கொண்டிருந்தானே! என்ன கோலம் இது என வியப்புற்றனர்.

**நாமும் பிச்சைக்காரரே**

ஒரு விதத்தில் நாங்களும் பிச்சைக்காரர்கள் தான்! சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவகசிந்தாமணி, கம்பராமாயணம் என மரபார்ந்த இலக்கியச் செல்வமும் செழுமையும் எங்களுடைய மொழிக்கு இருக்கிறது. அதன் வழி பயின்ற ஒரு மரபுக் கவிதைச் செல்வம் எங்களிடம் இருக்கிறது. ஆனால் அதையெல்லாம் விடுத்து போகின்றவர்கள் வருகின்றவர்களிடம் யாசகம் கேட்பதைப்போல கவிதை யாசகம் கேட்டு இலக்கிய யாசகம் கேட்டு வாழ்கின்ற மனிதர்களை இன்று பார்க்கின்றோம்.ஒரு குழியிலே இருக்கக்கூடிய இன்னொரு தங்கப் புதையலாகத் தான் காரைநகர் நாகமுத்துப் புலவர் கவிதைகளைப் பார்க்கின்றேன். அத்தகைய பெரும் செல்வத்தை காரைநகரிலே வாழ்ந்த புலவர் ஈழத்து இலக்கிய அன்னைக்கு சமர்ப்பணம் செய்திருக்கின்றார்.

இவரது கவிதையோட்டத்தை பார்க்கின்றபோது மிகச் சில பாக்களைத்தான் இவர் பாடியிருப்பாரா எனக்கேட்கத்தோன்றுகின்றது. நிச்சயமாகவில்லை. இந்த நூல் 75 பக்கங்களைக்கொண்ட சிறிய கையடக்க நூலாக மலர்ந்திருக்கிறது. இவருடைய சேகரிப்பு மிக அதிகமாக இருந்திருக்கும். துரதிர்ஷ்டவசமாக அவை எமது கைக்குக் கிடைக்க வில்லை. புலவருடைய பேரனார் அரிதில் முயன்று வெளிநாடுகளில் இருந்தெல்லாம் இந்த இலக்கியங்களைப் பெற்று அழகுற நூலாக தொகுத்திருக்கின்றார். 2009ல் இந்த நூல் அழகாக வெளிவந்துள்ளது. என்னுடைய குருநாதர் பேராசிரியர் சிவலிங்கராஜா அவர்கள் மிகச் சிறப்பான அணிந்துரையை இந்நூலுக்கு வழங்கியுள்ளார்.

**சமூக, பக்தி சார்ந்து**

இவருடைய பாடல்களை பொருள்பட உரைப்பதிலே இரண்டு வகுதிகளை உள்ளே பார்க்கின்றேன். ஒன்று சமூகம் சார்ந்தது. மற்றையது பக்தி அல்லது சமயம் சார்ந்தது. சமூகம் சார்ந்து இன்னும் பல பாடல்களைப் பாடியிருப்பார் எனக் கருதினாலும் அக்காலத்து யாழ்ப்பாணத்துச் சமூகத்தின் நிலை குறித்துப் பாடிய ஒரு கும்மி மாத்திரம் கிடைத்திருக்கின்றது. அந்தக் கும்மி ஒன்றே புலவருடைய பாட்டுத் திறத்தினை எங்களுக்கு பறைசாற்றுகின்றது.

ஸ்ரீமான் சிதம்பரப்பிள்ளை நெவின்ஸ், வித்துவ சிரோன்மணி ந.ச.பொன்னம்பலபிள்ளை ஆகியோருடைய தடத்திலே பயணித்த காரணத்தினால் அவர்களுடைய சொற்களைக் கேட்டுத்தான் புலவருடைய தமிழ் நடை பயில்கின்றது. புலவருடைய சொல்லாட்சி மிக அற்புதமானது. அவருடைய நாவிலே சரஸ்வதி நர்த்தனமாடுவதைப்போல் புலவர் தனது சொல்லாட்சியை மிக அழகாகக் கையாண்டுள்ளார். புலவரிடத்தில் சொல்லாட்சியுடன் பொருளாட்சியும் இருந்திருக்கிறது. சொல்லாட்சியையும் பொருளாட்சியையும் ஒன்றுசேர சங்கமிக்கச் செய்து பயணிக்கின்ற வல்லமை நாகமுத்துப் புலவருக்கு கைவந்த கலையாகவுள்ளதைப் பார்க்கின்றேன். சமயம் சார்ந்து பதிகங்கள், ஊஞ்சல்கள், பக்திரசக் கீர்த்தனைகள் என பல பாடல்களை இவர் தந்திருக்கின்றார். ஆனால் தமிழ் மாணவன் என்ற வகையில் என்னை மிகவும் கவர்ந்தது சமூகம் சார்ந்து இவர் தந்திருக்கின்ற கலிகால வேடிக்கைக் கும்மியாகும். ஓர் ஒளிப்படப்பிடிப்பாளன் எப்படி ஒரு நிகழ்வினை ஒளிப்படம் எடுத்து அம்பலப்படுத்துகிறானோ அதேபோன்று 1925ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்து மக்களுடைய நிலையை ஒளிப்படப்பிடிப்பாளன் போன்று இக்கும்மிப்பாடல்கள் ஊடாக படம் பிடித்துக்காட்டியுள்ளார். புலவருக்கு நிறைந்த திருக்குறள் ஆட்சியும் இருந்துள்ளது என்பதை திருக்குறளை இக்கும்மிப் பாடல்களிலே பொதித்து வைத்ததன் மூலம் உணரக்கூடியதாகவுள்ளது. (250)

## முதல்வர்...

குடிதண்ணீர்ப் பிரச்சினை தொடர்பிலான சிறப்பு அமர்வு வடக்கு மாகாண சபையில் நடாத்தத் தீர்மானிக் கப்பட்டுள்ள நிலையிலேயே அவர் இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளார்.
இது தொடர்பில் வடக்கு மாகாண சபையின் அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானத்துக்கும், எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசாவுக்கும் மின்னஞ்சலில் அனுப்பிய கடிதத்திலேயே முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் மேற்படி விடயத்தைத் தெரிவித்தார் என்று தெரிவிக்கப்பட்டது.
சுன்னாகம் குடிதண்ணீர்ப் பிரச்சினை தொடர்பில் ஆராய்வதற்கு வடக்கு மாகாண விவசாய அமைச்சினால் நிபுணர் குழு நியமிக்கப்பட்டது. அந்தக் குழுவின் அறிக்கையும் வெளியிடப்பட்டது. சுன்னாகம் குடிதண்ணீரில் ஆபத்தான இரசாயனம் எதுவும் கலக்கப்படவில்லை என்று நிபுணர் குழு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது.
அதன் பின்னர், குடிதண்ணீர்ப் பிரச்சினை தொடர்பில் ஆய்வுகள் மேற்கொள்ளப்படுவதாகவோ, மேலதிக ஆய்வுகளுக்கு நிபுணர் குழு நியமிக்கப்பட்டதாகவோ எந்தவொரு பகிரங்க அறிவிப்பும் வெளியிடப்பட்டிருக்கவில்லை. மாகாண சபைக்கும் தெரியப்படுத்தப்பட்டிருக்கவில்லை.
வடக்கின் குடிதண்ணீர்ப் பிரச்சினை தொடர்பில் வடக்கு மாகாண சபையின் சிறப்பு அமர்வு எதிர்வரும் 7ஆம் திகதி நடைபெறும் என்று கடந்த அமர்வில் அறிவிக்கப்பட்டது. இந்த நிலையில், நிபுணர் குழுக்களின் ஆய்வுகள் தொடர்ந்து கொண்டிருப்பதாக வடக்கு முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் திடுதிப்பென அறிவிப்புச் செய்துள்ளார்.
இந்த நிபுணர் குழுக்கள் யாரால் நியமிக்கப்பட்டது? எப்போது நியமிக்கப்பட்டது? என்பது தொடர்பிலெந்தவிடயத்தையும் அவர் குறிப்பிடவில்லை.
'நிபுணர் குழுக்களின் ஆய்வுகள் தொடர்ந்து நடந்து கொண்டிருக்கின்றன. விஞ்ஞான ரீதியான சந்தேகங்கள் தீர்க்கப்பட வேண்டியுள்ளன' என்று முதலமைச்சர் அனுப்பி வைத்துள்ள மின்னஞ்சலில் உள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (வ - 5101)

## வடக்கு...

வித்தார். வீதி வாரம் என்ற தொனிப் பொருளில் கண்டி - வில்கமுவ பிரதேசத்தில் வீதியை மறுசீரமைப்புச் செய்யும் பணியை உயர்கல்வி மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சர் லக்ஸ்மன் கிரியல்ல நேற்று முன்தினம் ஆரம்பித்து வைத்தார்.
அங்கு உரையாற்றிய அவர் மேலும் தெரிவித்ததாவது:
நாங்கள் புதிய அரசமைப்பை உருவாக்கி வருகின்றோம். இன்னும் முடிவடையவில்லை. கருத்துக்களையே பெற்று வருகின்றோம். அனைத்து யோசனைகளையும் நாடாளுமன்றத்தில் முன்வைப்போம். ஒளிந்து விளையாடும் விளையாட்டுக்கள் எதுவுமே இல்லை. நாடாளுமன்றத்திலும், ஊடகங்கள் முன்பாகவுமே இந்த அரசமைப்பைத் தயாரிக்கின்றோம். புதிய அரசமைப்பை உருவாக்கிய பின்னர் மக்களின் விருப்பத்தையும் பெறவேண்டும்.
மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பயன்படுத்தி இந்த அரசமைப்பை உருவாக்கினால் அதனை மக்கள் நிராகரித்துவிடுவார்கள். மாகாண சபை முறைமையை மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பயன்படுத்தி அறிமுகப்படுத்தியதால் முழு நாடுமே தீப்பற்றி எரிந்தது. எனவே நாங்கள் சரி என்றால், மனசாட்சியுடன் பணியாற்றினால் புதிய அரசமைப்பை உருவாக்கியதன் பின்னர் மக்களின் விருப்பத்தைப் பெற பொதுமக்கள் கருத்துக் கணிப்புக்குச் செல்லவேண்டும்.
தமிழ் மக்கள் இன்று நாட்டின் பல பாகங்களிலும் பெருகியுள்ளனர். வடக்கு - கிழக்கு மாகாணங்களை மீளிணைக்க வேண்டும் என்று நீண்ட காலமாகத் தமிழ் மக்கள் கோரிக்கை விடுத்து வந்தனர்.
அந்தக் கோரிக்கையைத் தமிழ் மக்கள் முழுமையாகக் கைவிட்டுவிட்டனர். சுதந்திரத்திற்குப் பின்னர் சிறந்த சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. அனைத்து தரப்பினரும் ஒன்றிணைந்தால் நாட்டுக்கு அவசியமான சிறந்த அரசமைப்பைத் தயாரிக்க முடியும் என்றார். (சு - 5)

## மரண அறிவித்தல்

### சிதம்பரநாதன் ஞானேஸ்வரன்

தோற்றம் 21.09.1963 மறைவு 28.02.2017



யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டையை பிறப்பிடமாகவும் வவுனியா தோணிக்கல் குட்செட்வீதியை வதிவிடமாகவும் கொண்டிருந்த சிதம்பரநாதன் ஞானேஸ்வரன் (தொழில்நுட்ப உத்தியோகத்தர், வவுனியா வளாகம், யாழ் பல்கலைக்கழகம்) 28.02.2017 செவ்வாய்க்கிழமை சிவபதமடைந்தார்.
அன்னார் காலஞ்சென்ற சிதம்பரநாதன் நாகரத்தினம் தம்பதியரின் கனிஷ்ட புதல்வனும் பத்மாசனி, சோமஸ்கந்தன், சதாநந்தன், நாகலோஜினி ஆகியோரின் அன்புச்சகோதரனும் திருமதி. ஞானேஸ்வரன் பராசக்தியின் அன்புக்கணவரும் உமாசுதன் (திருகோணமலை வளாகம், கிழக்கு பல்கலைக்கழகம்.) நவநீதன் ஆகியோரின் அன்புத்தந்தையும் பிறேம்குமார், தபோநிதி, தவயோகினி, காலஞ்சென்ற செல்வரத்தினம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் கஜன், ராகுலன், குகதர்சினி ஆகியோரின் அன்பு மாமனாரும் ஞானகௌரி, சண்முகி, சாருஜன், விதுஜன் ஆகியோரின் அன்பு சிறிய தகப்பனாரும் காலஞ்சென்ற திரு.திருமதி குமாரசிங்கத்தின் அன்புமருமகனும் குமாரசிங்கம், குகதாசன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் 02.03.2017 வியாழக்கிழமை மு.ப 11.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தோணிக்கல் இந்து மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.
024 222 0012



### பனை அபிவிருத்திச் சபையானது பின்வரும் பனைசார் உணவு உற்பத்திப் பொருள்களுக்கான கொள்வனவு விலைகளை நிர்ணயம் செய்துள்ளது

| | கொள்வனவு விலை /கி.கிராம்/ரூபா |
|---|---|
| 1. பூளுக்கொடியல் | 200.00 |
| 2. ஒடியல் | 170.00 |
| 3. வட்டச்சீவல் | 450.00 |
| 4. சீவல் ஒடியல் | 350.00 |
| 5. பனாட்டு | 600.00 |

ஒரு பனங்கிழங்குக்கு ரூபா 2.25 இற்கு கொள்வனவு செய்யப்படும்.
பனைசார் உற்பத்தியாளர்கள் தங்களின் தரமான உற்பத்திகளின் மாதிரிகளைச் சமர்ப்பித்து சந்தைப்படுத்தல் நடவடிக்கைகளை மேற்கொள்ள பனை அபிவிருத்திச் சபையின் மாவட்ட அலுவலகங்களுடன் தொடர்பு கொள்ளவும்.

தொடர்புகளுக்கு - பனை அபிவிருத்திச்சபை
021 222 2034 / 077 742 6420 / 077 880 0660

### ஊர்காவற்றுறை ப.நோ.கூ. சங்கம் (வ - து) கேள்வி கோரல் ஆட்டோ விற்பனை NPGN -2032

சேவையில் ஈடுபட்டுக்கொண்டிருக்கும் நல்ல நிலையில் உள்ள NPGN-2032 இலக்கத்தைக் கொண்ட ஆட்டோ விற்பனைக்காக எம்மிடம் உள்ளது. கேள்வி கோரல் கடிதம் மூலம் குறிப்பிட்ட ஆட்டோவினை விற்பனை செய்ய உள்ளோம். தேவையானவர்கள் ஊர்காவற்றுறை ப.நோ.கூ.சங்க தலைமை அலுவலகத்தில் தொடர்பு கொண்டு காரியாலய நேரத்தில் ஆட்டோவினைப் பார்வையிடலாம். கேள்விகோரல் கடிதத்தினை 15.03.2017 ஆம் திகதிக்கு முன்னர் நேரிலோ அல்லது பதிவுத்தபாலிலோ கிடைக்கக்கூடியதாக "பொதுமுகாமையாளர் ஊர்காவற்றுறை ப.நோ.கூ.சங்கம் ஊர்காவற்றுறை" என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும். கடிதம் உறையின் இடது பக்க மேல் மூலையில் "ஆட்டோ விற்பனை - NPGN -2032 கேள்வி கோரல்" எனக் குறிப்பிடவும்.

பொதுமுகாமையாளர்
ஊர்காவற்றுறை ப.நோ.கூ.சங்கம்
ஊர்காவற்றுறை.

தொ.இல. 021 221 1648
077 514 1168



## தரம் 5 பரீட்சைத் தொடர் - 06
## பாராட்டுப் பெறுவோர்கள்

நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவனின் பூரண அனுசரணையுடன் கடந்த ஜனவரி மாதம் ஒளி அரசி மூலம் இடம்பெற்ற தரம் - 5 தபால் மூலமான பரீட்சைத் தொடரில் உயர் புள்ளிகளைப் பெற்ற கீழ்வரும் புலமையாளர்களை ஒளிஅரசி, புலமைச்சுடர் சார்பாகப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

| | | |
|---|---|---|
| முஹம்மது மக்கி மஸ்னவி | கல்/திஹாரி தாருஸ்ஸலாம் ஆரம்ப பாடசாலை | 179 |
| மு.பாத்திமா பூரிகா | மட்/மம/ஹிழுறியா வித்தியாலயம் | 178 |
| பி.திவ்ஷனி | யா/சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை | 178 |
| தி.திருவர்த்தன் | யா/புனித ஜோசப் பொஸ்கோ வித்தியாலயம் | 177 |
| உ.சகானா | யா/சாவகச்சேரி மகளிர் கல்லூரி | 177 |
| ஞா.கோபிகா | யா/சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை | 176 |
| உ.ஸ்வேதா | யா/மீசாலை வீரசிங்கம் | 176 |
| பி.பிரணவன் | யா/சாவகச்சேரி மகளிர் கல்லூரி | 176 |
| ந.ரஷ்யா | யா/டிறிபேர்க் கல்லூரி | 173 |
| வி.அபிராஜ் | யா/தும்பளை சிவப்பிரகாச மகா வித்தியாலயம். | 172 |
| பி.ஒளசதன் | யா/உடுப்பிட்டி அ.மி கல்லூரி | 171 |
| த.தர்மிகா | மன்/தோட்டவெளி அ.த.க பாடசாலை | 170 |
| சி.போஷிதன் | யா/ஸ்ரீகுமரன் ஆரம்ப பாடசாலை | 170 |
| ஜ.பதுசன் | மா/ஸ்ரீகுமரன் ஆரம்ப பாடசாலை | 169 |
| ஏ.விதுசிகா | யா/சாவகச்சேரி ஆரம்ப பாடசாலை | 169 |
| லோ.திவ்வியன் | யா/சூனாய் சைவ பிரகாச வித்தியாலயம் | 169 |
| பா.சந்தியா | தி/ஸ்ரீ சண்முகா இந்து மகளிர் கல்லூரி | 167 |
| சி.அரபி | [illegible] | 166 |
| டி.புஸ்பநாதன் | யா/சாவகச்சேரி மகளிர் கல்லூரி | 166 |
| B.கேதீஸ்வரன் | ஸ்ரீ/குமரன் ஆரம்ப பாடசாலை | 165 |
| ம.அபிலாசினி | யா/கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயம். | 164 |
| ஜீ. ஷாகம்பரி | சுண்டுக்குழி மகளிர் வித்தியாலயம் | 164 |
| ச.தானுஜா | யாழ்/இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை | 163 |
| தி.பிரியந்த | யாழ்/புனித பத்திரிசியார் கல்லூரி | 163 |
| தி.சுதேஸ்கரன் | யா/சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை | 162 |
| ஜெ.டினோசன் | யா/உடுப்பிட்டி அ.மி.கல்லூரி | 162 |
| சி.ரனோஜன் | யா/டிறிபேர்க் கல்லூரி | 162 |
| ந.கிருசாந் | யா/கல்வயல் ஸ்ரீ சண்முகானந்தா வித்தியாலயம் | 161 |
| பி.சஜனுஜன் | யா/கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை | 161 |
| து.திருசன் | யா/உடுப்பிட்டி அ.மி.கல்லூரி | 160 |
| மு.குஷானி | யா/சாவகச்சேரி அம்மன் பாடசாலை | 159 |
| ப.ரசுல்யா ஹரனி | நாத்தாண்டிய சாகிரா மகா வித்தியாலயம் | 159 |

(தொடர்ச்சி நாளை)

உங்கள் பிள்ளைகளும் பரீட்சையில் பங்குபற்ற விரும்பினால் அருகிலுள்ள உதயன் முகவரிடம் ஒளிஅரசி சஞ்சிகையைப் பெறுவதன் மூலம் பங்குபற்றலாம். மேலதிக தொடர்புகளுக்கு 071 862 8351 என்ற தொலைபேசி இலக்கத்துக்கு அழைக்கலாம்.

## மரண அறிவித்தல்



### திருமதி நேசமணி சபாரட்ணம்

ஏழாலையைப் பிறப்பிடமாகவும் குமரபுரம் பரந்தனை வதிவிடமாகவும் கொண்ட திருமதி நேசமணி சபாரட்ணம் நேற்று (28.02.2017) செவ்வாய்க்கிழமை காலமானார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம் - இராசம்மா தம்பதியரின் கனிஷ்ட மகளும், காலஞ்சென்ற சரவணமுத்து சபாரத்தினத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான கபிரியேற்பிள்ளை, செல்லமணி, செல்வராசா, புவனேஸ்வரி, கனகரத்தினம், நாகரத்தினம், சுப்பிரமணியம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், கிருபாகரன் (நிதி உதவியாளர், பி.சு.சே திணைக்களம், வவுனியா) பிரபாகரன், உமாகரன் (கணக்காய்வாளர், நியூ பத்ரா அன் கோ), சுபாகரன் (பிரான்ஸ்), மைதிலி ஆகியோரின் பாசமிகு தாயாரும், கிருபாநிதி (ஆசிரியர், வ/விபுலானந்தா கல்லூரி), சந்திரவதனி, சுகந்தி (ஆசிரியர், வ/ஓமந்தை மத்திய கல்லூரி), கவிதா, கௌதீபன் ஆகியோரின் மாமியும், கிருசயணன், திகாளன், சியாமிளன், தூரிகா, கவிநயா, யவின்சிகா, தருமினன், யாமினன், நயன்தனா, அதிஷ்ரயா ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.03.2017) புதன்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு 24, குமரபுரம், பரந்தனில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக பரந்தன் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

24, குமரபுரம்,
6ஆம் ஒழுங்கை, பரந்தன்.

தகவல்: குடும்பத்தினர்,
0767189488, 0775851803

# தொடர்ச்சிகள்



## மைத்திரியின்...

கங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு மக்கள் கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அரச தலைவர் செயலகப் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்த பொலிஸார் போராட்டத்தில் ஈடுபட்டவர்களைச் சந்தித்து அரச தலைவரை நேரில் சந்தித்து மனுவைக் கையளிப்பதற்கான சந்தர்ப்பத்தை ஏற்படுத்தித் தருவதாகத் தெரிவித்தனர். அதனையடுத்துப் போராட்டத்தில் ஈடுபட்டவர்களில் சிலர் மனுவை அரச தலைவர் செயலகத்துக்குச் சென்று கையளித்தனர்.

இதேவேளை, இந்தப் போராட்டம் நடைபெற்ற இடத்துக்குச் சென்ற அமைச்சர் மனோ கணேசன், மக்களுடன் கலந்துரையாடி குறைநிறைகளைக் கேட்டறிந்துகொண்டார். இதன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து வெளியிட்ட அமைச்சர்,

"போர் இடம்பெற்ற காலத்தில் இந்த நாட்டுக்கு அதி உயர் பாதுகாப்பு வலயம் அவசியப்பட்டிருந்தது. தமிழீழ விடுதலைப் புலிகளின் தாக்குதலை எதிர்கொள்வதற்காக சில காணிகளில் இராணுவப் படை முகாம்கள் அமைக்கப்பட்டிருந்தன. இன்று போர் இல்லை. அதனால் அதியுயர் பாதுகாப்பு வலயமும் அவசியமில்லை. மக்களுடைய காணிகள் மீளக் கையளிக்கப்பட வேண்டும்.

சாதாரண மக்களின் நியாயமான கோரிக்கைகளை நிறைவேற்ற வேண்டும். தற்போதைய அரச தலைவர் வடக்கு, கிழக்கு மத்திய கொழும்பு எனப் பரந்துவாழும் தமிழ் மக்களின் வாக்குகளால் தெரிவுசெய்யப்பட்டவர். ஒரு தொகுதியினருக்கு மட்டுமான அரச தலைவர் அல்ல. இந்த அரசுக்கு நாங்கள் இருக்கின்றோம். பேச்சு நடத்தித் தீர்வு காண்போம் என்று எதிர்பார்க்கின்றேன். இது உங்கள் தலைநகரம். போராட்டம் நடத்த உரிமை உள்ளது" என்றார். (வ-4)

## பிலக்குடியிருப்பில்...

மாவட்டச் செயலரிடம் இன்றைய தினம் உத்தியோகபூர்வமாகக் கையளிக்கப்படவுள்ளது.

இந்த நிலையில், முகாம் அமைந்துள்ள பகுதியிலிருந்து வான்படையினர் தமது பொருள்களை நேற்று ஏற்றிச் சென்றனர்.

பிலக்குடியிருப்பு காணி விடுவிப்புத் தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனுக்கும், அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவுக்கும் இடையே நேற்று முன்தினம் சந்திப்பு நடைபெற்றது. இந்தச் சந்திப்பில் காணி விடுவிப்புக்கான உறுதிமொழி வழங்கப்பட்டது.

இந்த நிலையில் நேற்றுக் காலை, கரைதுறைப்பற்று பிரதேச காணி அலுவலர் உள்ளிட்ட குழுவினர் வான்படை முகாம் அமைந்துள்ள பகுதியில் நில அளவை நடவடிக்கையில் ஈடுபட்டனர். நேற்று மாலை வான் படை முகாமைச்சுற்றி அமைக்கப்பட்டிருந்த வேலிகளை அகற்றிய பாதுகாப்புத் தரப்பினர், முகாமிலிருந்த பொருள்களை ஏற்றி அகற்றத் தொடங்கியுள்ளனர்.

வான்படையினர் ஆக்கிரமித்து வைத்திருந்த 42 ஏக்கர் காணிகளையும் நாளை (இன்று) தம்மிடம் ஒப்படைப்பதாக, பிலக்குடியிருப்பு வான்படை முகாமின் பொறுப்பதிகாரி தெரிவித்ததாக முல்லைத்தீவு மாவட்டச் செயலர் தெரிவித்தார். இதன் பின்னர் காணிகள் மக்களிடம் ஒப்படைக்கப்படும் என்று அவர் கூறினார். (வ-5-7-101)

## 54 ஏக்கர்...

தெரிவித்தனர்.

பிலக்குடியிருப்பு மக்களின் காணிகள் வான்படையினரால் இன்றைய தினம் முல்லைத்தீவு மாவட்டச் செயலரிடம் ஒப்படைக்கப்படவுள்ளன. இது தொடர்பில் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மக்களிடம் கேட்டபோது,

எமக்கு இதுவரையில் அப்படியொரு தகவலும் தெரிவிக்கப்படவில்லை. ஆனால் வான்படை முகாம் அகற்றப்படுகின்றது. எமது காணிக்குள் கால் வைக்கும் வரையில் நாம் போராட்டக் களத்திலிருந்து அகல மாட்டோம். எமது 54 ஏக்கர் காணியும் முழுமையாக விடுவிக்கப்பட வேண்டும் என்று அந்த மக்கள் குறிப்பிட்டனர்.

பிலக்குடியிருப்பு மக்கள் கடந்த ஜனவரி மாதம் 31 ஆம் திகதி தமது போராட்டத்தை ஆரம்பித்திருந்தனர். (வ-57)

## அதிகாரிகளின்...

னால் அறவழிப் போராட்டத்தில் ஈடுபட்ட பொது மக்கள் அதிகாரிகளிடம் உறுதிபடத் தெரிவித்தனர். இதனால் மக்களின் போராட்டத்தை நிறுத்த அரச அதிகாரிகள் எடுத்த முயற்சிக்குப் பயன் கிடைக்கவில்லை.

புதுக்குடியிருப்பு பிரதேச செயலத்துக்கு முன்னால் இராணுவ முகாம் அமைந்துள்ள பொது மக்களுக்குச் சொந்தமான 19 ஏக்கர் காணியை விடுவிக்கக் கோரி கடந்த 26 நாள்களாக தொடர் அறவழிப் போராட்டத்தில் மக்கள் ஈடுபட்டுவருகின்றனர்.

புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்துக்கு முன்னால் அறவழிப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள காணி உரிமையாளர்களை நேற்று பிற்பகல் 2 மணியளவில் முல்லைத்தீவு மாவட்டச் செயலாளர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன், புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் ம. பிரதீபன் ஆகியோர் நேரில் சென்று சந்தித்தனர். அவர்கள் ஊடாக முல்லைத்தீவு மாவட்ட இராணுவக் கட்டளை அதிகாரி காணி விடுவிப்புத் தொடர்பாக காணி உரிமையாளர்களுக்கு தெரியப்படுத்தினர்.

புதுக்குடியிருப்பில் 628வது படைப்பிரிவினால் சுவீகரிக்கப்பட்ட பொதுமக்களின் காணி மூன்று படிநிலைகளில் விடுவிக்கப்படும். முதலாவதாக 7.75 ஏக்கர் 20 பேரது காணிகள் 2 வாரத்தில் விடுவிக்கப்படும். (அதாவது 4ஆம் திகதி அன்று) இரண்டாவது படிநிலை 10 ஏக்கர் 29 பேரது காணியானது முகாமில் அமைக்கப்பட்டுள்ள கட்டடங்களை நீக்கி புதிய இடத்துக்குக் கொண்டு செல்வதற்காக மூன்று மாத காலம் தேவைப்படுகின்றது. அவர்களுடைய காணிகள் மூன்று மாதங்களுக்குள் விடுவிக்கப்படும்.

மூன்றாவது படிநிலை பொன்னம்பலம் வைத்தியசாலைக் காணி விடுவிக்கப்பட 6 மாத காலம் அவகாசம் தேவை. இராணுவ அதிகாரி மாவட்டச் செயலாளருக்கு கடிதம் மூலம் தெரியப்படுத்திய விடயங்களை பிரதேச செயலாளர் கடிதம் மூலம் பொதுமக்களுக்கு வழங்கினார். காணி விடுவிப்புத் தொடர்பாக எழுத்து மூலம் உங்களுக்கு தரப்பட்டுள்ளது. போராட்டத்தை முடித்துக்கொள்ளுமாறு முல்லைத்தீவு மாவட்டச் செயலாளரால் கூறப்பட்டது. காணி உரிமையாளர்களுடன் போராட்டத்தில் கலந்துகொண்ட வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், முல்லைத்தீவு மாவட்ட இணைத்தலைவருமான மருத்துவர் சி. சிவமோகன் காணி விடுவிப்பு தொடர்பாக உங்களால் தரப்பட்ட வரைபடத்துக்கும், கடிதத்தில் குறிக்கப்பட்டுள்ளதற்கும் முரண்பாடுகள் இருப்பதாகத் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக காணி உரிமையாளர்கள், ஊடகவியலாளர்களுக்கு முன் ஆராயாது புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் அறையில் முரண்பாடுகள் தொடர்பாக ஆராய்ந்தனர். அதன் பின்னர் முல்லைத்தீவு மாவட்டச் செயலாளரும், புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளரும் 682வது படைமுகாமுக்குள் சென்று ஒரு மணித்தியாலத்துக்கு மேல் இராணுவ அதிகாரிகளுடன் கலந்துரையாடி, படிநிலைகளில் விடுபடும் காணிகளையும் நேரில் சென்று பார்வையிட்டு வந்தனர்.

இராணுவ அதிகாரிகளை சந்தித்துவிட்டு மாலை நான்கு மணியளவில் காணி உரிமையாளர்களை சந்தித்த மாவட்டச் செயலாளரும், பிரதேச செயலாளரும் முதல் படிநிலையில் விடுபடவுள்ள காணி தொடர்பாகவும் ஏனைய படிநிலைகளில் விடுவிக்கவுள்ள காணி தொடர்பாகவும் மீண்டும் தெரியப்படுத்தினர். போராட்டத்தை இன்றுடன் முடித்துக்கொள்ளுங்கள் எதிர்வரும் 4ஆம் திகதி காலை 8மணிக்கு அனைவரும் வாருங்கள். பிரதேச செயலாளரும் வருவார். அன்றைய தினம் உங்கள் காணிகளுக்குள் அழைத்துச் செல்வோம். இத்துடன் போராட்டத்தை முடித்துக்கொள்ளுங்கள் என்று அதிகாரிகளால் தெரிவிக்கப்பட்டது.

அதன் பிறகு ஒன்று கூடிய அனைத்து காணி உரிமையாளர்களும், எதிர்வரும் 4ஆம் திகதி எங்கள் காணிகளுக்குள் செல்லும் வரைக்கும் நாங்கள் முன்னெடுத்த இந்த அறவழிப் போராட்டத்தை தொடர்ந்து மேற்கொள்வோம் என்று ஒருமித்து முடிவெடுத்தனர். அதற்கமைய அவர்கள் காணிகளுக்குள் செல்லும் வரைக்கும், அவர்கள் முன்னெடுத்த உணவு ஒறுப்புப் போராட்டம் தொடரும் என்று அறிவிக்கப்பட்டது. (வ-7)

## விடயத்தைத்...

விடயத்தை திசை திருப்புவதற்கு வடக்கு முதலமைச்சர் விக்னேஸ்வரன் ஏன் முயற்சிக்கின்றார்? யாரைக் காப்பாற்ற முயல்கின்றார் என்று வடக்கு மாகாண எதிர்கட்சித் தலைவர் சி.தவராசா கேள்வி எழுப்பியுள்ளார்.

வடக்கு மாகாண குடிதண்ணீர்ப் பிரச்சினை தொடர்பில் நடைபெறவுள்ள சிறப்பு அமர்வை ஒத்தி வைக்குமாறு கோரி வடக்கு முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் மீண்டும் கடிதம் எழுதியுள்ளார். இது தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே எதிர்கட்சித் தலைவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

வடக்கில் நிலவும் குடிதண்ணீர்ப் பிரச்சினை தொடர்பான விடயத்தினை வடக்கு மாகாண சபையில் விவாதிப்பதற்கு மூன்றாவது தடவையாகவும் முதலமைச்சர் தடைபோட முயல்கின்றார். யாரோ ஒருவரை காப்பாற்ற அவர் இதனைச் செய்கின்றாரா? என்று கேள்வி எழுப்ப வேண்டியிருக்கின்றது. தமது குறைபாடுகளும் சீர்கேடுகளும் வெளிக்கொண்டு வரப்பட்டு விடும் என்ற அச்சத்தின் காரணமாக இவ்வாறு போலிக் காரணங்களை அடுக்குகின்றதாகவே நான் கருதுகின்றேன்.

குடிதண்ணீர்ப் பிரச்சினை தொடர்பில் விவாதிக்க கடந்த ஓர் ஆண்டு காலமாக அனுமதி கோருகின்றோம். பல காரணங்கள் கூறி பிற்போடப்பட்டுக் கொண்டே வரப்பட்டு இறுதியில் திகதி நிர்ணயம் செய்த நிலையில் முதலமைச்சரும், விவசாய அமைச்சரும் இல்லாத காரணத்தினால் பிற்போடப்பட்டது. தற்போது மூன்றாவது தடவையாக காரணமின்றி ஒத்திவைக்குமாறு முதலமைச்சர் கோரியுள்ளார்.

முதல் தடவையாக ஒத்திவைக்குமாறு முதலமைச்சர் கோரிக்கை விடுத்த போது, நீதிமன்றில் உள்ள விடயம் பேசக்கூடாது என்று காரணம் கூறப்பட்டது.

சுன்னாகம் நிலத்தடி நீர் தொடர்பான வழக்கு 2014 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் தாக்கல் செய்யப்பட்ட நிலையில் இதே முதலமைச்சர் 2014 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் நிபுணர் குழுவென ஒரு குழு அமைத்து அதே விடயம் தொடர்பில் ஆராய்ந்தார். இந்த இடத்தில் அவர்களுக்கு ஒரு சட்டம் பின்பற்றப்பட்டு எமக்கு ஒரு சட்டம் பின்பற்றப்படுகின்றது.

இரண்டாவது தடவையாக முதலமைச்சர் கூறிய காரணம் குடிதண்ணீர் தொடர்பில் ஒரு மாநாடு நடைபெறுகின்றது. அதன் அறிக்கை வரும் வரையில் விவாதத்தினை ஒத்தி வைக்குமாறு கோரினார். அந்த மாநாட்டுக்கும் அமர்வுக்கும் தொடர்பில்லை என்பதனை சுட்டிக்காட்டினோம்.

தற்போது மூன்றாவது தடவையாக முதலமைச்சர் ஒத்தி வைக்கக் கோருகின்றார். குடிதண்ணீர் தொடர்பில் தற்போது பேச என்ன அவசரம். அதனைவிட பல வேறு விடயங்கள் உண்டு. இவ்வாறான சிறப்பு அமர்வுகளில் நியதிச் சட்டத்தினை உருவாக்கலாம் என்று கூறி திசை திருப்புகின்றார். தேவையான நியதிச் சட்டங்களை உருவாக்கி இதையோர் சட்ட வலுவான சபையாக மாற்றுங்கள் என்று கடந்த மூன்று வருடங்களாக நான் கூறினேன். செய்ய வேண்டியதை செய்யாது வெறும் பிரேரணை சபையாக இது உள்ளது எனச் சுட்டிக்காட்டியபோது சிரித்துக் கொண்டு இருந்தனர்.

இப்போது குடிதண்ணீர் விடயத்தைக் கேட்கும்போதே நியதிச் சட்ட ஞாபகம் வருகின்றது. இது ஒரு திசை திருப்பு முயற்சியே. உண்மையில் நிர்வாகச் செயல்பாடுகள் தொடர்பில் மக்கள் அறிய வேண்டும். குறித்த விவாதம் நடைபெற வேண்டும் என்றார். (வ-5-101)

## நல்லிணக்கத்தை...

எதனையும் தெரிவிக்கவில்லை.

அவர் தனது உரையில் தெரிவித்ததாவது:

15 மாதங்களுக்கு முன்னர் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் தீர்மானமொன்றுக்கு இணை அனுசரணை வழங்கும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த முடிவை இலங்கை எடுத்திருந்தது. இந்த நடவடிக்கைக்காக எங்கள் நாட்டில் பலர் எங்களை விமர்சித்தனர். இன்றும் விமர்சித்து வருகின்றனர். சிலர் இதனை நாட்டுக்கு செய்த துரோகமாகப் பார்க்கின்றனர்.

நாங்கள் இந்தப் பயணத்தில் முன்னோக்கிச் செல்லும் அதேவேளை நாட்டின் இரு இனங்களிலும் உள்ள தீவிரவாத மற்றும் பின்னடைவை விரும்பும் சக்திகள் குறுகிய அரசியல் இலாபத்துக்காகத் தடைகளை ஏற்படுத்தி வருகின்றனர் அவர்கள் கடந்த இரண்டு வருடங்களில் நாங்கள் கண்டுள்ள முன்னேற்றங்களை பிடிவாதமாக ஏற்றுக்கொள்ள மறுத்து வருகின்றனர். நாங்கள் அளவுக்கதிகமாக செயற்பட்டு விட்டதாகவோ அல்லது எதனையும் செய்யவில்லை என்றோ வாக்குவாதம் செய்கின்றனர்.

2016 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 26 ஆம் திகதி நான் இங்கு உரையாற்றியதன் பின்னர், பலவந்தமாக காணமற்போதலில் இருந்து அனைவரையும் பாதுகாப்பதற்கான பன்னாட்டுப் பிரகடனத்தை அங்கீகரிப்பதற்கான அனுமதியை அமைச்சரவை வழங்கியுள்ளது. உத்தேச பயங்கரவாத தடைச்சட்டம் தொடர்பிலான கொள்கை மற்றும் சட்டக் கட்டமைப்பை உருவாக்கும் நடவடிக்கைகள் பன்னாட்டுத் தராதரங்களைப் பின்பற்றி முன்னெடுக்கப்படுகின்றன. காணாமற்போனவர்களுக்கான நிரந்தர அலுவலகத்தை ஏற்படுத்துவதற்கான சட்டவரைவு நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளரும் சிறுபான்மையினத்தவர்கள் தொடர்பான ஐக்கிய நாடுகளின் சிறப்பு அறிக்கையாளர்களும் அரசின் அழைப்பின் பேரில் இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டுள்ளனர்.

உண்மையை அறியும் ஆணைக்குழு குறித்த சட்டவரைவை அடுத்த இரண்டு மாதங்களுக்குள் அமைச்சரவையில் சமர்ப்பிக்க எண்ணியுள்ளோம். பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதிகிடைக்கச் செய்வது குறித்த எமது தீர்மானம் தொடர்ந்தும் உறுதியாக உள்ளது.

இலங்கையில் சித்திரவதைகள் தொடர்கின்றன என்ற குற்றச்சாட்டுகளை நாங்கள் தீவிரமாக எடுக்கும் அதேவேளை சித்திரவதைகளை சிறிதளவும் சகித்துக் கொள்வதில்லை என்ற கொள்கையை அரசு பின்பற்றுகின்றது என்பதை மீண்டும் வலியுறுத்துகின்றேன்.

சம உரிமை, நீதி, அனைத்து குடிமக்களுக்குமான மரியாதை, கௌரவம் இவற்றை உறுதிப்படுத்தி பல்லின, பலமத, பல மொழி இயல்பை வெளிப்படுத்துகின்ற ஒரு நாட்டை உருவாக்கத்தான் அரசமைப்பைத் தயாரிக்கின்றோம். தங்களுடைய வாழ்க்கையில் தாக்கத்தைச் செலுத்தக் கூடிய முடிவுகளை எடுப்பதில் மக்களே பங்களிக்கக் கூடியதாக உரிமையை அரசமைப்பு கொண்டிருக்கும். முரண்பாடுகள் திரும்பவும் உருவாகாமல் இருப்பதை உறுதியளிக்கும் விதத்தில் புதிய அரசமைப்பு இருக்கும்.

தேர்தலில் மக்கள் வழங்கிய ஆணையின் மூலமாகவும், எங்கள் பற்றுறுதியைக் கொண்டதுமான பயணத்தையே நாங்கள் எடுத்துக் கொண்டுள்ளோம். இந்தப் பாதை சவாலானது. இந்தப் பயணம் சில வெற்றிகளையும் அடைந்துள்ளது. பின்னடைவுகளையும் சந்தித்துள்ளது. இந்தத் தடைகள் மற்றும் தடங்கல்களையும் நாளாந்தம் சந்திப்பது யதார்த்தமாக இருந்தாலும் காலத்துக்கு காலம் வெவ்வேறு பாதைகளைத் தெரிவு செய்தாலும் அதனுடைய இலக்கும் பிரச்சினையைத் தீர்பதற்கான நோக்கமும் எந்த மாற்றமும் இன்றி அப்படியே இருக்கின்றது.

நிலைமாறு கால நீதிக்கு ஊடாக இதனைத் தீர்ப்பது என்ற எமது முடிவில் எந்த மாற்றமும் இல்லை. எங்களுடைய மக்கள் எங்களுடைய நண்பர்கள், பன்னாட்டுச் சமூகத்தில் உள்ள எங்களது பங்காளிகள், வெளிநாடுகளில் உள்ள இலங்கையர்களின் பொறுமை, புரிந்துணர்வு, இணக்கம் இவர்களுடைய நிலையான உறுதியான ஆதரவுடனும் முயற்சியுடன் நல்லிணக்க முயற்சிகளில் வெற்றி பெற முடியும் என்று நான் நம்புகின்றேன்.

முன்னேற்றகரமான ஒன்றிணைந்த சமூகமாக, அமைதியாகப் பணியாற்றக் கூடிய நாட்டை, சமூக பொருளாதார அபிவிருத்தி என்ற உயர்ந்த இலக்கை அடையக் கூடிய நாட்டைக் கட்டியெழுப்புவோம். சட்டத்தின் ஆட்சி, நீதி மனித உரிமைகளைப் பேணல், பன்மைத்துவத்தில் ஒருமைப்பாடு, செழிப்பான ஒரு நாட்டுக்கான உதாரணமாக இலங்கையை மினுமினுக்க வைக்க முடியும் என்று நம்புகின்றேன் என்றார் மங்கள சமரவீர. (வ-5)

## ஆசிரியரின்...

ருந்த 20 பவுண் நகைகள் திருடப்பட்டிருந்தன. ஆசிரியர் சம்பவம் தொடர்பில் பருத்தித்துறைப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தார். வீட்டின் பின்புறக் கதவைப் பிரித்து திருடர் உள்ளே சென்றுள்ளனர் என்று விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

பொலிஸார், தடயவியல் பிரிவு பொலிஸார் மோப்ப நாய் சகிதம் ஆசிரியரின் வீட்டில் விசாரணைகளை முன்னெடுத்தனர். எவரும் கைது செய்யப்படவில்லை. விசாரணைகள் தொடர்கின்றன என்று பொலிஸார் தெரிவித்தனர். (வ-4-26)

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?




**மேடம்:** பிறரைக் குறை சொல்ல வேண்டாம். வீடு, வாகன வகையில் திடீர் செலவு உண்டாகும். தொழில், வியாபாரத்தில் எதிர்பாராத குறுக்கீடு வரலாம். பணியாளர்களுக்கு சலுகை கிடைப்பதில் தாமதம் உண்டாகும்.


**இடபம்:** நீண்டநாள் எதிர்பார்ப்பு நிறைவேறும். தொழில், வியாபார வளர்ச்சியால் வருமானம் அதிகரிக்கும். பணியாளர்கள் பதவி உயர்வு கிடைக்கப் பெறுவர். பெண்கள் ஆடை, ஆபரணம் வாங்குவர்.


**மிதுனம்:** நற்செயலில் ஈடுபட்டு புகழ் பெறுவீர்கள். தொழில், வியாபாரத்தில் கூடுதல் பணவரவு கிடைக்கும். பணியாளர்கள், பணியிடத்தில் செல்வாக்கு காண்பர். வீடு, வாகனத்தில் நவீன மாற்றம் செய்வீர்கள்.


**கடகம்:** மனதில் குழப்பம் ஏற்பட்டு மறையும். தொழிலில் விடாமுயற்சி தேவைப்படும். அளவான பணவரவு கிடைக்கும். பணியாளர்கள் பணிச்சுமைக்கு ஆளாக நேரிடலாம். பெற்றோரின் அன்பும், ஆசியும் ஆறுதல் அளிக்கும்.


**சிங்கம்:** எதிர்பார்ப்பு நிறைவேற பொறுமை அவசியம். தொழிலில் உள்ள குறைகளை பிறரிடம் விவாதிக்க வேண்டாம். பணவரவு சுமாராக இருக்கும். இஷ்ட தெய்வ வழிபாட்டில் ஈடுபடுவது நல்லது.


**கன்னி:** உறவினரின் அன்பும், ஆதரவும் கிடைக்கும். தாமதமான பணியை புதிய உத்தியால் நிறைவேற்றுவீர்கள். தொழில், வியாபாரத்தில் எதிர்பார்த்த லாபம் வரும். பெண்கள், பிள்ளைகளின் நலனுக்காகப் பாடுபடுவர்.


**துலாம்:** சிறிய பணியையும் நேர்த்தியுடன் செய்வீர்கள். தொழில், வியாபாரத்தில் அமோக வளர்ச்சி ஏற்படும். பணவரவும், நன்மையும் அதிகரிக்கும். மாமன், மைத்துனருக்கு உதவுவீர்கள்.


**விருச்சிகம்:** பிறரது விமர்சனத்தை பொருட்படுத்த வேண்டாம். தொழிலில் நிலுவைப் பணி நிறைவேற்றுவது நல்லது. லாபம் சுமாராக இருக்கும். பணியாளர்கள் பணி விடயமாக வெளியூர் செல்வர்.


**தனுசு:** பேச்சில் தற்பெருமை வெளிப்படும். தொழில், வியாபாரத்தில் உருவாகிற இடையூறை தாமதமின்றி சரிசெய்வது நல்லது. அளவான வருமானம் கிடைக்கும். பெண்கள், குடும்ப ஒற்றுமையைக் காப்பது நல்லது.


**மகரம்:** பரந்த மனப்பான்மையுடன் செயற்படுவீர்கள். நல்லவர்களின் அறிமுகமும், நட்பும் கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் எதிர்பார்த்த ஆதாயம் கிடைக்கும். பெண்கள் ஆடை, ஆபரணம் வாங்குவர்.


**கும்பம்:** நற்செயலில் ஈடுபட்டு புகழ் பெறுவீர்கள். தொழில், வியாபார வளர்ச்சியால் வருமானம் அதிகரிக்கும். பணியாளர்கள் சலுகை கிடைக்கப் பெறுவர். பெண்களுக்கு, சகோதர வழியில் உதவி வந்து சேரும்.


**மீனம்:** அவமதித்தவரும் அன்பு பாராட்டி மகிழ்வர். தொழில், வியாபார வளர்ச்சியால் புதிய சாதனை படைப்பீர்கள். வருமானம் பன்மடங்கு உயரும். பெண்கள் குடும்ப வளர்ச்சிக்கு மகிழ்வர்.

## சுடோக்கு

### எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 7 | 3 | | 5 | | | | |
| 5 | | | | | | 8 | 7 | |
| | 6 | | | 7 | | | | 5 |
| | | 4 | 1 | | | | | 7 |
| | 5 | | 9 | 4 | 6 | | 1 | |
| 3 | | | | | 7 | 6 | | |
| 2 | | | | 8 | | | 4 | |
| | | 5 | | | | | | |
| | | | | 9 | | 7 | 8 | |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 4 | 8 | 5 | 3 | 2 | 1 | 7 | 6 | 9 |
| 1 | 9 | 3 | 6 | 7 | 5 | 4 | 8 | 2 |
| 6 | 7 | 2 | 4 | 8 | 9 | 5 | 1 | 3 |
| 7 | 5 | 6 | 1 | 3 | 2 | 9 | 4 | 8 |
| 2 | 1 | 8 | 9 | 5 | 4 | 3 | 7 | 6 |
| 9 | 3 | 4 | 7 | 6 | 8 | 2 | 5 | 1 |
| 3 | 6 | 1 | 5 | 9 | 7 | 8 | 2 | 4 |
| 5 | 2 | 9 | 8 | 4 | 6 | 1 | 3 | 7 |
| 8 | 4 | 7 | 2 | 1 | 3 | 6 | 9 | 5 |

சுடோக்கு

ஒரு எண் விளை யாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல் தான் இதன் அடிப் படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண் டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனைய வற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005 இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

## ரஜினியின் '2.0' படத்தை காப்புறுதி செய்தார் ஷங்கர்





ஷங்கர் இயக்கத்தில் ரஜினி நடித்து வரும் படம் '2.0'. இதில் ரஜினியின் ஜோடியாக எமிஜாக்சன் நடிக்கிறார். வில்லனாக ஹிந்தி நடிகர் அக்ஷய்குமார் நடிக்கிறார். லைக்கா புரொடக்ஷன்ஸ் நிறுவனம் இந்தப் படத்தை ரூ.400 கோடி(இந்திய ரூபா) செலவில் பிரமாண்டமாகத் தயாரித்து வருகிறது. இது இந்தியாவில் அதிக செலவில் தயாராகும் படம் என்பது குறிப்பிடத்தக்கது. எனவே இந்தப் படத்தை ரூ.350 கோடிக்கு (இந்திய ரூபா) தயாரிப்பு நிறுவனம் காப்புறுதி செய்துள்ளது. படப்பிடிப்பின்போது ஏற்படும் விபத்துக்கள், உயிரிழப்பு, படப்பிடிப்பு பொருள்கள் சேதம் போன்றவற்றுக்கு இந்தக் காப்புறுதி மூலம் இழப்பீடு பெறமுடியும். அண்மையில் வேறு சில படங்களுக்காக இடம்பெற்ற படப்பிடிப்பின்போது, தீவிபத்து, உயிர் இழப்பு போன்றவை ஏற்பட்டுள்ளன. இது போன்ற பிரச்சினைகளால் ஏற்படும் இழப்புக்களை ஈடுகட்டவே இந்தப் படம் காப்புறுதி செய்யப்பட்டு இருப்பதாகத் தயாரிப்புத் தரப்பில் கூறப்படுகிறது.

சி.ஆர்.சரஸ்வதி: வெளிநாட்டு மருத்துவர்கள் பொய் சொல்ல மாட்டார்கள்




இது என்னடா புது புரளியா இருக்கு... அப்போ உள்நாட்டு மருத்துவர் பொய் சொல்லுவாங்களா?

எங்க தாத்தா கடைசியா பேசின வார்த்தைகளை என்னால மறக்க முடியல...! ஏன்? என்ன சொன்னார்...?



டேய்! ஏணிய ஒழுங்காத்தானே புடிச்சிருக்க....

எவன் ஒருவன் தன் பலம் அறிந்தும் போராடாமல் இருக்கிறானோ. அவனை இந்த உலகம் பிச்சை எடுக்க வைக்கிறது...!



வாய் எதுக்கும்மா? பேசுறதுக்கு டா தங்கம்!



வாம்மா... வந்து எங்க மிஸ் கிட்ட நல்லா சொல்லும்மா... எப்பப்பாரு, கிளாஸ்ல பேசாத பேசாதனு திட்டுறாங்க...

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

# போராடி வென்றது கே.ஸி.ஸி.ஸி.

யாழ்ப்பாணம், மார்ச் 1
யாழ்ப்பாண மாவட்ட கூடைப்பந்தாட்டச் சங்கம் தனது அங்கத்துவக் கழகங்களுக்கு இடையில் நடத்தும் கூடைப்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற பெண்கள் பிரிவு ஆட்டமொன்றில் கே.ஸி.ஸி.ஸி. அணி போராடி வெற்றிபெற்றது. கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில், சுன்னாகம் சிவன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கே.ஸி.ஸி.ஸி. விளையாட்டுக் கழக அணி மோதியது. இதில் கே.ஸி.ஸி.ஸி. விளையாட்டுக் கழக அணி 54:51 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்றது.
(ம-23)

# கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், மார்ச் 1
வடமராட்சி வலய உடற்கல்வி ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல் இன்று இடம்பெறவுள்ளது.
வடமராட்சி வலய முகாமைத்துவ மண்டபத்தில் பிற்பகல் 2 மணிக்கு இடம்பெறவுள்ள இந்தக் கலந்துரையாடலில் வலயமட்ட மெய்வன்மைப் போட்டிகளின் ஒழுங்கமைப்புத் தொடர்பாகவும், மாகாண மட்ட, தேசிய மட்டப் போட்டிகள் தொடர்பாகவும் பரிசீலிக்கப்படவுள்ளதால் சகல உடற்கல்வி ஆசிரியர்களையும் கலந்துகொள்ளுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் சி.புஸ்பலிங்கம் அறிவித்தார்.
(ம-108)

## கபடித் தொடர் இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், மார்ச் 1
வடமராட்சி வலயப் பாடசாலைகளுக்கு இடையிலான கபடிப் போட்டிகள் உடுப்பிட்டி மகளிர் கல்லூரி மைதானத்தில் இன்று புதன்கிழமையும் நாளை வியாழக்கிழமையும் நடைபெறவுள்ளன. ஆண்களுக்கான ஆட்டங்கள் இன்றும், பெண்களுக்கான ஆட்டங்கள் நாளையும் இடம்பெறவுள்ளன. (ம-108)




# யாழ். பிரதேச கால்பந்து சென். மேரிஸ் சம்பியன்

யாழ்ப்பாண பிரதேச செயலக பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான கால்பந்தாட்டத் தொடரில் நாவாந்துறை சென். மேரிஸ் அணி சம்பியனானது.
யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் நேற்று இடம்பெற்ற இறுதியாட்டத்தில் பாசையூர் சென். அன்ரனிஸ் அணியை எதிர்த்து நாவாந்துறை சென். மேரிஸ் அணி மோதியது. ஆட்டத்தின் 23 ஆவது நிமிடத்தில் முதல் கோலைப் பதிவுசெய்தார் சென். அன்ரனிஸின் டனி. வேறெந்தக் கோல்களும் முதல் பாதியின் முடிவுவரை பதிவாகவில்லை.
இரண்டாம் பாதியின் 18 ஆவது நிமிடத்தில் ஜக்சன் மேரிஸின் முதல் கோலைப் பதிவுசெய்தார். 25 ஆவது நிமிடத்தில் நிதர்சன் மற்றுமொரு கோலைப் பதிவுசெய்ய முடிவில் 2:1 என்ற கோல் கணக்கில் சென். மேரிஸ் அணி வெற்றிபெற்று சம்பியனானது. மதி சிறந்த வீரனாகத் தெரிவானார்.
(ம-23)

# இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், மார்ச் 1

*வல்வை வி.க. கால்பந்தாட்டம்*

வல்வை விளையாட்டுக் கழகம் நடத்தும் அணிக்கு 7 வீரர்கள் பங்குபற்றும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று புதன்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறும் முதலாவது ஆட்டத்தில் கரவைச் சுடர் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து கொற்றாவத்தை சிவானந்தா விளையாட்டுக் கழகமும் மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் கரவெட்டி நவசக்தி விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து கரணவாய் கொலின்ஸ் விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளன.

*நெடியகாடு இளைஞரின் இரண்டாவது அரையிறுதி*

வல்வெட்டித்துறை நெடியகாடு இளைஞர் விளையாட்டுக் கழகம் வடமாகாண ரீதியாக நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் இரண்டாவது அரையிறுதி ஆட்டம் குறித்த கழக மைதானத்தில் இன்று இரவு 8 மணிக்கு இடம்பெறவுள்ளது. இதில், மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து ஜோசவ்வாஸ் நகர் ஐக்கிய அணி மோதவுள்ளது.

*சரஸ்வதி வி.க. கால்பந்தாட்டம்*

உரும்பிராய் சரஸ்வதி விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் உரும்பிராய் இந்துக்கல்லூரி மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று புதன்கிழமை பிற்பகல் 3.45 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் யாழ்ப்பாண போதனா வைத்தியசாலை அணியை எதிர்த்து குறிஞ்சிக்குமரன் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. மாலை 4.45 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் ஆனைக்கோட்டை யூனியன் அணியை எதிர்த்து நாவற்குழி அன்னை விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.



*யாழ். மாவட்ட கூடைப்பந்து*

யாழ்ப்பாண மாவட்ட கூடைப்பந்தாட்டச் சங்கம் தனது அங்கத்துவக் கழகங்களுக்கு இடையில் நடத்தும் கூடைப்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் கொக்குவில் இந்துக்கல்லூரியின் கூடைப்பந்தாட்டத் திடலில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று புதன்கிழமை மாலை 4.30 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில், ஜமகா விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து சுன்னாகம் சிவன் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.
(ம-108,23)

# கிளிநொச்சி மாவட்ட சதுரங்கத் தொடர்கள்



கிளிநொச்சி, மார்ச் 1
கிளிநொச்சி மாவட்டச் சதுரங்கச் சங்கத்தால் கிளிநொச்சி மாவட்ட ரீதியில் எதிர்வரும் 4ஆம், 5 ஆம் திகதிகளில் தொடரொன்று நடத்தப்படவுள்ளது.
கிளிநொச்சி மகா வித்தியாலயத்தில் காலை 8.30 மணி முதல் போட்டிகள் நடைபெறவுள்ளன. 9 வயது, 11 வயது, 13 வயது, 15 வயது, 17 வயது, 19 வயது, 19 வயதுக்கு மேற்பட்டோர் என்ற வயதுப்பிரிவுகளில் இருபாலாருக்குமாக தனித்தனிப் பிரிவுகளாக போட்டிகள் நடைபெறவுள்ளன. போட்டியில் கலந்துகொள்ள விரும்பும் மாணவர்கள் தமது பெயர் விவரங்களை பாடசாலை ஊடாகவும், நேரடியாகவும் நாளைக்குள் பதிவுசெய்யுமாறு ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.
(ம)

# விக்ரோறியா கல்லூரி கிண்ணம் வென்றது

யாழ்ப்பாணம், மார்ச் 1
வலிகாமம் கல்வி வலயத்துக்கு உட்பட்ட பாடசாலைகளுக்கு இடையிலான எல்லே தொடரில் பெண்கள் பிரிவில் சுழிபுரம் விக்ரோறியா கல்லூரி அணி சம்பியனானது.
வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற இறுதியாட்டத்தில் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி அணியை எதிர்த்து சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணி மோதியது.
முதலில் துடுப்பெடுத்தாடிய சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி அணி நிர்ணயிக்கப்பட்ட 25 பந்துகளில் 8 இலக்குகளை இழந்து 4 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக கலைமதி 2 ஓட்டங்களையும், திவாஜினி, சபிதா இருவரும் தலா ஓர் ஓட்டத்தையும் பெற்றனர்.
பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணி 25 பந்துகளில் 8 இலக்குகளை இழந்து 3 ஓட்டங்களை மாத்திரம் பெற்றதை அடுத்து, ஓர் ஓட்டத்தால் திரில் வெற்றிபெற்றுச் சம்பியானது விக்ரோறியா. மாதுரிகா 2 ஓட்டங்களையும், விஜி ஓர் ஓட்டத்தையும் பெற்றனர். (ம-422)





பாசையூர் சென். அன்ரனீஸ் விளையாட்டுக் கழகத்தால் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட கழக நிலையம் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை மாலை 5 மணிக்கு யாழ். மறை மாவட்ட ஆயர் ஜஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகையால் திறந்து வைக்கப்பட்டது. கழக நிலையத்தின் மேல்மாடிப் பகுதியை நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் திறந்து வைத்தார். இந்த நிகழ்வில் இலங்கை கால்பந்தாட்ட சம்மேள னத்தின் செய லாளர் அன்ரனி பாலேந்திரா, உபதலைவர் பீரிஸ், நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா, வடமாகாண அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம், வடமாகாண சபை உறுப்பினர்களான பரஞ்சோதி, சுகிர்தன், கஜதீபன், சிவாஜிலிங்கம், ஆனல்ட் ஆகியோரும் கலந்துகொண்டனர். (ம-23)

# டெஸ்ட் அரங்கில் மீண்டும் மலிங்க

*கிரஹம் போர்ட்டின் விருப்பம்*

இலங்கை அணியின் வேகப்பந்து வீச்சாளர் லசித் மலிங்க, மீண்டும் டெஸ்ட் ஆட்டங்களில் களமிறங்க வேண்டும் என்று அந்த அணியின் பயிற்சியாளர் கிரஹம் போர்ட் விருப்பம் தெரிவித்தார்.

தொடர் காயங்கள் மற்றும் உபாதைகள் காரணமாக கடந்த ஒன்றரை வருடங்களுக்கும் மேலாக பன்னாட்டு ஆட்டங்களில் களமிறங்காமல் விலகியிருந்தார் மலிங்க. ஆஸ்திரேலியாவுக்கு எதிராக அண்மையில் நடைபெற்று முடிந்த தொடரில் மலிங்க விளையாடினார். தொடரையும் இலங்கை அணி 2:1 என்று கைப்பற்றியது. மலிங்கவும் சிறந்த பெறுபேற்றை வெளிப்படுத்தினார். இந்த நிலையில் டெஸ்ட் ஆட்டங்களிலும் அவர் திரும்ப வரவேண்டும் என்ற விருப்பத்தை போர்ட் வெளிப்படுத்தினார்.

உலகின் ஆகச் சிறந்த வேகப்பந்து வீச்சாளர்களில் ஒருவரான மலிங்க, காயங்களில் இருந்து மீண்டு வந்துள்ளமை மகிழ்ச்சி அளிக்கிறது. அவரது வருகையின் மூலம் இலங்கை அணி மட்டுப்படுத்தப்பட்ட ஆட்டங்களில் பலமானதாக உருவெடுக்கும். மலிங்க டெஸ்ட் ஆட்டங்களிலும் களமிறங்க வேண்டும் என்பதே எனது விருப்பம். அவ்வாறு களமிறங்கினால் டெஸ்ட்டிலும் இலங்கை வலுப்பெறும் என போர்ட் மேலும் தெரிவித்தார். (ம)



# சிறந்த தலைவராக தெரிவானார் கோக்லி

இந்திய அணியின் தலைவரான கோக்லி, கிரிக்இன்போ இணையத் தளத்தால் கடந்த வருடத்தின் சிறந்த தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார்.

கோக்லி தலைமையில் இந்திய அணி கடந்த ஆண்டில் 12 டெஸ்ட் ஆட்டங்களில் விளையாடி 9 வெற்றிகளைக் குவித்தது. இதனாலேயே அவர் சிறந்த தலைவராகத் தெரிந்தெடுக்கப்பட்டார்.

சிறந்த டெஸ்ட் வீரராக இங்கிலாந்தின் சகலதுறை வீரர் பென் ஸ்ரோக்ஸ் தெரிவாகினார்.

இங்கிலாந்து அணியின் வேகப்பந்து வீச்சாளர் புரோட் டெஸ்ட்டின் சிறந்த பந்துவீச்சாளராகத் தெரிவானார். தென்னாபிரிக்க அணியின் வேகப்பந்து வீச்சாளர் டேல் ஸ்ரெய்ன்



ஆரம்பத்தில் முன்னிலையில் இருந்த போதிலும், காயம் காரணமாக அவர் விலகியதை அடுத்து புரொட் அவர் இடத்தைப் பிடித்துக் கொண்டார்.

ஒருநாள் ஆட்டங்களின் சிறந்த துடுப்பாட்ட வீரராக தென்னாபிரிக்க அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் குயின்டன் டி ஹொக்கும், பந்து வீச்சாளராக மேற்கிந்தியத் தீவுகளின் சுனில் நரைனும் தெரிவாகினர்.

ரி-20 ஆட்டங்களின் சிறந்த வீரராக மேற்கிந்தியத் தீவுகளின் கார்லோஸ் பிராத்வைட்டும், சிறந்த பந்து வீச்சாளராக பங்களாதேஷின் ரகுமானும் தெரிவாகினர்.

பங்களாதேஷ் அணியின் சுழற்பந்து வீச்சாளர் மெகதி ஹசன் சிறந்த அறிமுக வீரராகத் தெரிவானார். (ம)

# இறுதி நிமிடத்தில் மெஸ்ஸி அபாரம்




ஸ்பானியக் கழகங்களுக்கு இடையிலான பழைமை மிகுந்த தொடரான லாகலிகா தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் பார்சிலோனா அணி வெற்றிபெற்றது.

பார்சிலோனாவை எதிர்த்து அத்லெட்ரிகோ மட்ரிட் அணி மோதியது. இரு அணிகளும் பெரும் போராட்டத்தை வெளிப்படுத்தின. ஆனால், எந்த அணியாலும் தனித்து ஆதிக்கம் செலுத்த இயலவில்லை. கோல் கணக்கு இல்லாமலேயே முடிவுக்கு வந்தது முதல் பாதி. இரண்டாம் பாதியின் 64 ஆவது நிமிடத்தில் பார்சிலோனா அணியின் ரபின்கா முதல் கோலைப் பதிவுசெய்தார். ஆனால் பார்சிலோனாவின் ஆதிக்கம் நீண்டு செல்லவில்லை. அடுத்த ஆறாவது நிமிடத்திலேயே அத்லெட்ரிகோ மட்ரிட்டின் தியாகோ பதில் கோலைப் பதிவுசெய்து 1:1 என்றாக்கினார்.

ஆட்டம் நிறைவடைய இரண்டு நிமிடங்கள் எஞ்சியிருந்த நிலையில் பார்சிலோனா அணியின் வெற்றிக்கோலைப் பதிவுசெய்தார் மெஸ்ஸி. முடிவில் 2:1 என்ற கோல் கணக்கில் பார்சிலோனா அணி வெற்றிபெற்றது. (ம)

# மட்ரிட் தொடர்ந்தும் முதலிடம்



லா லிகா தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் வெற்றி பெற்று புள்ளிப்பட்டியலில் தொடர்ந்தும் முதலிடத்தில் உள்ளது ரியல் மட்ரிட்.

மட்ரிட்டை எதிர்த்து வில்லாரியல் பலப்பரீட்சை நடத்தியது.

கோல்கள் இல்லாமல் முடிவுக்கு வந்தது முதல் பாதி. ஆட்டத்தின் 50 ஆவது நிமிடத்தில் டிரிகரஸும், 56 ஆவது நிமிடத்தில் பகாம்புவும் கோல்களைப் பதிவுசெய்து மட்ரிட்டுக்கு அதிர்சி வழங்கினர்.

ஒரு கட்டத்தில் 0:2 என்று பின்தங்கியிருந்தது மட்ரிட். 64 ஆவது நிமிடத்தில் மட்ரிட்டின் முதல் கோலைப் பதிவுசெய்து நம்பிக்கையை விதைத்தார் பேல். 74 ஆவது நிமிடத்தில் ஜாம்பவான் ரொனால்டோவால் கோல் பதிவானது. 83 ஆவது நிமிடத்தில் மொறாட்டோ கோலொன்றைப் பதிவுசெய்ய முடிவில் 3:2 என்ற கோல் கணக்கில் ரியல்மட்ரிட் அணி திரில் வெற்றிபெற்றது. (ம)

## உடனடி வேலைவாய்ப்பு
IIS CITY CAMPUS

**வரைகலை வடிவமைப்பாளர்**
(GRAPHIC DESIGNER)

கணினி மென் பொருள்களை பயன்படுத்தி விளம்பரம் சுவரொட்டி, கையேடுகள், பதாகைகள் வடிவமைப்பில் ஆற்றலும்முன் அனுபவமும் உள்ளவர்கள் வேண்டப்படுகின்றார்கள்.

ஆர்வமுள்ளவர்கள் நேரடியாக அலுவலகத்துடன் தொடர்பு கொள்வதன் மூலம் உங்கள் நேர்முக தேர்வுக்கான முற்பதிவுகளை மேற்கொள்ளுங்கள்.

**தொடர்புகளுக்கு 0717775666, 0212228060, 0214900900**

மனிதவள முகாமையாளர்
IIS CITY CAMPUS
200, சிவன் பண்ணை வீதி, யாழ்ப்பாணம்.

## Everest Export Company

March 01,02,03 ஆம் திகதிகளில் காலை 10மணி முதல் மாலை 02 மணி வரை No.179, Hospital Road, Jaffna எனும் முகவரியில் பலதரப்பட்ட தொழில்வாய்ப்புக்கான நேர்முகத்தேர்வுகள் இடம்பெறவுள்ளன.

O/L Or A/L தகைமை உடையவர்கள் உடனடியாகத் தொடர்பு கொள்ளவும்.

Call Time: 07.30a.m - 06.00p.m

**076 864 3505/ 077 517 9034**

## உடனடி வேலைவாய்ப்பு

DYNAMIC ORG PVT இன் புதிதாக திறக்கப்படவுள்ள கிளைகளில் வெற்றிடங்கள் (வவுனியா, கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு, யாழ்ப்பாணம்)

நேர்முகத்தேர்வின் மூலம் தெரிவு செய்யப்படுவர்.

கவர்ச்சிகரமான சம்பளம், குறைந்த தகைமை O/L முன் அனுப வம் தேவையில்லை.

**077 664 4442, 077 230 2795**

---

இம்முறை தனயோகம் உங்களுடையதா?
28.02.2017 | 2102 | நீலம்

வெற்றி இலக்கங்கள்
12 21 26 32

வெள்ளிக்கிழமை வெற்றிப்பொதி
ரூ 11, 214, 101/=

2017.03.03 ஆம் திகதி வெள்ளிக்கிழமை சிறப்பு நிற டிக்கட்டுக்களாகும்.
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>LW என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.

---

கோடீபதி

சீட்டிழுப்பு வாரம்: 106
வர்ணம் : இளஞ்சிவப்பு
சீட்டிழுப்பு திகதி: 28.02.2017

அடுத்த வெள்ளிக்கிழமைக்கான ஜக்பொட்
ரூ. 77,656,712/-

ஆங்கில எழுத்து மற்றும் இலக்கங்கள்
F 14 31 39 64

தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>JY என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.

---

உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம்: 544 வர்ணம்: மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி: 28.02.2017

வெற்றி இலக்கங்கள்
51 54 60 64 A

அடுத்த வெள்ளிக்கிழமைக்கான ஜக்பொட்
ரூ. 23,114,451/-

தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>JY என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.

---

## SPOKEN ENGLISH
WITH DIPLOMA CERTIFICATE

இம்முறை O/L எழுதியோர், இளைஞர், யுவதிகள், தொழில் தேடுவோர், வெளிநாடு செல்வோர் உயர்கல்வி மாணவர்கள் இணைய முடியும்.

ஆங்கிலத்தில் ஓரெழுத்துத்தெரியாதவர்கள்கூட மூன்றே மாதங்களில் சரளமாக ஆங்கிலத்தில் பேசமுடியும்!

சனி, ஞாயிறு பிரிவுகள் ஆரம்பம் – 04.03.2017

| | | | |
|---|---|---|---|
| 1. காலை | 08.00-10.00 | 3. பி.பகல் | 01.00-03.00 |
| 2. காலை | 10.00-12.00 | 4. மாலை | 03.00-05.00 |

1. வாரநாள் பிரிவுகள் : (திங்கள், புதன்) காலை 8-10 காலை 10-12
2. வாரநாள் பிரிவுகள் : (செவ்வாய், வியாழன்) காலை 8-10 காலை 10-12

SAAMSON
Experts in English Training
279, ஆஸ்பத்திரி பின்புறம், யாழ்நகர்.
021 320 3313
077 1570 486

---

## கிறிஸ்ரியானோ றொனால்டோ லா லிகாவில் புதிய சாதனை

ஸ்பானியக் கழகங்களுக்கு இடையிலான லா லிகா தொடரில் ரியல் மட்ரிட் அணியின் நட்சத்திர வீரரான றொனால்டோ புதிய சாதனையைப் படைத்தார்.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற வில்லாரியல் அணிக் கெதிரான ஆட்டத்தில் 3:2 என்ற கோல் கணக்கில் ரியல் மட்ரிட் வெற்றிபெற்றது. பெனால்டி வாய்ப்பொன்றைக் கச்சிதமாகப் பயன்படுத்தி றொனால்டோ கோலொன் றைப் பதிவுசெய்தார். இந்தக் கோலின் மூலம் லா லிகா தொடரில் பெனால்டி வாய்ப்பில் அதிக கோல்களைப் பதிவுசெய்தவர் என்ற சாதனையை றொனால்டோ படைத்தார். பெனால்டியில் மட்டும் இதுவரை 57 கோல்களை றொனால்டோ பதிவுசெய்தார்.

ரியல் மட்ரிட் அணியின் முன்னாள் வீரர் ஹியுகோ சான்செஸ் 56 கோல்களைப் பதிவு செய்தமையே இதற்கு முன்னர் சாதனையாக இருந்தது. றொனால் டோவின் கடும் போட்டியாளரான மெஸ்ஸி 43 கோல்களுடன் ஐந்தாவது இடத்தில் உள்ளார். (ம)

---

## புதிய பிரிவுகள் ஆரம்பம்

வங்கியியல் கற்கை நெறிகள்
**Banking Courses**
IABF & DABF
(Tamil & English Medium)
Qualification: G.C.E. O/L 6Passes with 5 credits

கணக்காளர் கற்கை நெறிகள்
**Chartered Courses**
Executive Level & Business Level
(Tamil & English Medium)
Qualification: G.C.E. A/L 3 Passes

Further Details:
Jaffna College
Undergraduate Dept.
464, Hospital Road,
Jaffna.
021 222 3382 /
021 222 9149

---

## யாழ்ப்பாணத்தில்......
## திறமையின் தேடல்

ஊடகத்துறையில் உள்நாட்டிலும் சர்வதேசத்திலும் அங்கீகரிக்கப்பட்ட டிப்ளோமா சான்றிதழை பெற்றுக் கொடுக்கும்.

## Dip.in Mass Media

தயாராகுங்கள்...



இலங்கையிலும், சர்வதேசத்திலும் துடிப்பு மிக்க ஓர் அறிவிப்பாளராக வெற்றியடையுங்கள்.

**3 - Months**

வயதெல்லை கிடையாது.

- வானொலித்துறை
- செய்தித்துறை
- பத்திரிகைத்துறை
- ஒலிப்பதிவுத்துறை
- விளம்பரத்துறை

**ஊடகத்துறையில் ஒரு புதிய பரிணாமம்.**

பதிவுகளுக்கு முந்துங்கள்.

BRC BRITISH ROYAL COLLEGE
20, Kannathitty Lane, Jaffna.
(New Science Hall அருகில்)
T: 021 492 7456 M: 071 432 5002

---

## மரண அறிவித்தல்



### திருமதி யோகேஸ்வரி கருணாநிதி

காரைநகர், கோவளத்தைப் பிறப்பிடமாகவும், 194, பிறவுண் வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி யோகேஸ்வரி கருணாநிதி நேற்று (28.02.2017) செவ்வாய்க்கிழமை சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையாபிள்ளை-வள்ளியம்மை தம்பதிகளின் அன்பு மகளும், சரவணமுத்து-சரஸ்வதி தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற கருணாநிதியின் அன்பு மனைவியும், தயாநிதி (கொழும்பு), தயாபரன் (சூரியன் களஞ்சியம் - யாழ்ப்பாணம்), தயாநந்தினி (லண்டன்), தயாளன் (நாராயணா ஹாட்வெயார்), தயாநந்தன் (சூரியன் களஞ்சியம்) ஆகியோரின் அன்புத் தாயாரும், பரராஜசிங்கம் (நாராயணா ஹாட்வெயார்), வாசுகி, சிவராசா (லண்டன்), கஜந்தினி ஆகியோரின் அன்பு மாமியாரும், மயூரி, மஞ்சரி, கோபிநாத், கஜீவன், அனோஜன், அபிஷன், மதுரன், மிதுரா, மதுரா, சங்கவி, சஞ்சனா, அபிஷனா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (02.03.2017) வியாழக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் காலை 8 மணியளவில் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

194, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
**குடும்பத்தினர்.**

**0212227044**

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 01.03.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.